இலக்கிய இயல் அ, ஆ

செந்தமிழ் இலக்கியச் செம்மல்,
நூலறி புலவர்,
டாக்டர் ந. சஞ்சீவி எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
டிப். மானிடவியல்,
டிப். அரசியல்-ஆட்சியியல்.
தமிழ்த்துறைத் தலைவர் - பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை.

11/7/74

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்
சென்னை-8

தமிழ் உறவு—79
முதற்பதிப்பு, சூன் 1974
(C) உரிமை-பதிவு

தமிழக முதல்வர்
மாண்புமிகு
டாக்டர் கலைஞர் அவர்கள்
பொன்விழா (1974 சூன்) வெளியீடு

விலை ரூ. 7/-

வெளியிட்டோர் :
தமிழ் எழுத்தாளர்
கூட்டுறவுச் சங்கம்
லிமிடெட் X-417
8, சின்ன ரெட்டித் தெரு
எழும்பூர், சென்னை-8

அச்சிட்டோர் :
மெட்ரோபாலிட்டன் பிரிண்டர்ஸ்,
சென்னை-2.



அன்பு மாணவர்கட்கு

சிந்தித்தேன் என்றல் சிரிப்பன்றோ !
—திருவருட்பா - சிவநேச வெண்பா-7
தவத்திரு ஊரனடிகள் பதிப்பு, 1972 பக். 386

பதிப்புரை

தமிழ் எழுத்தாளர்களின் சொந்த முயற்சியால் அவர்கள் நலன்களைக் காக்க, அவர்கள் நடத்தி வருவது தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம். இச் சங்கம் இதுவரை தமிழ் உறவு என்னும் வெளியீட்டு முத்திரையின் கீழ் 78 தமிழ் நூல்களை வெளியிட்டுள்ளது. பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி எழுதியுள்ள இலக்கிய இயல் அ. ஆ என்னும் இந் நூல் 79 ஆவது வெளியீடாகும்.

வரிப்படங்கள் வாயிலாக இலக்கிய ஆய்வுத் துறையின் அடிப்படைகளை டாக்டர் ந. சஞ்சீவி இந்நூலுள் விளக்கப் புகுகிறார். இது ஒரு புதிய முயற்சி. இலக்கிய ஆர்வலர்களோடு இலக்கியம் பயிலும் மாணவர்க்கும் இந் நூல் உதவியாக இருக்கவேண்டும் என்ற கருத்துடன் பல பல்கலைக் கழகங்களின் இலக்கிய ஆய்வுத் தொடர்பான பாடத்திட்டங்கள், வினாத்தாள்கள் முதலின இந் நூலில் இணைக்கப் பெற்றுள்ளன.

இலக்கிய ஆய்வுத்துறையில் ஒரு திருப்பமாக அமையவல்ல இந் நூலை ஆர்வலர்களும் மாணவர்களும் வாங்கிப் பயனடைய வேண்டுகிறோம். தமிழ் எழுத்தாளர்கள் தன்னம்பிக்கையுடன் தமது இலக்கிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு தமிழர்களும் நூலகங்களும் தமிழக அரசும், அரசுச் சார்புடைய நிறுவனங்களும் தமிழ் உறவு நூல்களைப் பெருமளவில் வாங்கி ஆதரிக்க வேண்டுகிறோம்.

சென்னை
3-6-74

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத்தார்

அகவுரை

(1)

உள்ளம் அள்ளும் உணர்வுகள் கொள்ளும் உயிருருவமே கலை. அவ்வுலகின் அரசியாய் அணிசெய்வது இலக்கியக் கலை. ஓவியனுக்குக் கோடும் சிற்பிக்குக் கல்லும் போல புலவனுக்கு மூலப் பொருளாய் அமைவது சொல்; சொல்—ஒலி. சொல் சொல் என்று சொல்லிச் சொல்லி அது ஒலி என்பதைப் பெரிதும் மறந்து விட்டோம். இப்போதாவது-இனியாவது- அதை நினைவிற் கொள்வோமாக!

ஒலியே சொல் என்று ஓதியதும் ஒலிக்கும் உணர்வுக்கும் உள்ள உறவு நினைவுக்கு வரல் இயற்கை; இனிது. உணர்வுக்கும் ஒலிக்கும் உள்ள உறவே மொழியின் (ஆதி) மூலம். காரணப் பெயர் என்று நாம் கொண்டாடுவன வற்றுள்ளும் மிகமிகப் பெரும்பாலனவற்றின் ஒலி மூலக் காரணம் இன்னும் நம் மூளையில் ஒளி காணவில்லை. அவ்வளவு அறப் பழையது மொழி; அதிலும் நம் தாய்மொழி தமிழ். 'தமிழ்' என்ற ஒலி மூலக்காரணம் காண முயன்றாலே இவ் வுண்மை விளங்கும்.

ஒலி மூலம் மறந்தாலும் ஒலிப்பொருளை மறக்க முடியுமோ? மறப்பின் உலகியல் வாழ்வேது? நினைப்பே உலகியல் வாழ்வு!

நினைப்பின்-(முனைப்பின்) - மறப்பின் விளைவே வாழ்க்கை. இதைச் சொல்லோவியமாக்கிக் காட்டுவதே இலக்கியம். சொல்லென்றால் - ஒலி - உணர்வு என்பது உடனே நினைவிற்கு வருக! வந்தால் சொல்லோவியம் ஒலி - உணர்வு ஓவியம் என்பது விளங்கும்.

உணர்வு > ஒலி > சொல்

இவ்வோவியம் - இலக்கியம் - இயல் இயன்ற முறையைக் கூறிட்டுக் கூறுவதே - வகை தொகை செய்து வரிப்படங்கள்

(Diagrams) வாயிலாக விளக்குவதே - இவ்வெளிய நூலின் புதிய-பெரிய - நோக்கம்.

(2)

படங்கள் வாயிலாகப் பாடங்களை விளக்குவதும் விளங்கிக் கொள்வதும் எளிது; இனிது.

மிக அண்மையில் (மே, 1974) புகழ் பெற்ற Span இதழில் மூளையின் விந்தை பற்றிய ஒரு படக்கட்டுரை (Picture-essay) வந்துள்ளமை காண்க.

என் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய நாஞ்சில் நாட்டுப் பெருமக்கள் அவ்வை - தி(ருக்).க(ண்). சண்முகம், பி. எஸ். மணி முதலியோரின் நல்லுறவினரும் என் நண்பருமாகிய நரம்பியல் பேரறிஞர் - பெருமருத்துவர்- டாக்டர் ஈ. மீனாட்சிசுந்தரம், எம்.டி., ஒரு சில திங்கள்கட்கு முன்பு Nervous System by Frank H. Netter, M. D., Vol. I (The CIBA Collection of Medical illustrations, 1962) என்றொரு நூலை எனக்கு நண்பராக்கினார். இவ்வகை நண்பர்களை எனக்கு என் குடும்ப மருத்துவர் டாக்டர் கோ. கோபால்ராஜ், எம்.டி., [சங்க நூல்களைப் பற்றிக் கேட்டும் அறியாதிருந்த சாமிநாத ஐயருக்கு அவற்றை அறிமுகம் செய்து வைத்த சேலம் இராமசாமி முதலியார் பேரர் (பெயரர்)] முன்னமே பழக்கம் செய்து வைத்திருந்த போதும் அவர்கள் (அந் நூல்கள்) எனக்கு நண்பர்களாய் இருப்பதினும் ஆசிரியர்களாய் இருப்பதற்கே ஏற்றவர்களாய் இருந்தார்கள். காரணம் அவர்கள் பெரிதும் படம் போடாமலே பாடம் சொல்லிக் கொடுத்தார்கள்! ஆனால் டாக்டர் மீனாட்சிசுந்தரம் அவர்கள் தந்த புத்தகமோ படவழி மருத்துவப் பாடம் புகட்டும் நூல். அந்நூலின் ஆசிரியர் Frank H. Netter, M. D., அவர்களே அந் நூலில் உள்ள அத்தனைப் படங்களையும் வரைந்த ஓவியர்.

இந்தப் புத்தகத்தைக் கண்டதும் எளிய வரைபடங்கள் வாயிலாக அரிய திறனாய்வுக் கருத்துகளை விளக்கவேண்டும் என்று நான்காண்டுகட்கு முன்னே எழுந்த என் ஆவல் சரி

யானது என்றே என் உள்ளம் உறுதி கொண்டது. இத்தகைய கலை உத்தியை முதன் முதல் யான் கற்றதும் காதலித்ததும் 1970 ஆம் ஆண்டு மைசூரில் நடைபெற்ற கோடை மொழியியல் - மொழியியல் கோடை - வகுப்பிலேயே!

'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளக் கிடைத்த குளிர் தரு' போன்ற இவ்வரி பட விளக்க முறையை யான் 1970-71 முதல் சென்னைப் பல்கலைக் கழக முதுகலைத் தமிழ்க் கூட்டு வகுப்புகளில் கையாளத் தொடங்கிய போது முறுவலும் கண்டேன்; முணுமுணுப்பும் கண்டேன்; கேட்டேன். முன்னதற்குக் காரணம் புத்தறிவார்வம்; பின்னதற்குக் காரணம்.........? ஆனால் ஒரு சில திங்கள் களுக்குள்ளேயே முணுமுணுப்பும் முறுவலாகியது! இப்போதோ இலக்கிய இயலையும் அறிவியலாக்கும் புது வழியில் அனைவர்க்கும் அளவிலாக் காதல்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் என்பால் பயின்ற முதலணி முதுகலைத் தமிழ் மாணவர்களிடம் இரண்டாம் ஆண்டின் இறுதி வகுப்பில் 'யான் வரைந்த வரிப் படங்களை யாரேனும் தொகுத்து உதவுங்கள்' என்று வேண்டினேன். (காரணம் பல வரிப் படங்களை வகுப்பிலேயே அவ்வப் போதே யான் வரைவது வழக்கம். என் விளக்கவுரைகட்கு வரிப்படங்களே வழி [காட்டிகள்] ஆகிவிட்டன). என் வேண்டு கோளை ஏற்று மறுவகுப்பிலேயே செல்வி டி. எஸ். சத்தியம் வரிப்படத் தொகுப்பினை எழுதித் தந்தார். அவ்வாறு ஆர்வமுடன் அவர்கள் செய்த அம் முயற்சியிலும் எனக்குப் பேருவகை தந்தது, அவர்களே அத்தொகுப்பிற்கு இட்ட "கோடும் கொள்கையும்' என்ற அழகிய பெயரே. நான்பட்ட பாடெல்லாம்—நான் பாட்டும் நன்பட்டிற்காகப் பட்ட பாடெல்லாம் — அவர்கள் தந்த அந்தத் தலைப்பைக் கண்டதும் 'சான்றோன் எனக் கேட்ட' தாயின் நிலையை எனக்குத் தந்தது. ஆம். என் மகளார் என்னைத் 'தாய்' ஆக்கினார்கள்!

வரிப்பட வழியில் என்னினும் ஆர்வம் கொண்ட இன்னொரு முதலணி முதுகலைத் தமிழ் மாணவ நண்பர்

திரு. கு. மோகனராசு, பி. எசி., எம். ஏ. அவர்கட்கும் இதில் அவர் 'தம்பி' திரு. க. வேங்கடேசன் எம். ஏ. அவர்கட்கும் இது போது என் நல்வாழ்த்துகள்.

(3)

எனக்கு அறிவுத் தந்தை பேராசிரியர் டாக்டர் மூ. வ. (அரசியல் தந்தை மாண்புமிகு சிலம்புச் செல்வர்). அண்மைக் காலத்தில் எனக்கும் கடைக்கண் காட்டுவோர்களுள் ஒருவர் ஆங்கிலப் பெரும் பேராசிரியர்—நடமாடும் இலக்கியம்—பண்பாட்டின் தண்ணமுதம்- டாக்டர் கே. ஆர். சீனிவாச ஐயங்கார்; மற்றொருவர் வடமொழிப் பேராசிரியர்—ஆட்சிக் கலை வல்லுநர் (ஆம். ஆரியத்திலும் காரியத்திலும்)—திரு. பெ. திருஞானசம்பந்தம். மும்மொழிப் பேராசிரியர்கள் மூவரும் 'பூ' வென்றுது தம் அணிந்துரைகளால் இப்புல்லி-தழ்ப் பூவைப் பொற்பூ ஆக்கியுள்ளார்கள்! காக்கும்-கடவுள் பெயர் கொண்ட பெருமக்கள் இருவர்க்கும் 'நாளும் இன்னிசையால் தமிழ்ப் பரப்பிய' நாயனாரின் திருப் பெயர் தாங்கிய அறிஞர்க்கும் என் தலை தாழ்த்திய வணக்கங்கள்.

(4)

இதயம் ஈர்க்கும்; கலை கவரும்; உறவு ஒன்று படுத்தும். இந்நூலுள் உள்ள கட்டுரைகள் யாவும் 'இலக்கிய இதயம்' படைத்த என் நண்பர் திரு. க. சோமசுந்தரம் நன்முயற்சியால் தனிச் சிறப்புகளுடன் நடைபெறும் 'தமிழ் உறவி'ல் இடம் பெற்றவை. உண்மையை உரைத்தால் 'தமிழ் உறவு' காரணமாகவே இந்நூல் உடலும் உயிரும் ஒரு சேரப் பெற்றுள்ளது. இல்லையேல் நாடாப் பதிவு வசதி இல்லாத பல்கலைக்கழக வகுப்பில் நிகழ்த்திய பேச்சுகள் 'செத்தே' போயிருக்கும்! (சிந்தனை ஓவியமாகிக் கருத்தோவியங்களை வரையும் ஆசிரியர்களின் சொல்லோவியங்களை அப்போதே—அப்படியே—பதிவு செய்யும் வசதிகளைப் பல்கலைக் கழகங்கள் செய்து தரும் நாள் எந்நாளோ? இந்நாள் அதன் பெரும் பணுவெல்லாம் தேர்வுகள் நடத்துவதே அல்லவா?) என்னையும் ஒரு பொருளாய் ஏற்றுக் கொண்டு கலைவளர்க்கும்

காவலர்க்கு—ஆய்வு ஆக்கும் அன்பர்க்கு—என்றென்றும் என் நன்றி நிறைந்த வணக்கங்களும் வாழ்த்துகளும்.

தனியுடைமை அழிவே—பொதுவுடைமை ஆக்கமே—அனைத்து ஊழல்களையும் அழிக்கும்; அனைத்து அறங்களையும் ஆக்கும். அதுவரை கூட்டுறவே நாட்டுயர்வுக்கு.

எனவே, தமிழ்ப் புத்தக வெளியீட்டாளர்—விற்பனையாளர் உலகில் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கமே எனக்குத் தில்லை; திருவரங்கம். அத்தகைய அமைப்பு ஆய்வுலக ஆண்டிப் பண்டாரமாகிய எனக்குக் கொடுத்துதவிய கடனுக்கு எழுமையும் கடன்பட்டுள்ளேன். (திருப்பித் தந்து(த்) விடுவேன் ஆயினும்!)

(5)

இந்நூல் முன்னர்க் கட்டுரைகளாகவும் இப்போது நூலாகவும அச்சாகிய போது ஒப்பு நோக்கிப் பிழைதிருத்தங்கள் செய்துதவிய என் நண்பர்கள் திரு. இ. சுந்தரமூர்த்தி, எம். ஏ., திரு. வ. செயதேவன், பி. எசி., எம். ஏ., திரு. வீ ஞானசிகாமணி, எம். ஏ., திரு. அ. நாகலிங்கம், எம். ஏ. ஆகியோருக்கும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் பழைய விளுத்தாள்கள் கிடைக்க உதவிய திரு. க. ப. அறவாணன், எம். ஏ., எம். லிட்., அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி.

நூலகமே நெஞ்சமாகக் கொண்டுள்ள சென்னைப் பல்கலைக் கழக நூலகர்—உழைப்பின், ஒழுக்கத்தின், உண்மையின் உருவம் திரு. பி. ஏ. மோகனராசு அவர்களின் ஆதரவால் உருவாகியதே இந் நூலின் இறுதியில் உள்ள 'கற்கத் தக்கன' பட்டியல். நூலகரின் பெயரே கொண்ட டாக்டர் பட்ட ஆய்வு மாணவர் திரு. கு. மோகனராசு, பி. எசி., எம். ஏ., சான்றிதழ் - மானிடவியல், அவர்கள் இப்பட்டியல் உருவாக உறுதுணை புரிந்தார்கள். ஒரு பெயர் கொண்ட இவர்கள் இருவருக்கும் என் உளமார்ந்த நன்றி உரியது.

இந் நூலின் வாழ்வுக்கு மட்டுமன்றி என் வாழ்வு நூலுக்கும் காரணமாக உள்ள என் மனைவியார் பேராசிரியை திருமதி கிருட்டிணு சஞ்சீவி, எம்.ஏ.,எல்.டி. அவர்கட்கு...?

(6)

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தம் காலத்திலேயே தாம் எடுத்து உந்த (எடுத்து உவந்த) இலக்கியத் திறனாய்வு வகுப்பு களைத் தன் கடை மாணாக்கனாகிய என்னை எடுக்கச் செய்து வந்த (செய்து உவந்த) இந்நாள் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர் களையும் என்பால் அன்பால் அதிகமாக 'அடித்தும்' மெதுவாக 'அணைத்தும்' வேலை வாங்கும் இந்நாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கல்வி நெறிக்காவலர்—தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களையும் வணங்குவது நாளும் என் வேலை.

ஆராய்ச்சிப் பணி ஒன்று தவிர வேறு எப்பணியும் எப்போதும் விரும்பாச் சிறு துரும்பாகிய யான் புறஞ்சொல் முதலிய புயற்காற்றால் புதைந்து போகா வண்ணம் 'இதுவும் பல்குத்த உதவும்' என்று அன்பால் என்பால் இன்பால் அருட்கண் காட்டி வரும் செந்தமிழ்க்காவலர் தமிழக முதல்வர்—மாண்புமிகு கலைஞர் அவர்கட்கும் அவர் தலைமை பெற்ற அமைச்சரவைக்கும் என் வாழ்த்துகளும் வணக்கங்களும்.

இறுதியாகவும் உறுதியாகவும் இலக்கிய இயலை நாட்டவர் இதய இயலாகவும் மாற்ற அடியேன் எழுத் தாலும் பேச்சாலும் கட்டுரைகளாலும் கருத்தரங்குகளாலும் முயன்று வரும் முயற்சிகளை எல்லாம் எப்போதும்—பல்கலைக் கழகப் பேரவைகளிலும்—மயக்கமும் தயக்கமும் இன்றிப் போற்றிவரும் சிலம்புச் செல்வர்—தாமரைச் செல்வர்—மாண்புமிகு தமிழக மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சி. அவர்கட்கு மைந்தனின் மனம் நிறைந்த நன்றியும் வணக்கங் களும்.

இலக்கியம் வாழ்க! இலக்கிய இயல் வளர்க! வெல்க!

ந. சஞ்சீவி

3—6—1974

(மாண்புமிகு கலைஞர் பொன் விழா நாள்)

அணிந்துரை

பேராசிரியர்—டாக்டர் மு. வரதராசனார்
துணை வேந்தர்,
மதுரைப் பல்கலைக் கழகம்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந் நாட்டில் தொல்காப்பியனாரும் மேலை நாட்டில் அரிஸ்டாட்டிலும் வளர்த்த ஒரு துறை இலக்கியத் திறனாய்வு ஆகும். அது இக்காலத்தில் விரிவும் விளக்கமும் பெற்று நன்கு வளர்ந்து வருகிறது. 'இலக்கிய இயல்' என்னும் இந்நூல் இத்துறையில் வளம் ஊட்ட வந்துள்ளது மகிழத்தக்கது.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் இத்துறையில் நிரம்பிய ஆர்வம் உள்ளவர். இந்நூலில் அவர் அறிவியலும் உணர்வியலும் பற்றித் தந்துள்ள விளக்கங்கள் கற்றுக் களிக்கத் தக்கன. போலச் செய்தல் எவ்வாறு கலைகளின் தோற்றுவாய்க்கு உதவியது என்பதும் நன்கு எடுத்துரைக்கப் பெற்றுள்ளது. தமிழிலக்கணத்துள் பொருள் பெற்றுள்ள சிறப்பிடமும் நூலாசிரியரால் திறம்பட விளக்கப்பட்டுள்ளது. கலைஞர் தம்மை இழந்தும் பிறர்க்காக அரியன படைத்து அளிப்பவர் என்ற உண்மையும் இன்னோரன்ன பிறவும் தெளிவாக்கப்பட்டுள்ளன. பகுப்பும் தொகுப்புமாகப் பலவற்றை விளக்குகையில் வரைபட முறையைக் கையாண்டு ஆங்காங்குத் தெளிவுறுத்திச் செல்லுதல் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது.

இலக்கிய ஆய்வில் ஈடுபாடு கொண்டோர் அனைவரும் வரவேற்கத்தக்க நல்ல நூல் இது.

மு. வரதராசன்
மே, 1974

FOREWORD

By

Professor Dr. K. R. SRINIVASA IYENGAR
Former Vice-Chancellor, Andhra University,
Vice-President, Sahitya Akademy.

Dr N. Sanjeevi, who heads with distinction the Department of Tamil Studies in the University of Madras, has already several books and learned papers to his credit. His interests are wide-ranging, and he brings to his writing the discipline of hard-headed research as well as the clarity that flows from close conceptual analysis. While he is steeped in ancient and modern Tamil literature and his commitment to the culture of the Tamils is unswerving, he is no parochialist. The world's richest veins of thought have a fascination for him, and he would, if he could, integrate the seminal findings of the latest Western research with what is perennial in the Tamil heritage.

In his latest book, **Ilakkiya Iyal**, Dr. Sanjeevi's laudable aim is to outline a scientific approach to the art of literary creation and literary appreciation. It may appear that there is little in common between science and art which are sustained respectively by the reasoning intellect and the play of feeling or imagination. But it is the way of wisdom both to differentiate between things and to infer the deeper filiations between them. While it is convenient to demarcate the diverse continents of knowledge, it would not do to forget what Dr. Sanjeevi imagines might one day come to be known as "the Faculty of Fundamentals".

In the course of fourteen short chapters, Dr. Sanjeevi takes the reader step by step, from the more familiar to the less, from the less difficult to the more, till at last he is led to the heart of the mystery in almost the last pages of the book. Twain are our eyes; they can see separately, yet usually they focus together. They give us the near vision, enabling us to see the microscopic, and the far vision too, revealing the distant stars and the Milky Way It would be strange if this inbuilt resilience and range of apprehension were not meant to be exercised in other fields as well.

Dr. Sanjeevi rightly describes Thought and Feeling - Science and the Humanities—Knowledge and Art—as mankind's two eyes. The human intellect, in its desperate attempt to seize and size up the universe, employs the strategies of classification and quantification. Books are no doubt the storehouses of knowledge, but one needs the right keys — and passwords — to unlock the treasuries. Science gives us news or knowledge of the phenomenal world, but art touches it up with feeling's warmth and imagination's glow. Poetry is not to be dismissed as mere "imitation", as something second-hand and hence expendable. Actually, the "lie" of poetry is Truth doubled with Feeling and Form. If there is a grammar of literary art made up of orthography, phonology, semantics, prosody and rhetoric, there is also the complementary grammar of human life made up of politics, economics, sociology, aesthetics and moral science; and it is most gratifying that the literature of knowledge in Tamil has been of late growing these dimensions as well. The classical Tamil categories of **aham-puram** and **aram-porul-inbam-veedu** may thus be seen to acquire new formulations in the modern context. While the images of literature seem to be 'fiction", they are "Supreme fiction" (as Wallace Stevens calls them), or, as Dr. Sanjeevi suggestively remarks

they are verily "life's phonemes" that bring out the deeper reality behind the surface appearances. The cardinal marks of such great literature are a living freshness, a purifying exaltedness, a stir of universality or the capacity to appeal to the "common reader", and also an intimation of Truth's profundities.

Born of nature and nurture, of experimental and experiental knowledge, of book-learning and intuitive understanding, litreature concerns itself with the mystic balance or poise of Truth and with the elusive realm of Ends and Means; and while it explores, and trafficks in, the hidden unknown of the iceberg, while its quarry is the invisible god as well as the invisible devil, ultimately great literature aspires (or should aspire) towards a condition of wholeness and wholesomeness. All life, all literature, all spiritual experience is a more or less sustained progress from superficial and disperate understanding to knowledge by identity and integral realisation. The poet sees more, and farther, and more completely and finally, than others. Hence poetry is the light of the deeper truth, it is sheer revelatory power. Through the five senses one progresses in the understanding of the universe made up of the five primordial elements; earth, water, fire, wind, sky. It is, however, when the human soul (the microcosm) leaps through the senses and establishes an equation with the universe (the macrocosm), it is only then that real understanding by identity dawns atlast and integral realisation becomes possible. Hence the poet's supreme gift of vision is the revelation of the indwelling unity behind the phantasmagorial diversity of phenomenal life. In his brilliant final chapter, Dr. Sanjeevi derives 'ilakkiyam' and 'ilakkanam' from 'ilakku' or 'what reveals', and shows how in the highest flights of poetry, the oneness behind the multiplicity

is affirmed again and again This is more than poetry, it is vision and recordation; it is the unfreezing of the congealed sensibilities of purblind humanity entrapped in the avidya of egoistic separativity.

This impressive structure of dialectic is presented with the aid of numerous diagrams, citations from Tamil classics, and references to contemporary thinkers. Critical theory on scientific lines is still rather a virgin field in Tamil, and there is need to deploy new technical terms or use old terms with new shades of meaning. Dr. Sanjeevi walks the razor's edge of the developing argument with an aplomb all his own, and he often uses words in different connotations in order to squeeze out the last drop of significance. There is accordingly an athletic quality about the book, which is coupled with its general tone of high seriousness. Altogether it is an admirable guide to the study of literature, especially Tamil literature and I have no doubt it will stimulate appreciative comment and intelligent and fruitful discussion. I would like in conclusion to hail the book as a pioneering grammar of Literary Criticism and Appreciation in Tamil, at once scientific in its organisation and redolent of the spirit of of the great heritage of the Tamil.

91, Kutchery Road,
Mylapore
30—5—1974

K. R. Srinivasa Iyengar

வாழ்த்துரை

பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தன், எம்.ஏ.,
(முன்னாள் வடமொழிப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி)
சென்னை.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் துடிப்புடன் செயலாற்றும் தமிழறிஞர். அவர்கள் இலககியப் படைப்புகள் தரம் உள்ளவை. இன்று 'இலக்கிய இயல்' வெளி வருகின்றது. இதில் இலக்கியத்தைப் பல கோணங்களில் அவர் ஆராய்ந்திருப்பதைப் பார்க்கிறோம். வகுத்தும் தொகுத்தும் இலக்கிய வகைகளை ஆய்வு செய்துள்ளார். புதுமையான முறையில் வரைபடங்களைக் கொண்டு தம் கருத்துக்களை விளக்க முயன்றிருக்கிறார். உள நூலைப் பின்னணியில் கொண்டு சில விளக்கங்களைத் தந்திருக்கிறார். கலை, அறிவியல், மெய்ப் பொருளியல் ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பு, இலக்கியத்தின் இலக்கு, அகத்திணை, புறத்திணை ஆகியவை புதுக் கோணத்தில் ஆராயப் பெற்றுள்ளன. புது முயற்சியை வரவேற்கிறோம். வாழ்த்துகிறோம்.

பெ. திருஞானசம்பந்தன்
31—5—74

இயலின் இயல் — I

1	பதிப்புரை	IV
2	அகவுரை	V
3	அணிந்துரை—டாக்டர் மு.வ.	1
4	Foreword —டாக்டர் கே. ஆர். சீனிவாச ஐயங்கார்	2
5	வாழ்த்துரை —பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தம்	6

இயலின் இயல் —

		பக்கம்
1.	இருசுடர்ப் பெருவிழிகள்	9
2.	வகை தொகை வளம்	15
3.	படிப்படியாகப் படித்தல்	22
4.	எவர்? எதை? எப்படி? எப்போது? ஏன்?	29
5.	ஐந்திலக்கணத் தமிழ்	36
6.	பொருள் தமிழின் புதுமுகங்கள்	43
7.	புதுமுகங்களின் புதுப் பொலிவுகள்	50
8.	இலக்கியங்கள் — வாழ்க்கையின் ஒலியன்கள்	57
9.	புதுமை—பெருமை—பொதுமை—பொருண்மை	62
10.	இலக்கியக் குழந்தையின் தாயும் தந்தையும்	67
11.	அளவின் அளவுகள்—ஆய்வும் தோய்வும்	73
12	நிறை—மறை—குறை	78
13.	தெரி4	84
14.	இலக்கியத்தின் இலக்கு	91

இணைப்புகள்

I	இலக்கிய இன்பம் : வட்டங்கள் காட்டும் வளர்ச்சி	
II	இலக்கிய வடிவங்கள் மாறுவதற்குரிய காரணங்கள்	12

III சென்னைப் பல்கலைக் கழகம் :
பாடத்திட்டம் (கட்டாயம்)

IV ,, ,, (விருப்பப் பாடம்)

V சென்னைப் பல்கலைக் கழகம் : வினாத்தாள்கள்

VI ,, ,, ,,

VII அண்ணாமலைப் பல்கலைக் கழகம் : பாடத்திட்டம்

VII (அ) அண்ணாமலைப்பல்கலைக் கழகம் : வினாத்தாள்கள்

VIII மதுரைப் பல்கலைக் கழகம் : பாடத்திட்டம்

IX (அ) திருவேங்கடவன் பல்கலைக்கழகம் :
பாடத்திட்டம்

(ஆ) கேரளப் பல்கலைக்கழகம் : பாடத்திட்டம்

X இலக்கியத் திறனாய்வும் பேச்சுத் தமிழும்

XI எழுதவிருக்கும் கட்டுரைகளின் கரு. தலைப்புகள்

XII ஆங்கில நூற்பட்டியல்

XIII தமிழ் நூற்பட்டியல்

XIV திறனாய்வுத் தேன்

XV [illegible]

1

இருசுடர்ப் பெரு விழிகள்

1

இயல் என்னும் சொல் இந்நாளில் பலராலும் அறிவியல் (Science) என்ற பொருளில் வழங்கப் பெறுகிறது. இலக்கியம் முழுவதுமாக அறிவியல் அன்று. ஆயினும், அது அறிவியல் கூறுகள் கொண்டது; அறிவியல் கூறுகள் பலவற்றிற்கு இலக்கியமாக இலங்குவது. எனவே, இக்கட்டுரைத் தொடரில் இலக்கியக் கலையை அறிவியல் கலைக் கண் கொண்டு ஆராயும்—விளக்கப் படங்கள் வாயிலாக விளக்கும்—கன்னி முயற்சி மேற்கொள்ளப் படுகிறது. இம்முயற்சி யில் இலக்கிய இயலும் அவ்வியலோடு தொடர்புடைய பொருள்களும், துலக்கும் அடிப்படைகளுமே தலைமையாக ஆராயப் பெறும். காரணம் இக்கட்டுரையாளன் உலகத்துப் பல்கலைக் கழகங்கள் யாவும் வருங்காலத்தில்

அடிப்படையியல் என்னும் புதியதொரு துறையை (Faculty of Fundamentals) தோற்றுவித்துப் போற்றி வளர்க்கும் என்னும் உறுதி கொண்டிருப்பதே ஆகும்.

2

முதலில் நாம் காணத்தக்கது அகிலாண்டத்தில் மனிதனுக்கு உரிய இடம் எது என்பது. பொருள்களை உயிர் உள்/இல்பொருள்கள் என இருவகையாக்கிடலாம். அவற்றுள் உயிருள் பொருள்களையும் இரண்டே வகையாகப் பகுத்தறியலாம். ஒரு வகை பகுத்தறிவுடைய மனிதன்; மற்றொரு வகை பகுத்தறிவற்ற பிற எல்லா வகை உயிர்களும்.

உலகம்
- உயிருள்ளன
- உயிரில்லாதன

உயிர் உலகம்
- பகுத்தறிவற்றன (மனிதன் அல்லாதவை)
  - அஃறிணை
- பகுத்தறிவுள்ள மனிதன்
  - உயர் திணை

3

இனி, அடிப்படையில் மனிதனை அறிஞன், கலைஞன் என்று இரு கூறாக்கி விடலாம். ஏன எனில் அறிவும் உணர்வுமே மனிதனின் இரு கண்களாக இலங்குகின்றன. இந்த அடிப்படையில் உலகத்துக் கலைகள் அனைத்தையும் அடிப்டையில் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம்.

4

அறிவு, உணர்வு — இரண்டனுள் உணர்வே உயர்ந்தது. இது குறித்து ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே குறள் பட்டிமன்றம் ஒன்று வைத்துத் தீர்ப்பும் வழங்கியுள்ளார் திருவள்ளுவர்.

"அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதினோய்
தன்னோய்போல் போற்றாக் கடை?" (315)

எனவே, அறிவும், உணர்வும் இன்றியமையாதன— உடலும் உயிரும் போல; மண்ணும் விண்ணும் போல.

இனி அறிவியல், உணர்வியல் இரண்டையும் பொதுவாகக் கலை என்று கூறினும், (கலைக் களஞ்சியம் போன்ற வழக்கில்) Science—அறிவியல் என்றும், Humanities— உணர்வியல், கலையியல், மனித இயல் என்றும் வழங்கப் பெறுகின்றன. ஆனால், அறிவியலைக் கலையாகவும் காண அறிஞர் விழைவது போல, கலையையும் அறிவியலாகக் காணக் கலைஞர் விழைவது இயல்பு. ஆண்மைக்குப் பெண்மையும், பெண்மைக்கு ஆண்மையும் தேவைதானே! கோவலனுக்குக் கண்ணகியின் கற்புவீரமும் கண்ணகிக்குக் கோவலனின் கலைவீரமும் இருந்தால் தவறா? இளங்கோவின் 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' போல இன்னொருவளங்கோவின் 'கருத்தைக் கவரும் கழலதிகாரம்' கிடைக்காதா?

5

அடிப்படை மனிதன் அறிஞனாகவும் கலைஞனாகவும் இருக்கிறான் எனக் கண்டோம். ஒரு வகையில் அறிஞனாகச் சுடரும்போது கலை அவன் நிழலாகவும், கலைஞனாக அவன் ஒளிரும்போது அறிவு அவன் நிழலா

கவும் அமைந்து விடுகின்றன எனலாம். இலக்கியத்திற்கு உணர்வே ஒளி; அறிவு நிழலே. அறிவே ஒளியாகவும் உணர்வு நிழலாகவும் விளங்கும் அறிவியல் நூல்களில் கலைகள் உண்டு. வழிவிலக்காக அறிவே நிழலாகவும் உணர்வே ஒளியாகவும் விளங்கும். அறிவியல் இலக்கியங்களும்- அறிவியல் நாவல்கள் (Science Fiction) போன்றவை, அறிவே ஒளியாகவும் உணர்வே நிழலாகவும் அமைந்த கலை நூல்களும்—இலக்கியத் திறனாய்வு நூல்கள் (Work of Literary criticism) போன்றவை ஏற்படக்கூடும். எனவே பண்பின் மிகுதி கருதி, காரணப் பெயர்களாக அமைவனவே இவ்வியற் பெயர்கள்!



6

இனி இலக்கிய இயலின் அரும் பெருஞ்சிறப்பு இலக்கிய இயல் எல்லாக் கலை இயல் ஆறுகளும் கலக்கும் ஒரு பெருங்கடலாய் ஒலிக்கும் ஒலியே ஆகும்.

முதலாவதாக அடிப்படை அறிவியல் துறைகளை எண்ணுவோம். அவை 1. பௌதிகவியல்; 2. வேதியியல்; 3. நிலவியல்; 4. புவியியல்; 5. கடலியல்; 6. விண்ணியல்; 7. உயிரியல்; 8. பயிரியல்; 9. விலங்கியல்; 10. மனித உடலியல்; 11. மருத்துவவியல்; 12. கணக்கியல்; 13. பொறியியல்; 14. மொழியியல்; 15. சொல்

பொருளியல்; 16. நூலகவியல்; 17. அளவையியல் ஆகும். இப்பட்டியலையும் இதுபோன்று இக்கட்டுரையில் மேலே தரப்படும் பட்டியலையும் படித்த அளவிலேயே இத்துறைகட்கு உரிய செய்திகள் பல தொன்மைத் தமிழ் இலக்கியம் முதல் இன்றைத் தமிழ் இலக்கியம் வரை பலவற்றுள்ளும் பரவிக் கிடப்பதை ஆராய்ச்சியாளர் உணர்வர்,

இனி, அறிவியலாகவும் ஆக்கப்பெறும் உணர்வியல் துறைகளுள் அடிப்படையான சிலவற்றைக் கருதுவோம். அவை 1. அரசியல்; 2. பொருளியல்; 3. சமூகவியல்; 4. சட்டவியல்; 5. பொறியியல்· 6. அளவையியல்; 7. சமயவியல்; 8. மெய்ப் பொருளியல்; 9. உளவியல்; 10. மானிடவியல்; 11. வரலாற்றியல்; 12. இசையியல்; 13. நாடகவியல்; 14. ஓவியவியல்; 16. கல்வியியல்.

இவ்விரு பட்டியல்களுள்ளும் காணப்படும் துறைகள் முப்பத்திரண்டில் பழைய முறைப்படிப் பார்த்தால் 'ஆய கலைகள் இருபத்து நான்குள்' தோய்ந்து பாய்ந்து வரும் பல்தலை ஆறுகளின் முடிவிடமே இலக்கியக் கடல் எனலாம். இவ்வுண்மையை நன்கு உணர்ந்தாலே இலக்கியத்தின் பண்பும் பயனும். அருமையும் பெருமையும் தெளிவுற விளங்கும். விளங்கின் மேல் குறிப்பிட்ட பல்கலைகளின் அடிப்படை அறிவு இலக்கிய ஆராய்ச்சிக்கு இன்றியமையாதது என்பதும் புலனாகும். புலனாகின் இலக்கியத்தின் செறிவும் இலக்கிய ஆராய்ச்சியின் சிறப்பும் உணரப் பெறும். இவ்வுண்மை உணர்வு இலக்கியக் கல்விக்கும் இலக்கிய ஆராய்ச்சிக் கல்விக்கும் இன்றியமையாதது ஆகும். ஒரு வகையில் வாழ்க்கைப் பெருங்கடலிலிருந்து ஆவியாகி, கலைகளாகப் பொழியும் மழை நீரின் சேர்க்கையே இலக்கியக் கடல் எனலாம்.



அடிப்படை உண்மைகளுள் ஒன்று அறிவியலுக்கும், உணர்வியல் அல்லது கலையியலுக்கும் உரிய ஒரே அடிப் படை **நோக்கு** *என்பதே ஆகும். இதை விளக்கும் இன்னொரு விளக்கப் படம் வருமாறு:*



எண்ண விண்ணின் இருபெருஞ்சுடர் விழிகளாய்த் திகழும் அறிவு ஞாயிறும், கலைத்திங்களும் வாழ்க! வெல்க!

2

வகை தொகை வளம்

1

அறிவும் உணர்வும் மனிதனின் இரு கண்கள் என்றால், அறிவாராய்ச்சி முறையின் இரு கண்கள் வகையும் தொகையும் எனலாம். இந்த வகைதொகை பெற்ற வளமே—அறிவு ஆராய்ச்சி விளக்கம்.

ஆராய்ச்சி விளக்கம்	
வகை	தொகை

அடிப்படை இயலுக்கு இந்த வகைதொகை பாகுபாடு இன்றியமையாதன ஆதலைத் தொல்காப்பியரும், தொகை நூல் ஆசிரியர்களும், திருவள்ளுவரும் உணர்ந்

திருக்கும் திறமே திறம்! அந்நூல்களின் அமைப்பு முறையை ஆராய ஆராய இன்றைய அறிவியல் உலகம் தம் கண்ணெனப் போற்றும் வகையும் தொகையும் பழந் தமிழர்க்கு எவ்வளவு பழமையானது என்பது பளிச்சிடும். அவ்வளவு ஏன்? திறனற்றவனை 'வகைதொகை கெட்டவன்' என்று திட்டும் வசைத் தமிழும் இவ் வாய்மையை வலியுறுத்தும்.

2

இனி, இவ்வகைதொகைக் கண் கொண்டு நம்மொழி வழி இலக்கிய ஆராய்ச்சிக்குப் பயன்படும் சில அடிப்படை இணைகள் பற்றிய விளக்கப் படங்களைக் காணலாம்.

(அ)

மொழி

- எழுத்து → சொல்
- சொல் → பொருள்

எழுத்து < சொல்
சொல் > பொருள்

(ஆ)

எழுத்து

- உயிர்
- மெய்

(இ)

சொல்

- பெயர்
- வினை

(ஈ)

பொருள்

அகம் — புறம்

(உ)

யாப்பு

நேர் — நிரை

(ஊ)

அணி

தன்மை — உவமை

இந்த ஐவகை இணைகளும் மொழியின் ஐவகை இன்றியமையா அடிப்படைகளை எவ்வளவு அழகாகவும் எளிமையாகவும் விளக்குகின்றன!

3

இனி, இதே வகைதொகைக் கண்கொண்டு கவிதை, இலக்கியம், இலக்கிய ஆராய்ச்சி ஆகியவற்றின் அடிப்படைகளை அறிவிக்கும் சில இணைகளை விளக்கப்படங்கள் வாயிலாகக் காண்போம்.

கவிதை

சொல்	>	பொருள்
உருவம்	>	உள்ளீடு
உணர்ச்சி	>	உண்மை

இத்தகைய கவிதையை மணி முடியாய்—முடி மணியாய் — கொண்ட இலக்கியத்தை அதன் பயன்பாடு கருதி இருவகையாகப் பாகுபடுத்தலாம். அது வருமாறு:

இலக்கியம்

- ஒரு காலத்தன (Of the time)
- எல்லாக் காலத்தன (Of all times)

இவ்விருவகை இலக்கியத்தின் பயனும் இவ்வாறு:

இலக்கியப் பயன்

- உவகை (Enjoyment)
- உயர்வு (Enlightenment)

இன்பப் பண்பாம் உவகையையும், செம்மைப் பயனும் உயர்வையும் தரும் இலக்கியக் கலைக்கும் இணையிலா வாழ்க்கைக்கும் இடையே இலங்கும் இணைப்பை விளக்கும் இணைகளின் படம் வருமாறு:

இலக்கியம் (வாழ்க்கை)

- உணர்வு
  - (பண்பு) சுவை
    - கலை
- உண்மை
  - பயன் (உயர்வு)
    - வாழ்வு

கலையும் வாழ்வும் காட்டும் இலக்கியப் பயனை வேறு ஒரு வகையாகவும் கண்டு காட்டலாம்; களித்துத் தெரியலாம்.

இலக்கியப் பயன்

தூண்டுகோல் — ஊன்றுகோல்

இவ்விரு வகையில் ஊன்றுகோல் இலக்கியங்களே எல்லார்க்கும், எக்காலத்திற்கும் உரியன.

இத்தகைய இலக்கியக் கலையைத் துருவி ஆராயப் பயன்படுவதே இலக்கியத் திறனாய்வுக் கலை.

இக் கலையின் அடிப்படை இணைகளையும் பின்வரும் விளக்கப் படங்களால் விளக்க இயலும்.

இலக்கிய ஆய்வு

பொது — சிறப்பு

இவ்விளக்கப் படம் இயம்பும் செய்தி பொதுவாக இலக்கியப் பண்புகளையும் பயன்களையும் ஆராயலாம் என்பதும், குறிப்பிட்ட ஒரு நூல் அல்லது ஆசிரியரின் பண்புகளையும் பயன்களையும் சிறப்பாக ஆராயலாம் என்பதே ஆகும்.

இப்படி இருவகையாகவும் இலக்கியத்தை ஆராய்வார்க்கு இருக்கக்கூடிய நோக்கங்களும் இருவகை எனலாம்.

இலக்கிய ஆய்வு

துருவிக் காணல் (Analytical study) — பகுப்பாய்வு

துய்த்து மகிழல் (Appreciative study) — பாராட்டு ஆய்வு

இவ்விருவகை ஆய்வுள் அரியது—துன்பமானது—துருவிக் காணும் ஆய்வே ஆகும். எளியது—இன்பமானது—துய்த்தல் மகிழல். முன்னது மூளை முயற்சி நிறைந்தது, அருமை உடையது; பின்னது மூளை முயற்சி குறைந்தது, எளிமை உடையது. முன்னது முன்னதே; பின்னதே முடிவானது. பின்னது சிறக்கவே முன்னது. முன்னது சிறக்கச் சிறக்கப் பின்னதும் சிறக்கும். பாடும் பயனுமாய் விளங்கும் இவை இரண்டும் உயர் ஆராய்ச்சியாளரின் இரு விழிகள் ஆகும். ஒற்றைக் கண்ணர் வலியர் ஆயினும், வாழ்விற்கு அழகினர் ஆகார்.

இனி அரியதாம் துருவிக் காணல் முயற்சியிலும் ஓர் இணை இருத்தலை ஓரலாம். அது இது:

துருவிக் காணல்

உற்று நோக்கல் > ஒப்பு நோக்கல்

உற்று நோக்கல், சிக்கலை—வினாவைத் தோற்றுவிக்கும்; ஒப்பு நோக்கலோ சிக்கலை விடுவிக்கும்; வினாவிற்கு விடை தரும். ஆனால், இலக்கிய ஆராய்ச்சி ஒப்பு நோக்கலோடு அமையக்கூடாது. ஒப்பு நோக்கல், திறனாய்வு நாணயத்தின் இன்னொரு பக்கமாகிய உறழ்வு நோக்கல்—இரண்டும் இன்றியமையாதன. எனவே, எல்லா இணைகளையும் விளக்கக்கூடிய இன்னொரு வகை விளக்கப்பட வாயிலாக இவ்வுண்மையை நினைவில் நிறுத்தலாம்.

இலக்கிய ஆராய்ச்சி

ஒப்பு நோக்கு × உறழ்வு நோக்கு

ஒப்பு நோக்கோடு உறழ்வு நோக்கும் கொள்ளுதலால் விளையும் பயன்கள் பல. அவற்றுள் தலையாயது ஒவ்வொன்றின் தனிச் சிறப்பையும் உணர்தலே ஆகும். எடுத்துக்காட்டாகத் திராவிட மொழி—இலக்கியங்களை உறழ்வு நோக்கோடு காணின், தமிழ் மொழியின்—இலக்கியங்களின் தனிச் சிறப்புகள் பலவற்றை உணரக் கூடும்.

3

படிப்படியாகப் படித்தல்

1

எந்த ஒரு பொருளையும் கற்கும்போதும் படிப் படியாகக் கற்றுப் படிப்படியாகக் கற்பித்தலே முறை. அப்போதே அவை பாடம் (இருபொருளிலும்) ஆகும்! இம்முறையை மேற்கொள்வார் தம் அறிவாற்றலுக்கு ஏற்றவாறு கற்றலையும் கற்பித்தலையும் விரைவுபடுத்திக் கொள்ளலாம். அது வேறு. ஆனால், அதற்காகப் படிப் படியாக ஏறும்—இறங்கும் முறையை நெகிழ விட்டுக் குதித்தல் நன்றன்று. இது, இம்முறை பிறழ்வார் இடறி விழுந்து பெறும் ஏதங்களால் எளிதில் உணரத்தக்கது. மேலும், படிமுறையாக — முறைப்படியாக—கற்றலும் கற்பித்தலும் செரிப்பிற்கும் செறிப்பிற்கும் ஏற்றது. செரிக்கச் செரிக்கவே செறிப்பு சாலும்.

2

இவ்வகையில் இலக்கிய இயலுக்கு ஏற்ற சில எண்ணுவோம். முதலாவதாக அறிவியலுக்கும் உணர்வியலுக்கும் உள்ள அடிப்படை வேற்றுமைச் சிறப்பு யாது? அறிவியலில் உணர்வுக்கு இடம் இல்லை. ஆனால், உணர்வியலிலோ அறிவியலுக்கும் இடமுண்டு. இதைப் பின்வரும் படங்கள் இன்னும் தெளிவாக்கும்.

அறிவு உணர்வு

$1+1=2$



மேலே உள்ள படங்கள் இரண்டையும் பார்த்ததும் நம்மிடம் ஏற்படும் எதிர்ச்செயல்கள் (Reactions) பகுத்தறியத் தக்கன.

	அறிவு	உணர்வு
அறிவியல்	+	−
உணர்வியல்	+	+

இப் படத்தால் அறிவியலில் ஆராயத்தக்கது அறிவு ஒன்றே என்பதும், உணர்வியலில் ஆராயத்தக்கது அறிவும் உணர்வும் ஆகிய இரண்டும் என்பதும் விளங்கும்

அறிவியலாளியும் மனிதனே. அவன் வெறும் இயந்திரம் அன்று. எனவே, அறிவியலாளியின் அறிவியல் முயற்சிகளிலும் உணர்வுந்தல் இருத்தல் இயற்கை; இன்றியமையாததும் கூட. ஆனால், அது பந்தை வீசும் கை போன்றதே; பந்து அன்று. ஆனால், உணர்வியலாளியின் கலை முயற்சிகள் பந்தை வீசும் கை போன்ற நிலையில் இல்லை; அபிநயம் செய்யும் அழகிய கை போன்றதே.

இதன் பயனாக அறிவியல் முயற்சிகளில் உணர்வுப் பகுதிகளைத் தேடுவது உதவாது என்பதும், உணர்வியல் கலைகளில் அறிவியல் பகுதிகளையும் ஆராய்வது உதவும் என்பதும் அறிந்துணரப்படும். வேறு சொற்களால்— உணர்வியல் உயிருள்ள உடல்; அறிவியல் உயிரற்ற உடல். உணர்வுதானே உயிர், அறிஞர் சிலர்க்கு வேம்பான அவ்வுண்மை கலைஞர்க்குக் கரும்பான உண்மை! கரும்பான உண்மையாயினும் அக்கரும்பைப் பிழிந்து சாறெடுத்துப் பயன்படுத்துவது செயற்கருஞ் செயலாகும். திருக்குறள் போன்ற நூலுக்கு இன்னும் உரையாசிரியர்களாம் திறனாய்வாளர்கள் தோன்றிக் கொண்டிருப்பதால் இவ்வுண்மை மலைமேல் மணி விளக்காகும். இதன் காரணமாகவே இலக்கிய இயலையும் அதனுள் அடங்கும் இலக்கியத் திறனாய்வியலையும் பகுப்பாய்வு செய்து பார்க்க வேண்டியுள்ளது.

3

உயிருள்ளன, உயிரில்லனவற்றினும் உயர்ந்தவை என்பதையும் உயிருள்ளனவற்றுள்ளும் ஆறறிவு படைத்த மனிதன் அனைத்துயிரினும் சிறந்தவன் என்பதும் தொன்று தொட்டு இன்றுவரை எவரும் ஒப்பிய ஒன்றாகும். இத்தகு சிறப்பு வாய்ந்த மனிதனின் அடிப்படைக் கூறுகள் யாவை?

உடல், உள்ளம், உயிர். இவற்றுள் உடல் வேறு உள்ளம் வேறு என்பதை ஓரளவு உணர்தல் எளிது; ஆனால், உள்ளம் வேறு, உயிர் வேறு என்று தெளிதல் பெருமளவு அரிது. உடலே உள்ளமும் உயிரும் என்பது இன்றைய பெரும்பாலான அறிவியலாளர் போக்கு. உள்ளத்தை ஒப்புக்கொள்வோரும் உயிரை ஒப்புக் கொள்வதில்லை. இவ்வுண்மையை விளக்கும் விளக்கப்படம் வருமாறு :



உடல் வேறு, உள்ளம் வேறு, உயிர் வேறு என்று உணர்தல் அவரவர் அறிவுயர்வையும் உணர்வாழத்தையும் பொறுத்தது ஆகும். கனவிலே இயங்கும் உள்ளத்தையும் உடலின் கூறு என்றே அறிவியலாளர் கண்ணயர்ந்து அறைவர்; 'உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' எனும் உண்மையை அவர் செத்தாலே அறிவர்—உணர்வர் போலும்!

ஈண்டு நாம் கருத—வற்புறுத்தத் தக்கது உடல், உள்ளம், உயிர் ஆகிய மூன்றும் ஒன்று; வேறு வேறு வேறு என்பதன்று. ஒன்றே ஆயினும் முக்கூற்றன என்பது முழு உண்மை. உடம்பில் கைகள், கால்கள், செவிகள், மூக்கு முதலியன அறுபட்டாலும் மனிதன் எண்ண இயலும்—உயிருடன் இருக்க இயலும் என்பது தெளிவு. இப் போதைக்கு மாற்று இதயமும் பொருத்தலாம் என்பதும் தெளிவு. இன்னும் எட்டிலும் இயலாததாய் இருப்பது மாற்று மூளை அமைப்பதே ஆகும். காரணம் போலி இதயத்தை ஓரளவேனும் இயற்றக் கற்றுவிட்ட அறிவியல்

மதிக்கத் தக்க சிறு அளவிலும் மூளையைப்பற்றிய மூளையைப் பெறவில்லை. எனவே அத்தகைய மூளையை அவர்கள் பெறும்போதே, உள்ளமும் உயிரும் மூளையின் 'முடுக்கு'கள் என்று அவர்கள் கருதும் முடுக்கும் சரியா, தவறு என்பது புலனாகும். அந்நிலையிலும் உள்ளத்தை இயக்கும் சிக்கல் மிக்க மூளைப் பகுதியின் தனிச் சிறப்புகள் பல தெளிவாகும். காணும் கண்ணும், கேட்கும் செவியும், முகரும் மூக்கும், சுவைக்கும் நாவும், உற்றுணரும் உடலும் போல அறிந்தாயும், உணர்ந்துணரும் மூளைப்பகுதி எதுவென மிளிரும்.

ஈண்டு நாம் கருதத் தக்கது எல்லாம் ஆரும் அறிவுக்குரிய பகுதி ஒன்றாகவோ பலவாகவோ மூளையில் உள்ளது; அது/அவை அறிவாகவும் உணர்வாகவும் செயல்படுகிறது என்பதே ஆகும். இதன் பயனாக விளையும் அறிவும் உணர்வும் இருவேறு போக்குகளைப் பெறுகின்றன. ஒன்று 'மண்'ணிலேயே விரைந்து செல்லும் அறிவியல். மற்றொன்று மண்ணிலிருந்து எழுந்து 'விண்'ணிலேறிப் பறக்கும் கலையியல். இவ்விரண்டிற்கும் 'நோக்கு' என்னும் ஓரடிப் படையே உண்டு என்பதை முன்னரே கண்டோம். 'தோள் கண்டார் தோளே கண்டார்' ஆதல் அறிவியல் என்றும் தோள் கண்டார் தோளே காணாது, தோளோடு தொடர்புடையன — தொடர்புடையன போன்ற பிற வெல்லாமும் காணல் உணர்வியல் என்றும் உரைக்கலாம்.

4

எனவே, இலக்கியவியல் ஆய்வில் நம் கவலை எல்லாம் ஒரு சிறிது உடலைப்பற்றியும் மிகப் பெரிது உள்ளத்தைப் பற்றியும் என்று கொள்ளலாம். இதற்கடுத்த நிலையில்

உள்ளம் என்ற ஒன்று எவ்வாறு உருவாகிறது என்பது. பின்வரும் சமன்பாட்டின் வாயிலாக எண்ணத்தக்கது.

உள்ளம் = ஊழ்நிலை அல்லது வழிநிலை + சூழ்நிலை அல்லது வையநிலை.

இந்த ஊழ்நிலை அல்லது வழிநிலையை (Hereditary) என்ற ஆங்கிலச் சொல்லாலும் சுட்டலாம். ஊழ்நிலை என்பது பகுத்தறிவாளர்க்குப் பிடிக்காததலால் வழிநிலை எனப்பட்டது. அதற்கு ஏற்ப மோனை கருதி வையநிலை எனவும் வைக்கப்பட்டது—எளிதில் நினைவில் ஏற—ஏற்ற! இந்த ஊழ்நிலை அல்லது வழிநிலை ஆற்றல் புதிதாய்ப் பூத்துவரும் மூலப் பிறப்பியல் (Genetics) ஆய்வாலும் உறுதி பெறும் என்றே தோன்றுகிறது. இனி மனிதன் சூழ்நிலையின் குழந்தை என்பது சாதாரணரும் சாற்றுவதே.

எனவே உள்ளத்தின் ஊற்றுக்குள் ஒன்றுகிய இலக்கியத்தின் இயல்பைப் பின்வரும் சமன்பாட்டால் விளக்கலாம்.

இலக்கியம் = கவி உள்ளம் + புவி உலகம்

5

மனிதனின் அல்லது மனித வாழ்க்கையின் நகல் அல்லது மறுபதிப்பே இலக்கியம் எனலாம். எனின், மனிதனின்—ஆறறிவு படைத்த மனிதனின்—தலையாய சிறப்பு யாது? என்ற முதற்கேள்வி முளைக்கிறது. அம்முளை வினா விடுக்கும் விடை—அறிதலும் அறிவித்

தலும், உணர்தலும் உணர்த்தலும் (வேண்டுமானால் செய்தலும் செய்வித்தலுமே) ஆகும் என்பதாகும். அப்படியானால் அசலின் பண்பே நகலிலும் நிழலாடல் இயற்கை. இதன் விளைவாகப் பின்வரும் சமன்பாடும் பொருந்தும்—சாலும் :

மனிதன் வாழ்க்கை இலக்கியம்	→ → →	அறிதல் - அறிவித்தல் அல்லது உணர்தல் - உணர்த்தல் அல்லது (செய்தல் - செய்வித்தல்) அல்லது உள்ளல் - விள்ளல் அல்லது காணல் - காட்டல்

ஆனால், குமர குருபர முனிவரும் வியக்கும் வகையில் வையகத்து விந்தைகளுள் எல்லாம் பெரிய விந்தை, செய்வோனினும் செய்யப்படும் பொருள் நீடித்து நம்மைப் பீடித்து இருக்கும் பீடே ஆகும். இதன் காரணமாக வாழ்க்கை அசலினும், நகல்—இலக்கியம்—பல்வேறு காரணங்களாலும் சுவையும் பயனும் உடையதாகிறது. இனி, அக்காரணங்களை ஆராய்வோம்.

4

எவர்? எதை?
→எப்படி←
எப்போது? ஏன்?

1

இலக்கியம் இன்பம்; துன்பியல் இலக்கியமும் தொலையா இன்பம். ஏன்? இவ்வினாவிற்குரிய விடையே மொத்த இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளும் எனலாம்.

பெருமளவிற்குப் போலச் செய்தலிலேயே மனித வாழ்வு தொடங்குகிறது; வளருகிறது; முடிகிறது. ஒரோ வழித் தோன்றும் விதி விலக்கும் அப்போதைக்கே. அப்புறம் விதி விலக்குகளும் விதியே! இதுவே விதியின் விதி! இந் நிலையில் இலக்கியம் இனிப்பது ஏன் என்ற வினாவிற்குரிய அடிப்படை விடைகளை ஆராயும்போது கிடைக்கும் அரிய பெரிய விடை—அரிஸ்டாட்டில் முதல்

ஆபர்கிராம்பி வரை அறிஞர் அனைவருக்கும் ஒப்ப முடிந்த உண்மை—பெருமளவிற்குக் கலை இலக்கியம் உட்பட, வையத்து வாழ்வைப் போலவே அமைகிறது என்பதுதான். சற்றே முரட்டுத் தமிழில் சாற்றினால் **போலியே கலையின் பொருண்மை** எனலாம்.

இப்படி ஒரு வரையறையைச் செய்த அக் கணமே அறிவாராய்ச்சி உலகத்தில் எழத்தக்க ஒரு வினா, '**போலியா?**—போயும் போயும் போலியா? **அதுவா கலை?**' என்பதே ஆகும். ஆத்திரமூட்டும் இவ்வினாவிற்கு அமைதியாக விடை காண முயன்றால் முன்னிற்கும் உண்மைகளே திறனாய்வுக் கொள்கைகள்.

போலிதான்! ஆனால் எத்தகைய போலி? மனிதர்களைப் போலவே தெய்வங்களையும் படைக்கும் திருப்போலி. உண்மைப் போலி! உண்மை (போன்ற) போலியே (Real (like) imitation) உயர் போலி! உண்மைப் போலி—உயர் போலி என்றால் என்ன? தீமை உள்நோக்கோடு அல்லதும் இல்லதும் தெரிவிப்பது அன்று. உண்மையே காட்டும் — உண்மையுள்ளும் உயர்ந்தனவற்றையே — உயர்விப்பனவற்றையே—காட்டும் போலி! ஓ! அப்படியானால் 'ஓம்' என்று உடன்படத் தோன்றுகிறதல்லவா?

இனி இத்தகைய உண்மை உயர்—இல்லை—உண்மைப் போலி உண்டாவது ஏன் என முதலில் எண்ணுவோம். இந்த வினாவிற்குரிய எளிய விடை, நாம் ஏன் நம் நிழற் படத்தை விரும்புகிறோம் என்ற வினாவிற்குரிய விடையிலேயே கிடைக்கும். இன்னொருவர் ஏன் ஒன்றை விரும்புகிறார் என்பதைக் காண **வள்ளுவர் வழியில்** நாம் ஏன் ஒன்றை விரும்புகிறோம் என்பதைக் கண்டாலே போதும் அல்லவா?

மனிதனுக்கு இருக்கும் அரிய கலை உணர்வுகளுள் ஒன்று 'மாதிரி'யை மதிப்பது. காரணம், அறிவதற்கும் அழுந்தி அறிதலாகிய (அனுபவ) உணர்வுக்கும் அது எளிதில் பயன்படுவதே ஆகும். நாம் காணும் உலகப் படம் முதலாக எந்த வரைபடமும் இந்த உண்மையை விளக்கும். இதுவும் ஏன் என்று நுணுகி ஆராய்ந்தால் ஒரு பேருண்மை விளங்கும். அது, மனித அறிவு, பெரிதும் மதிப்பது—விரும்புவது—ஒரு பொருளின் அரிய தலைமைத் தனிப் பண்புகளையே அன்றி, அனைத்துப் பண்புகளையும் அன்று என்பதே ஆகும். இவ்வகையில் மொழி நூலார் ஒலிகளினும் (Phones) ஒலியன்களைப் (Phonemes) போற்றும் திறம் ஒப்பு நோக்கி இன்புறுதற்கு உரியது.

2

இனி, வாழ்வின், வையத்தின், தலைமைத் தனிப் பண்புகளை மட்டுமே உண்மை உயர்—உயர் உண்மை—நோக்குடன் புனைந்துரைத்துப் புலப்படுத்தி உணர்வின்பம் வழங்கும் இலக்கியக் கலையைத் துய்த்தற்கு இக் கட்டுரையின் தலைப்பாக விளங்கும் வினாவைந்தும் எவ்வாறு பயன் படுகிறது எனக் காண்போம்.

ஓர் இலக்கியப் படைப்பை எண்ணும்போது முதலில் எழும் வினா 'எவர் படைப்பு?' என்பதே. இது மனிதனுக்குப் படைப்போனை அறிதலில் இருக்கும் ஆர்வத்தை அறிவிக்கும். ஆளை அறிந்தால் அவர் படைப்பினைப் பார்க்காமலேகூட அதன் பண்பை அறியலாம் என்ற பட்டறிவு (அனுபவ) நம்பிக்கையே இதற்குக் காரணம்! யாரொரு

வரையும் பற்றி அறிய விரும்புவார், 'அவர் யார்? அவர் பெற்றோர் யார்? அவர் ஊர் யாது?' முதலிய விவரங்களை அறிய விரும்புவது போலத்தான் இதுவும். ஆழ்ந்த ஆராய்ச்சியில் எவர் என்ற வினாவிற்கும் பின்வரும் விளக்கப் படம் பதில் விளம்பும்.

எவர் ?

ஊழ்நிலை அல்லது உளநிலை	சூழ்நிலை அல்லது உலக நிலை

ஊழ்நிலை அல்லது உளநிலை, சூழ்நிலை அல்லது உலக நிலையில் உருவாகின்றவரே மனிதர்—அவர் மதிக்கும்—புலவர்.

எதை என்ற வினாவிற்குப் பின்வரும் விளக்கப் படம் விடை தரும்.

எதை ?

இறப்பு	நிகழ்வு	எதிர்வு

எந்தப் புலவர் எந்தப் பொருள் பற்றிப் பேசினாலும் அந்தப் பொருளில் இம்முக்காலமும் இணைந்திருக்கும். ஆனால் ஏதேனும் ஒரு காலம் தலைதூக்கி இருக்கும். பாஞ்சாலி சபதம் பழம் பொருள்தான். ஆனால் அதைப் பாரதியார் பாடுவதில் புதுமை இருக்கிறது! இவ்வாறே எண்ணிப் பார்த்தால் பெரிதும் பழமை பற்றிய எழுத்துக்

களையும், பெரிதும் எதிர்வு பற்றிய (எச். ஜி. வெல்சின் கால யந்திரம், டாக்டர் மு. வ. வின் கி. பி. 2,000 போன்றவை) எழுத்துக்களையும் தனித்தனியே பாகுபடுத்தலாம். ஆயினும் இவற்றுள் எந்த ஒரு பிரிவும் பிற பிரிவுகளுடன் ஏதேனும் ஒரு வகையில் — ஓரளவில் — தொடர்பு கொண்டே தோன்றும். அதனால் எந்த ஒரு இலக்கியமும் முக்காலக் கூறுகளை எவ்வகைக் கோண அளவு துளியேனும் உடையன என்று கருதி முக்கோணமாக்கிப் பார்க்கலாம்.



எப்படி? என்ற வினாவே இலக்கியத் திறனாய்வின் உயிர் எனலாம். நடு நாயகமான இவ் வினாவிற்குரிய விடை காணப் பின்வரும் விளக்கப் படம் பெரிதும் பயன்படும்.





இம் மூன்றின் இயைபே கலை—இலக்கியம். உருவத்துள் யாப்பு சிறப்பிடம் பெறும்.

'எப்போது?' என்ற வினா கலைஞனுக்கும் காலத்துக்கும் இடையே இருக்கும்—இறுக்கும் இணைப்பை—பிணைப்பைக் காட்டும். 'கவிஞர்கள் காலத்தின் படைப்புகள்.'

இந்தக் காலத்தையும் இரு வகையாகக் காணலாம். ஒன்று படைப்பாளன் வயது; மற்றொன்று படைப்பாளனையும் படைத்த பாருலகின் வயது. இங்கு வயது என்பது வெறும் ஆண்டைக் குறிக்காது; உள நிலையை—உலக நிலையைக் குறிக்கும். அதைக் காட்டும் இப்படம் :



ஏன் என்ற வினாவும் இன்றியமையாதது. காரணம் ஓர் படைப்புக்குப் படைப்போனின் உள் நோக்கும் அப் படைப்போனையும் படைத்திருக்கும் சமுதாயத்தின் உலக நோக்கும் தாயும் தந்தையுமாய் அமைகின்றன. எனவே இப் படம் :

ஏன் ?

கலைஞனின்
உள் நோக்கு

சமூகத்தின்
உலக நோக்கு

இதற்கு எடுத்துக் காட்டாக இராம காதையைக் கம்பரும் பாடலாம்; புலவர் குழந்தையும் பாடலாம். ஆனால் இருவர் பாடல்கட்கும் இடையே உள்ள நோக்கு வேறுபாடு விளங்க இக்கட்டுரைக்குத் தலைப்பாக இலங்கும் வினா ஐந்துள் முதலும் முடிவுமாய்ப் பயன் பெறத்தக்கன எவர்? ஏன்? என்னும் வினாக்கள். இவ்வினாக்கள் இவ் வகையில் ஓர் இரட்டை. 'எதை? எப்போது?' என்பன மற்றும் ஓர் இரட்டை. நடு நாயகமாக விளங்குவது 'எப்படி' என்பதே. இதுவே இலக்கியத் திறனாய்வின் உயிர்நாடி. இதை இவ் விளக்கப் படம் இன்னும் விளக்கும்.

எப்படி?

எவர் ? ஏன் ? எதை ? எப்போது?

இலக்கியத் திறனாய்வை முற்றுமாக முழுதுமாகச் செய்ய இக் கட்டுரையின் தலைப்பாக விளங்கும் வினா ஐந்தையும் தலைகீழ்ப்படுத்தி ஆராய்தலும் தகும்!

5

ஐந்திலக்கணத் தமிழ்

1

இலக்கியத் திறனாய்வுக்கு இன்றியமையா ஐவகை விளக்கங்களைச் சென்ற கட்டுரையில் பார்த்தோம். அதோடு தொடர்புடைய ஐவகைப் பொருளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் கடமை.

இவ்வாராய்ச்சியை மேற்கொள்வதற்கு முன் நாணத்தோடு சொல்லத் தக்க ஒன்று 'இந்தியா' என்றாலே 'வடமொழி' என்றே பெரிதும் மேலை நாட்டாரும் கருதி வந்த காரணத்தால் பழந்தமிழின் பல்வேறு தனிச் சிறப்புகளும் உலக நாட்டு அறிஞர்களின் கருத்தைக் கவரவில்லை. இக்குறையைக் குறைக்க, இன்பத் தமிழ் நாட்டாரும் குறைந்தது ஆங்கில மொழியின் வாயிலாகத் தொல்காப்பியம், சங்கத் தொகைநூல் முதலியவற்றைத் தக்க விளக்க விரிவுரைகளோடு வெளியிடும் முயற்சியை மேற்கொள்ள

வில்லை. இதனால், இலக்கியத் திறனாய்விற்கு அரிஸ்டாட்டி லின் கருத்துகள் 'அமர்க்களப்' படுத்தப்படுவது போல வேறு எந்த இந்தியச் சான்றும் கூட மேற்கோளாக மேற் கொள்ளப்படுவதில்லை. இனியேனும் தொல்காப்பியர் போன்றார் இலக்கியத் திறனாய்வுக்குச் செய்துள்ள பெருந்தொண்டு முதலில் தமிழர்களாலேயே முழுதுமாக ஆராயப்பட்டுப் பின்னர் ஆங்கிலம் முதலிய பிற மொழிகளின் வாயிலாக வெளிப்படுத்தப்பட வேண்டும். இதனால், ஏற்படக் கூடிய தலையாய பயன் ஒன்றை மட்டும் ஈண்டுக் கருதுவோம்.

வடமொழி இலக்கணிகளும் பழமையாகவும் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் வகுத்திருக்க முந்துநூல் கண்டு முறைப்பட புலம் தொகுத்த தொல்காப்பியர் மட்டும் பொருள் இலக்கணம் என்ற ஒன்று தனியாகச் செய்வானேன் ? இவ்வினா ஆழ்ந்து கருதி விடையிறுக்கத் தக்கது. இதற்கு உறுதுணை செய்ய வல்லது பின்வரும் எளிய விளக்கப்படம்.



இப்படி ஒரு வரைபடம் வாயிலாக இக் கருத்தைக் காணும் போதே எழுத்தினும் சொல்லினும் பயன்பாட்டு

நிலையில் பொருளே பெரிதென்பது புலப்படும். இதோடு ஒப்பு நோக்கத் தக்க இன்னொரு விளக்கப் படம் இது :



இவ்விளக்கப்படத்தைக் காணுங்கால் எவர்க்கும் ஏற்படக்கூடிய ஐயம் அறத்தினும் பெரிதோ இன்பம் என்பது. ஆனால், ஒரு கணம் எண்ணிப் பார்த்தாலும் இவ்வையம் அகலும்; அறம்—அடி நிலை—இன்பம், முடி நிலை என்பது விளங்கும். அவ்வாறே எழுத்து—அடிநிலை, பொருள்—முடிநிலை. இனி இவ்விரு வட்டங்களுள்ளும் நடு வட்டமாய் முறையே சொல்லும் பொருளும் அமைந்திருப்பது சொல்லுதற்கரிய பொருள் பொதிந்ததாய் இருக்கிறது.



எழுத்திலக்கணம் வாழ்விலக்கணம்

மொழி இலக்கணத்துக்கு நடுநாயகமாகச் சொல் இருப்பது போலவே வாழ்விலக்கணத்துக்குப் பொருள் இருப்பது பொருத்தமும் பயனும் உடையதே ஆகும்.

2

எழுத்து என்றதும் பெரும்பாலோர்க்கு ஏற்படும் எண்ணம் அவை பற்றிய வரைவடிவமே. ஆனால், உண்மையில் ஒலி வடிவத்தின் புற அறிகுறியே அதுவாகும். இவ்வுண்மையில் தெளிவில்லாதார்க்குப் பல குழப்பங்கள் ஏற்படல் தெளிவு, இனி எழுத்து தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் சொல்லாகும் செய்தி நாம் ஆழ்ந்து கருதற் குரியது. இதனால் எழுத்தும் சொல்லும் பொருளின்றேல் பயனற்றும்—பெயரற்றும்—போகும் என்பது வெளிப் படை. இவ்வாறே அறமும் அறவழிப்பட்ட பொருளும் இன்பம் பயவாவிடில் துன்பமே என்பது உறுதி. இதனாலேயே போலும் காதலின்பமும் கடவுள் இன்பமாக மடைமாற்றம் செய்யப்பட்டது.

இனி, ஈண்டுச் சிறப்பாய் எண்ணத்தக்கது இலக்கியத் திறனாய்வு உலகம் எவ்வளவு பெருமளவில் தொல்காப்பிய ருக்குக் கடன் பட்டுள்ளது என்பதே ஆகும். வடமொழி உட்பட வேறு எந்தப் பழமை வாய்ந்த உலக மொழி களிலும் பொருளுக்கென்று தனி இலக்கணம் இல்லை. தொல்காப்பியர் பொருள் என்றது எதை? வாழ்க்கையை யும் அதை எண்ணப்படுத்தி, வண்ணப்படுத்திக் காட்டும் இலக்கியத்தையுமே ஆகும். தொல்காப்பியருடைய

பொருளதிகாரத்தைப் பின்வரும் விளக்கப்படவாயிலாக விளக்கலாம் :



இவ்வாறு எழுத்தின்—சொல்லின் பயனாக விளங்கும் பொருள், வாழ்க்கை எனத் தெரிந்து அவ்வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியரினும் தொன்மையானவர் வேறு யார்? அதிலும் அவரைப் போலப் பொருள் என்பது வாழ்க்கையும் அதன் சிறந்த விளைவாகிய இலக்கியமும் என்று எண்ணிப் பார்த்து இலக்கணம் செய்தவர் யார்? தொல்காப்பியர் காட்டிய இத்தெளிவை நினைக்கும் போதெல்லாம் திரு. மு. அருணாசலம் அவர்கள் எழுதிய நூலொன்றுக்குத் தமிழ் முனிவர் திரு. வி. க. அவர்கள் தந்த அணிந்துரையில் 'தமிழ் என்றால் என்ன? அது வெறும் எழுத்தா? அன்று; சொல்லா? அன்று; வாழ்க்கை! வாழ்க்கை!' என்று எழுதியது நினைவுக்கு வருகிறது.

இவ்வாழ்க்கையைக் கண்டு காட்டுவதே இலக்கியம். அதை அறிவதற்கே ஐவகை இலக்கணம். ஏனைய உலக

மொழிகள் எல்லாம் (வடமொழி உட்பட) எழுத்து, சொல், யாப்பு, அணி ஆகிய நால்வகை இலக்கணங்களையே பெற்றிருக்க நந்தமிழ் மொழி மட்டுமே பொருள் இலக்கணத்தோடு ஐவகை இலக்கணத்தையும் பெற்றிருக்கும் அருமை பெருமை ஆராய்ந்து பாராட்டற்குரியது. இதைக் கூர்ந்து காண உதவும் படம் வருமாறு :



இப்படம் எழுத்தும் சொல்லும் யாப்பும் அணியும் பொருளை உணர எவ்வாறு முன்னும் பின்னும் இன்றியமையாத துணைகளாக இருக்கின்றன என்பதை விளக்கும். இந்நான்குள்ளும் பெரிதும் இயற்கையான ஒலிவடிவாக அமையும் எழுத்தும் சொல்லும் ஒரு கூறுகவும், அவ்வாறில்லாத—அறிவு முயற்சி (உத்தியின்) விளைவாகப் பெரிதும் அமையும் யாப்பும் அணியும் வேறு ஒரு கூறுகவும் விளங்குதல் விளங்கும்.

இனி, இலக்கிய ஆராய்ச்சிக்கு மரபுவழித் துணை புரியும் இந்த ஐவகைக் கூறுகளுள் ஒலிக்கும் பொருளுக்கும் (Sound and sense) இருக்கும் தொடர்பும் கணக்கை அடிப்படையாகக் கொண்ட யாப்புக்கும் பொருளுக்கும் இருக்கும் தொடர்பும்,கருத்தையும் கற்பனையையும் அடிப்படையாகக் கொண்ட, அணிக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பும் உன்னுதற்குரியது.

இனி, மரபுவழி ஆராய்ச்சிக்குப் பயன்படும் இவ் ஐவகையுள் நடுநாயகமாக விளங்கும் பொருளை இக்காலத்திற்கு ஏற்ப எந்த ஐந்து வகைகளில் பாகுபடுத்தி ஆராயலாம் என்பதைக் காட்டுவதே பின்வரும் விளக்கப் படம்.



அரசியல், பொருளியல், சமூகவியல், கலையியல், அறவியல் ஆகிய புதிய ஐந்துக்குரிய உட்பிரிவுகளை அடுத்த கட்டுரையில் காணலாம். இந்த ஐந்துள்ளும் பெரிதும் அரசியலும் பொருளியலும் உருவாக்கும் சமூகவியல் கலையியலையும் அறவியலையும் உருவாக்கும் சிறப்பு உன்னுதற்குரியது. இதனால், புதிய ஐந்துள் நடுநாயகமாக விளங்கும் சமூகவியலின் சிறப்பும் புலனாகும். ஈண்டும் எழுத்தும் சொல்லும் போலவே, அரசியலும் பொருளியலும் படைக்கும் ஆற்றல்களாகவும், கலையியலும் அறவியலும் படைக்கப்படும் அடைவுகளாகவும் விளங்கும்—பளிச்சிடும்.

6

பொருள் தமிழின் புதுமுகங்கள்

1

ஐந்திலக்கணத் தமிழுள் நடுவணத் தமிழாய் விளங்கும் பொருள் தமிழின்—தமிழ்ப் பொருளின்—புது முகங்களை இக்கட்டுரையில் பார்க்கப் போகிறோம். அதற்கு முன் எழுத்து, சொல், பொருள் ஆகிய மொழி மும்மை யோடு அறம், பொருள், இன்பம் ஆகிய வாழ்க்கை மும்மையைச் சென்ற இதழில் ஒப்பிட்டு இன்புற்றது போலவே இக்கட்டுரையின் தொடக்கத்தில் இன்கலை மும்மைகளாகிய இயல் இசை நாடகத்தோடு இன்ப வாழ்க்கை மும்மைகளாகிய முதல் கரு உரியையும் ஒரு சிறிதேனும் ஒப்பிட்டு இன்புறல் ஏற்புடையதாகும்.

அதற்குத் துணை புரியும் மூன்று வட்டக் கூறுகள் இரண்டு வருமாறு:



இயலின் நெகிழ்ச்சியும் வளர்ச்சியுமே இசையும் கூத்தும். முதலின் முதிர்ச்சியே கருவும் உரியும். பின்ன தன் உண்மையை உணர முதல் என்பது நிலமும் பொழுதும் என்றும்; கரு என்பது (1) தெய்வம், (2) உணவு, (3) விலங்கு, (4) மரம், (5) பறவை, (6) பறை (இசைக்கருவி). (7) தொழில், (8) யாழ் முதலியன என்றும்; உரி என்பது குறிஞ்சி (மலைநிலம்), முல்லை (காட்டு நிலம்), மருதம் (வயல் நிலம்), நெய்தல் (கடற்கரை நிலம்), பாலை (காடும் மலையும் கெட்டுத் தோன்றும் வறண்ட நிலம்), ஆகிய ஐவகை நிலங்கட்கும் முறையே அவற்றிற்கு உரிய காதலர் கூடுதல், பிரிந்த தலைவன் வரும் வரை தலைவி பொறுத்து ஆற்றியிருத்தல், பெரிதும் பரத்தையிடம் பிரிந்த தலைவனின் ஒழுக்கமின்மை பற்றித் தலைவி வெகுண்டு ஊடல், தலைவனின் பிரிவுக்குத் தலைவி பெரிதும் இரங்கல், தலைவியைத் தலைவன் பிரிதல் ஆகிய ஒழுக்கங்கள் என்றும் தொல்காப்பியம் முதலான இலக்கணங்கள் கூறும் வரையறையை நினைவூட்டிக் கொள்ளல் பயன் தரும். இவ் ஐவகை ஒழுக்கங்களுள் குறிஞ்சி தவிர

ஏனைய நான்கும் பிரிவின் அடிப்படையில் எழும் துன்பங் களோடு தொடர்புடையவை என்பதும் எண்ணத் தக்கது. ஆம்—வாழ்க்கையில் ஐந்தில் ஒரு பகுதிதான் இன்பம் போலும்! அந்த இன்பமும் துன்பத்திற்கு வித்து தான் போலும்! இந்த வாழ்வியல் உண்மை இலக்கிய இயலுக்கும் இலக்கண இயல் எழுத வந்த தொல்காப்பி யருக்கும் தெரியும் போலும்! ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட அந்தப் பழம் பசலிக்குத் தெரிந்த செய்தி இன்று நமக்குத் தெரியுமோ?! தெரியும்!—தெரியாமலா துன்பச் சுவையே இலக்கியச் சுவைக்குப் பெரிதும் துணை என்று கூறும் ஆங்கில இலக்கியத் திறனாய்வுகளை இரவுப் பாடம்—இரவல் பாடம்—படித்துக் கொண்டிருக்கிறோம்?!

இனி மேற்காட்டிய இரு வட்டக் கூறுகளுள் இருக்கும் மும்மூன்று வட்டங்கட்கும் இடையே இருக்கும் இணைகளைக் கணைகள் காட்டுவதும் காணத்தக்கது— கருதத்தக்கது. வாழ்க்கையில் முதலும் கருவும் உரியுமாய் இருப்பவை, கலையில் இயலும் இசையும் நாடகமுமாய் இருப்பது ஆழ்ந்து எண்ணிப் பயன்பெறத்தக்கது.

2

இவ்வாறு நெருங்கிய நேயம் கொண்டிருக்கும் இலக்கிய இயலையும்—வாழ்க்கை இயலையும் இரு விழி களாகக் கொண்டு ஐந்திலக்கணத் தமிழுள் நடுவணத் தமிழாய் விளங்கும் பொருள் தமிழின்—தமிழ்ப் பொருளின்—புதுமுகங்களைப் பார்ப்போம். அதற்குத் துணை புரியும் சிறுசிறு வரைப்படக் கண்ணாடிகள் வருமாறு:

(அ) அரசியல்

அரசன் — ஆட்சி

இப் படத்தால் இலக்கியம் காட்டும் அரசியல் பற்றிய செய்திகளைப் பெரிதும் இருவகைப் படுத்தி ஆராயலாம் என்பது துலங்கும். வழிவழிவரும் அரசு மரபுகளை அறியவும் அவ்வரசர்களால் நிகழ்த்தப்பட்ட ஆட்சிக் கலையின் இயல்புகளை அறியவும் இப்பாகுபாடு பயன்படும்.

(ஆ) பொருளியல்

இயற்கை (Nature-made) — செயற்கை (Man-made)

வறுமை — வளமை

இப்படத்தால் ஒரு நாட்டின் பொருளியலின் இரு முனைகளாக விளங்கும் வறுமையும் வளமையும் காணத் தக்கன என்பதும், அவ்விரண்டுக்கும் காரணமான இயற்கைச் சிறப்புகளும் செயற்கைச் சிறுமைகளும் சிந்திக்கத்தக்கன என்பதும் விளங்கும். இதையொட்டி ஆராயத் தக்கன, ஒரு நாட்டின் வளமைக்குக் காரணமாக விளங்கும் இரு பெருந்துறைகளைப் பற்றியே ஆகும். அதை அறிவிக்கும் படம் வருமாறு:

வளமை

வேளாண்மை முதலிய அகநாட்டுத் தொழில்கள் — கடல் வாணிபம் முதலிய அயல்நாட்டுத் தொழில்கள்

தமிழ்ப் பொருள்—பொருள் தமிழ்—பற்றிய நம் புதிய பார்வையில் நடுநாயகமாக இருப்பது சமூகவியல். இதுபற்றிய செய்திகளை மூவகைப் பாகுபாடுகளுள் முதன்மையாக அடக்கலாம். அதைக் காட்டும்வரை படம் வருமாறு:

(இ) சமூகவியல்

தனி மனிதன்	குடும்பம்	நாடு
பற்றியன	பற்றியன	பற்றியன

இப்பாகுபாடு தனிமனிதன்—குடும்பம்—நாடு என்று சமூகம் வளரும் வளர்ச்சியையும் காட்டும். இனி, பெரிதும் சமூகப் படைப்புகளாக விளங்கும் கலையியலை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். காரணம் ஈண்டுக் 'கலை' என்பது எண்ணெண் கலைகளையும் தன்னகத்தே கொண்ட ஒரு பெரும் பிரிவையே சுட்டும். 'கலைக்களஞ்சியம்' என்ற பெயரும் படைப்பும் எண்ணத்தக்கன. இனி, கலையின் இருபெரும் கண்களைக் காட்டும் படம் இது:

(ஈ) கலையியல்

இன்கலை	நுண்கலை
(Fine arts)	(Precision arts/sciences)

இறுதியாகக் காணத்தக்கது—கலையியலின் பெரும் பயனாகக் கருதத்தக்கது—அறவியல் பற்றிய பாகுபாடாகும். அதையும் மூவகைப் படுத்திப் பார்த்தல் பொருந்துவதாகும். அதை விளக்கும் இப்படம்:



இவ்வரைபடம் உரைக்கும் வகைகள் ஆழ்ந்து ஆராயத் தக்கன. ஒழுக்கம் ஒரு சமயத்துள் மட்டும் சிறைப்படாத பொதுமைச் சிறப்புடையதாகும். சமயம் அப்பொது ஒழுக்கத்தைச் சிறப்பொழுக்க மாக்கும். செழுமை—கொழுமை படைத்ததாகும். மெய்ப்பொருள், ஒழுக்க—சமய நிலைகளைக் கடந்து உண்மை நிலைகளையே உணர்த்துவது. ஒருவகையில் ஒழுக்கம், சமயம், மெய்ப் பொருள் ஆகிய மூன்றையும் கடமை—கற்பனை—கருத்து என்ற வாய்ப்பாட்டால் வடித்துக் காட்டலாம். ஒழுக்கம்—சமயம்—மெய்ப்பொருள் ஆகிய மூன்றுள் நடுநாயகமாக விளங்கும் சமயம்—தெய்வம், கோயில், விழா என்ற முப்பாகுபாடுகளின் வழி ஆராயத்தக்கது. அவற்றுள்ளும் நடுநாயகமாக விளங்கும் கோவில் வரலாறு, இலக்கியம், பிறகலைகள் என்ற முப்பிரிவுகளால் ஆராயத்தக்கது. இவ்வாராய்ச்சியில் வரலாற்றுக் கண் கொண்டு காணும்போது கோவிலைப் பற்றிய வரலாறும் கோவிலால் விளங்கும் சமூகப் பொருள் பற்றிய அனைத்துச் செய்திகளும் கிடைக்கும். அவ்வாறே காலந் தோறும் கோவிலை மையமாகக் கொண்டு வளர்ந்த

இலக்கியங்களும் ஆராயத்தக்கன. இந்நாள் வரை இவ்வகையில் ஓர் ஆராய்ச்சி நூலும் உருவாகாமை எண்ணி இரங்கத்தக்கது. பிறகலைகள் என்ற தலைப்பில் கட்டடக் கலையும், ஓவியம், சிற்பம், இசை, கூத்து முதலிய கலைகளும் சிறப்பாகத் துருவத்தக்கன.

இனி, இக்கட்டுரையை முடிக்குமுன் முழங்கத் தக்கன இரண்டு: (1) எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைமை போலவே அரசியல், பொருளியல், சமூகவியல், கலையியல், அறவியல் ஆகியவை ஐந்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. எனவே, ஒன்று பற்றிய ஆராய்ச்சி பிற ஆராய்ச்சிகளில் ஒன்றுதலும் ஒன்று (உண்டு). (2) அரசியல், பொருளியல், சமூகவியல், கலையியல், அறிவியல் என்ற ஐவகைப் புதுப் பொருட் பாகுபாடுகள் மிகவும் அடிப்படையானவையே.

7

புதுமுகங்களின் புதுப்பொலிவுகள்

1

பொருள் தமிழின்—தமிழ்ப் பொருளின்—புதுமுகங்களாக விளங்குபவை (1) அரசியல், (2) பொருளியல், (3) சமூகவியல், (4) கலையியல், (5) அறவியல் ஆகிய ஐவகைப் புதுப் பாகுபாடுகளே என்பதைக் கண்டோம். ஐந்திலக்கணத் தமிழின் நடுவணதாக விளங்கும் அப்பொருள் தமிழ்ப் புதுமுகங்களின் புதுப் பொலிவுகள் சிலவற்றையேனும் சீராட்டிப் பாராட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். சிறப்பாக, 'இலக்கியக் கொள்கைகளும் தமிழிலக்கியமும்' (இலக்கியக் கொள்கைளும், அவை தமிழிலக்கியத்திற்குப் பொருந்துமாறும்) என்று தொடர்புபடுத்திப் படிக்கும் கல்விக்கு இஃது இன்றியமையாதது.

2

பொருள் தமிழின் — தமிழ்ப் பொருளின் — இருவிழிகளாய் இலங்குவன அகமும் புறமும். இருபாலராய ஒத்த தலைவன், தலைவியிடம் நிகழும் காதலுணர்வு தவிர பிற யாவும் புறமாம். ஆம். அருந்தமிழ் நோக்கில் ஆண், பெண் உணர்ச்சி வழிப்பட்ட அன்புணர்வே — காதலுணர்வே — அகம். வேறு வகையான அன்புணர்வெல்லாம் (இறையன்பு உட்பட) புறமே. இதுவும் தமிழ் நோக்கின் தனிச் சிறப்புப் போக்கு. இவ்வாறு அகமும் புறமுமாய் அடிப்படைப் பாகுபாடு பெறும் தமிழின் தன்மையைக் காட்டும் வரைபடம் வருமாறு:

(அ)



(ஆ)



இவ்விரு பிரிவுகளுள் அகத்துள் குறிஞ்சி தவிர, ஏனைய நான்கும் பிரிவாதலும்; புறத்துள் காஞ்சி, பாடாண் தவிர பிற யாவும் போராதலும் ஆழ்ந்து கருதத்தக்கன. அக வாழ்வின் சிறப்பு பிரிவுத் துயரிலும், புற வாழ்வின் சிறப்பு போர்த் துயரிலும் தானே!

3

இனி இவ்வகமும் புறமும் காட்டும் வேறுவகைப் பாகுபாடுகளைப் பின்வரும் வரைபடத்தால் விளக்கலாம்.



இவ்வரைபடத்தால் நால்வகை நிலைபேறுகளுள் இன்பம் (காதலின்பம்) ஒன்றற்காகவே ஒரு பிரிவும், ஏனைய அறம், பொருள், வீடு ஆகிய மூன்றற்காகவும் ஒரு பிரிவும் இருத்தல் அகத்தின் அருமை காட்டும். இந்நிலையில் சங்க இலக்கியம் எனப்படும் தொகை நூலுக்கும் திருக்குறளுக்கும் இடையே அளவாலும் (Quantity) பண்பாலும் (Quality) ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் கருதத்தக்கன. திருவள்ளுவர் பொருள் என்பது தொல்காப்பியம் கருதிய அகம்—புறம் அல்ல என்பது

ஆழ்ந்து எண்ணத்தக்கது. அவ்வாறு எண்ணினால் திருவள்ளுவர் நூற்றாண்டுகட்கு முற்பட்டது தொல்காப்பியம் என்பதும் துலங்கும். மேலும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பாகுபாட்டிலும் அகபுறப்பாகுபாடே தொல்காப்பியர் போற்றிய தொன்னெறி என்பது தெளிவு. எனவே ஒருவகையில் அறமும் வீடும் வாழ்க்கைக்கு உரிய பண்பும் பயனும் ஆக அமைதலையும், அவ்வறப் பண்பு பயன்படுதற்கும் அவ்வீட்டுப் பயன் விளைதற்கும் நிலைக்களமாய் நிற்பது வாழ்க்கை என்பதும் விளங்கும். இவ்வுண்மையைப் பின்வருமாறும் எழுதிப் பார்க்கலாம்.

அறம்[1] > (அகம்+புறம்) > வீடு[4]

|

பொருள்[2]

|

(+இன்பம்[3]+...)

|

வாழ்க்கை

இவ்வாறு எழுதிப் பார்த்தால் ஏற்படும் இன்னொரு விளக்கம்;பிறைவளைவுள் இருக்கும் அகமும் புறமுமே வாழ்க்கை—அதன் பண்பும் பயனுமே அறமும் வீடும் ஆதலின் அவை தனித்துக் கருதப்பட வேண்டுவது இல்லை என்னும் உண்மையே! அகமும் புறமுமாய் 'வாழ்வே தேன்; அதன் இனிப்பே அறம்; அது தரும் இன்பமே வீடு' என உவமித்தும் உவக்கலாம். இவ்வுவகையால் கிடைக்கும் உயர்வு, அறம் பொருள் இன்பம் வீடு எனும் ஆரிய வகைக்கு முற்பட்ட தமிழ்த் தொகையே அகம் புறமெனும் தொல்காப்பியத் தொகை என்பது.

4

இனி, அறம் பற்றியும் பொருள் பற்றியும் சில அடிப் படைக் குறிப்பு வகைகளைக் காணலாம்.

அறம்

அறவுரைகள் (Ideas) — அற அமைப்புகள் (Institutions)

இவ்விரு வகைப் பாகுபாட்டுள் அறத்தையும் அதன் விளைவுகளாகிய சமயம், மெய்ப்பொருள் தெளிவு ஆகியன பற்றியும் எழுந்துள்ள எண்ணங்கள் எல்லாவற்றையும் பாகுபடுத்திவிடல் எளிது.

இனி பொருள் பற்றிய ஆய்வுகட்கு அடிப்படைகள் அமைப்போம். பொருளுக்கு உரியோர் யார்? அதைப் படைப்போராகிய மக்களே. (ஆம். படைப்போர் என்பதிலேயே படையும் போரும் வந்து விடுகிறதே! என்ன வாழ்க்கை இது! சரி, இருக்கட்டும்; அதைக் கடைசியில் பார்ப்போம்). பொருளைப் படைப்போர் என்னும் மக்களை இரு கூறுக்கலாம்—ஆள்வோர், ஆளப்படுவோர் என்று. அன்றும் இன்றும் என்றும் அடிப்படையிலேனும் ஆள்வோர் எல்லாம் ஆளப்படுவோரே; ஆளப்படுவோர் எல்லாம் ஆள்வோரே! **'ஆளப்படுவோர் எனப்படுவோரிடம் அதிகாரம் பெற்றவரே 'ஆள்வோர்'**, அன்றும்—இன்றும்—என்றும்! இதை இரு சாராரும் இமைப் பொழுதும் மறத்தலாகாது. மறப்பதாலேயே மன்னராட்சியும் மக்கள் ஆட்சியும் சிறப்பதில்லை; இறப்பதும் உண்டு! ஆனால், 'நெல்லும் உயிரன்றே' என்று தொடங்கும் புறப்பாட்டும், சடையன் தந்த முடியே சானகிராமன் சூடிய முடி என்னும் கம்பன்

கவிதையும், 'குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு' என்னும் பாரதி பாட்டும், இந்த அடிப்படையிலேயே அடிக் கோடிட்டுக் காட்டுகின்றன— ஈராயிரம் ஆண்டாக. ஆனால்?

இவ்வாறு ஆள்வோராயும், ஆளப்படுவோராயும் பாகுபடுத்தும் மக்கட் சமுதாயத்தைச் சிறப்பாகத் தமிழிலக்கியப் படிப்புக்குப் பயன்படும் வகையில் எவ்வாறு பாகுபடுத்தலாம் என்று எண்ணுவோம்.

(அ)

அரசர் (பொது)

- வேந்தர்கள்
  - பெருநில வேந்தர்
  - குறுநில வேந்தர்
- வள்ளல்கள்
  - எழுவர் (சிறப்பாகக் கடையெழு வள்ளல்கள்)
  - பிறர்

(ஆ)

மக்கள்

- அறவோர்
- வீரர்
- புலவர்
- வினைஞர்
- வணிகர்

இம்மக்கள் பாகுபாட்டுள் அறவோர் முதலிடமும், வணிகர் இறுதி இடமும், வீரரும் வினைஞரும் முறையே இரண்டாவது நான்காவது இடங்களும் புலவர் நடுவிடமும் பெறுதல் நன்கு ஆராயத் தக்கது. இவ்வமைப்பு, சிறப்பாகச் சங்ககாலச் சமுதாயத்தில் இப்பிரிவினர்

பெற்றிருந்த மதிப்பு வரிசையை—வரிசை மதிப்பைக் காட்டும். வீரரையும் வினைஞரையும் இணைத்துப் பார்க்க வேண்டிய இன்றியமையாமை எக்காலத்தும் இருப்பதாகும். நடுவிடத்தைப் புலவர் பெற்றமைக்குக் காரணம் இவ்விளக்கப்படத்தில் மட்டுமின்றிச் சங்ககால வாழ்வுப் படத்திலுமே அவ்விடத்தை அவர் பெற்று இருந்தமையே ஆகும். புலவர் புகழ் மொழிக்கே ஏனைய எல்லோரும் ஏங்கியிருப்பதே பெரும்பாலும் என்றும் நின்று நிலவும் உலக இயல்பு. **சிறப்பாகத்** தொன்மை உலக நாகரிகம் எதிலும் காணற்கரிய **புலமை நாகரிகமாகிய சங்ககால நாகரிகத்தின்** தனிச் சிறப்பே தமிழர் சால்பு.

இனி ஆள்வோராலும் ஆளப்படுவோராலும் ஏற்படும் பொது வாழ்வினையும் இரு கூறுக்கிக் காணலாம். அது வருமாறு:

(பொருட்) பொது வாழ்வு

- போர்
  - தாக்கல் (Offence)
  - தற்காத்தல் (Defence)
- அமைதி
  - பொருள்வளம் (Material Wealth)
  - புலமை வளம் (Spiritual Wealth)

இவ்விளக்கப் படம் தன்னைத்தான் எளிதில் விளக்க வல்லது. பழந்தமிழ்ப் போர் நிலைகளையும், பழந்தமிழ் அமைதி நிலைகளையும் இவ்வடிப்படைப் பாகுபாடுகளால் ஆராய்தல் எளிது; இனிது. போரைப் பொறுத்த வரையில் இப்பாகுபாடு தொல்காப்பியப் பழமையும் புதுமையும் ஒருங்கே உடையது.

8

இலக்கியங்கள்— வாழ்க்கையின் ஒலியன்கள்

1

இந்த எட்டாவது கட்டுரையில் நாம் தொட்டும் துருவியும் பார்க்க வேண்டிய ஒரு பெரும் பொருள் 'எது இலக்கியம்?' என்பதே. இவ்வினுவிற்கு விடை கூறக் கடந்த பன்னூறு ஆண்டுகளாக எத்தனையோ பேர் எவ்வளவோ முயன்றுள்ளனர். எனவே பணிவுடனும் துணிவுடனும் நாமும் முயல்வோம்.

'கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா ?
கலையெல்லாம் கண்கள் சொல்லும் கலையாகுமா !
சொல்லெல்லாம் தூய தமிழ்ச் சொல்லாகுமா ?'

என்று பாடுகிருர் கவிஞர் கண்ணதாசன்.

'பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ?—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தஉரை யாமோ தெளி

என்று பாடுகிறது பரிமேலழகர் உரைச் சிறப்புப் பாயிரம்—ஒரு பழம் பாடல்.

இவ்வடிகள் எல்லாம் அடிக்கோடிடும் உண்மை யாது? பல்வேறு காரணங்களால் தனிச் சிறப்பு வாய்ந்த சொற் கூட்டமே இலக்கியம் என்பதே ஆகும். இலக்கியம் இது வாயின் இவ்விலக்கியத்திற்குரிய தனிச் சிறப்புக் காரணங் களை ஆராய்வதே இலக்கியத் திறனாய்வு ஆகும். காரியம் இலக்கியம்; காரணம் இலக்கணம். இலக்கியம் எள்; அதனுள் இருக்கும் நெய் இலக்கணம்.

2

குறிப்பிட்ட ஒரு சொற் கூட்டம் இலக்கியம் ஆவதற்கு உரிய தனிச் சிறப்புக் காரணங்கள் யாவை?

முதலாவதாக இலக்கியம் எதைப் பற்றியது? (ஆம். பற்றியது—இரு பொருளிலும்!) வாழ்க்கை என்னும் ஒரு பெரும் பொருள் பற்றியதே. வையகமும் வாழ்க்கையும் இதனுள் அடங்கும். வையகத்திற்குள் வாழ்க்கையையும் வாழ்க்கைக்குள் வையகத்தையும் அடக்கலாம். வாழ்க்கை யைப் பொருள் எதையும் தொடாதது போல் அமைந்த ஒரு பாட்டுள்ளும் வாழ்க்கையைக் காண முடியும்— காண வேண்டும். மறைந்தனவெல்லாம் மாய்ந்தன அல்ல. உண்ணல், பருகல் போன்ற செயல்கள் பற்றியன வாயினும் அவற்றின் தனிச் சிறப்புகளை விதந்தோதுதலே

இலக்கியத்திற்கு ஏற்புடையது ஆகும். இங்கிலையில் தான் — இவ்வகையில்தான் — இக்கட்டுரையின் தலைப்பு கருதுவதற்கு உரியது ஆகிறது.

இரண்டாவதாக வாழ்க்கை என்பது பல் விளக்குதல், சிறுநீர்...மலம் கழித்தல் போன்ற (பின்னவை பறவை விலங்குகட்கும்) பொதுவான செய்திகளைப் பேசுவது ஆகாது.

இன்றைய மொழியியல் ஆய்வுக்கு அடிப்படையாக இருப்பன ஒலிகளும் (Phones) ஒலியன்களும் (Phonemes). இவை எவை? ஒரு சில (அடிப்படை இரட்டை—Minimal Pairs) எடுத்துக்காட்டுகளால் இவற்றின் இயல்பை எளிதில் உணர்வோம்.

அறம்	புறம்
திறம்	மறம்

இந்நான்கு சொற்களுள்ளும் அ, தி, பு, ம என்ற எழுத்துகளே 'றம்' என்ற எழுத்துக்களோடு இணைந்து வேறு வேறு பொருள்களை வழங்குகின்றன. இவ்வாறு பொருள் வேறுபாட்டுக்குக் காரணமாய் உள்ள அ, தி, பு, ம என்ற (போன்ற) ஒலிகள், ஒரு மொழியின் ஒலியன்கள் ஆகும். (A minimum unit of sound feature-Blooms field).

இனி பின்வரும் எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

கப்பல்	...	ka
தகவல்	...	ha
மங்கல்	...	ga

இம் மூன்று சொற்களுள்ளும் க என்ற ஒரே வரி வடிவம் மூன்று வேறு வேறு ஒலி வடிவங்களைச் சுட்டுகின்றது. ஆயினும் இந்த வேறுபாடு 'இடரினும் தளரினும், பொருள் மாறுபாடு ஏற்படாது. இவ்வாறு பொருள் வேறுபாடு செய்யா ஒலிகள் ஒலிகளே (Phones); ஒலியன்கள் (Phonemes) அல்ல. அயல் நாட்டார் இவ்வொலிகளைத் தவறாக ஒலித்துப் பேசுங்கால் நாம் பொருளை அறிந்து கொள்வோம்; ஆனால் உச்சரிப்பு சரியில்லை என்போம், அவ்வளவு தான். எனவே பொருள் மாற்றம் புரியா இவ் ஒலி வேறுபாடுகள் தனி ஒலியன்கள் ஆவதில்லை.

இந்த மொழியியல் வரையறையை உள்ளடக்கத்தில் வைத்துக் கொண்டு இலக்கியத்தின் தனிச் சிறப்புக் காரணத்தை ஆராய்வோமானால் வாழ்க்கையின் தனிச் சிறப்புக் கூறுகளை வடித்துக் காட்டுவதே இலக்கியம் என்பது விளங்கும். ஆம். இலக்கியம் வாழ்க்கையின் வடிவம் அன்று; வார்ப்பே ஆகும். ஒரு மலையைப் போன்ற நீள - அகல - பருமன் - உயரம் உடையது இன்னொரு மலை வடிவம். ஆனால் அம் மலையின் உருவளவைக் கூறுகள் (dimensions), காண்பார் கண்கட்குப் பொதுவாகவேனும் தோன்றச் செய்யும் படிமம் வார்ப்பு. ஒருவகையில் ஒலிகளை வடிவங்கள் என்றும் உவமிக்கலாம். இனி இச்சிறு கட்டுரையின் செறிவான கருத்தாக இலக்கியங்களை வாழ்க்கையின்—வார்ப்புகள்—ஒலியன்கள் என்று போற்ற

லாம். இவ் அடிப்படை உண்மையை உள்ளத்தில் நிலை நாட்ட உதவும் எளிய விளக்கப் படங்கள் இவை:

(1) மொழி

ஒலி — ஒலியன்

(2) பொருள்

வடிவு — வார்ப்பு

(3) வாழ்க்கை

பொது — சிறப்பு

இலக்கியங்கள் = ஒலியன்கள், வார்ப்புகள், சிறப்புகள்.

9

புதுமை-பெருமை-பொதுமை-பொருண்மை

இலக்கியங்கள்—வாழ்க்கையின் ஓவியன்கள் என்று பார்த்தோம். எளிமையான சொற்களால் சொன்னால் சிறப்பின் செல்வங்கள் எனச் செப்பலாம். இச்சிறப்புகளின் பண்புகளை இன்னும் சிறிது எண்ணிப் பார்ப்போம்—பயன் தரும்.

1

முதலாவது புதுமை. இதைப் போல் அறிவைக் கவ்வும்—இதயத்தைக் கவரும் இன்னொரு பொருள் எது? முன்னைப் பழமைக்கும் பழமையான பொருளும், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கினாலே விளங்கும். காரணம்? மனித மனம்! சலிப்பு அதன் பகை! அப்பகை மாற்றும் நகை—நட்பு புதுமை! இந்த இழிவு மிகப் பெரிய

தாக மனித மனத்துக்கு இருப்பதாலேயே அது உயர்ந்த பழமையினும் தாழ்ந்த புதுமையை நாடுவதைப் பெரும் பாலோரிடம்—பெரும்பாலான நேரங்களில்— காண்கி றோம். ஆம். செயலில் முடியாவிட்டாலும் சிந்தனையில். வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் இந்தப் பெரும் பான்மை விதியை வெல்லுவோரே விழுப்புகழ் வீரராவர். அவர் வகையாலும் தொகையாலும் சிலரே. காரணம் ?

இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர் (திருக்குறள்—270)

2

இனி இலக்கியம் என்று நாம் மதிக்கும் மாண்புடையனவற்றிற்கும், தேவைப்படும்—மடை மாற்றம் செய்யப்படும்—புதுமை—நாம் பின்னால் விரிவாகப் பார்க்க இருக்கும் உள்ளீட்டிலும் (Content) உருவத்திலும் (Form) எத்தகையதாய் ஏன் ஏழவேண்டும் என்று கருதுவோம்.

புதுமை, பெருமை பெய்வதாய், பொதுமை பொதுளி யதாய், பொருண்மை பொருந்தியதாய்ப் பொலிய வேண்டும். பெருமை தராத எதுவும் பெருமைக்கு உரியது அன்று. 'நெஞ்சை அள்ளும்' நீர்மை இலக்கியத் தின் உயிர். ஆனால், அந்நீர்மை சீர்மைக்குப் பயன் படாவிடின் இலக்கியம் இழிந்த இலக்கியமே. இழிந்த இலக்கியத்தை இலக்கியம் என்றே இயம்ப வேண்டா. எனவே உள்ளத்தை—தனி மனித உள்ளத்தையும் சமுதாய உள்ளத்தையும்—உயர்த்தும் இலக்கியமே இலக்கியம், பிற பீழை,

இத்தகைய உயர் குறிக்கோள் இலக்கியத்திற்கு இன்றியமையாததா? ஆம். வாழ்க்கைக்கு இன்றியமையாதது; இலக்கியத்திற்கும் இன்றியமையாததே.

3

புதுமையும் பெருமையும் அவற்றின் தனிச் சிறப்புகள் காரணமாய் ஒரு சிலர்க்கே விளங்கும்—பயன்படும்—சித்தர் பாடல்களாய் இருப்பதிலும் பெருஞ் சிறப்பில்லை—இலக்கியம் என்ற வகையில். சித்த வைத்தியப் பாடலும் சித்தர் ஞானப் பாடலும் சிலர்க்கே விளங்கும்—சிலரையே விளக்கும். எனவே புதுமையும் பெருமையும் கற்றறிந்த பெரும்பாலோர்க்கு விளங்குவதாயும் இன்பம் வழங்குவதாயும் இருத்தல் வேண்டும். எவ்வாறு மக்களாட்சி அல்லது சமதர்மத்தின் வெற்றி எவ்வளவு சாதாரணரையும் எவ்வளவோ பெரியவர் ஆக்குவதில் இருக்கிறதோ, அவ்வாறே எந்த இலக்கியமும் உணர்தற்கு அரிதாயினும் ஓதற்கு எளிதாய் இருக்கிறதோ அதுவே வெற்றி பெறும் இலக்கியம் ஆகும். உயர்ந்த உண்மைகளை உணர்த்துவதற்கு உருட்டலும் மருட்டலும் தேவை இல்லை! 'கடபடம் என்று உருட்டுவதற்கோ கல்வி?' என்று தாயுமானவர் கேட்டது சரியே. அவர் தாயும் ஆனார்! காந்தி அடிகள் வாழ்க்கையை எல்லோரும் வாழ்வதில்லை. ஆனால்; வாழாத ஒவ்வொருவருக்குமே தெரியும், அது அவரவர்கள் குறையே என்பது, ஒவ்வொருவரால் முடியாதது என்பதும் ஒருவராலுமே முடியாதது என்பதும் வேறு வேறானவை.

எனவே, புதுமை வழி—பெருமை நெறி—செல்லும் இலக்கியம் பல்லோர்க்கும் உரியதாய்—பல்லோரையும் உயர்த்துவதாய் அமைய வேண்டும்.

4

இனி இக்கட்டுரையில் எண்ணத் தக்கது புதுமை—பெருமை—பொதுமை யாவும் சிறப்புத் பெறுவது நிறைவு நிலையில் பொருண்மையாலேயே ஆகும். எவ்வளவுக்கு எவ்வளவு ஆழ்ந்த உண்மைகளை இலக்கியன் அகழ்ந்து காட்டுகிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவனுக்கும் அவன் படைப்புக்கும் சிறப்பு. ஆழ்கடலில் மூச்சடக்கி மூழ்கி முத்தெடுக்கும் செயலே வாழ்வுக் கடலில் 'மனமடக்கி' மூழ்கிக் கருத்தெடுக்கும் இலக்கியத் தொழிலும்—இல்லை—தொண்டும் ஆகும்.

முத்துக் குளிப்போனினும் முத்தமிழ்க் குளிப்போன் செய்யும் சிறந்த செயல் அழுக்கடைந்த சிப்பிகளில் அடங்கிக் கிடக்கும் முத்துகளை மட்டும் வாரிக் கொட்டுவதோடு அமையாமல், முத்துமாலைகளையோ — முத்துப் பதக்கங்களையோ — முத்துத் தோடுகளையோ — முத்து மூக்குத்திகளையோ செய்து தரும் அணிகலக் கலைஞனாகவும் அவன் திகழ்கிறான். ஆம். எடுப்பவனும், தொடுப்பவனும், கொடுப்பவனும் அவனே.

தனி உடைமைகளை மட்டுமின்றித் (தாய் – மக்கள் போன்ற) தனி உறவுகளையும் தகர்த்து எறியும் புதிய புரட்சிப் பொதுவுடைமைப் பூங்காவை நோக்கி நத்தை வேகத்திலேனும் நகர்ந்து தீர வேண்டிய இந்த மேதின மேதினி இலக்கியனிடம் எதிர்பார்ப்பது எல்லாம் அரச முத்துக்களை இந்நாட்டு — இல்லை — இவ்வுலக மன்னராய் விளங்கும் ஒவ்வொரு மனிதனும் ஒளிபெற அணியும் வகை ஆயிரம்

ஆயிரம் வழிகளிலும் அரும்பாடு பட வேண்டும் என்பதே ஆகும்.



கணைகள் கவ்வும் இணைகள் கருதி இன்புறத்தக்கன.

10

இலக்கியக் குழந்தையின் தாயும் தந்தையும்

1

மனிதனை விலங்குகளிலிருந்து வேறு படுத்துவன நுண்ணறிவும், நூலறிவுமே ஆகும். இவ்விரு வகை அறிவுகளுள் முன்னது இயற்கை; பின்னது செயற்கை.

> விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
> கற்றாரோடு ஏனை யவர் (410)

* * *

> நூலறிவே ஆகுமாம் நுண்ணறிவு
> (மூதுரை)

இயற்கையும் செயற்கையும் அடிப்படையில் ஒன்றுக்கு ஒன்று பகையானவை அல்ல. ஆராய்ந்து பார்த்தால்

செயற்கையின் அடிப்படையும் இயற்கை என்றே செப்ப லாம்! பெரிதும் அரக்கனுகும் செயற்கையின் தாயும் இயற்கை என்றேயும் பொருமலாம்; ஆம். 'அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சாகும்.' அந்த வகையில் எந்தச் செயற்கையும் வரம்பு மீறினுல் வஞ்சம் செய்யும். இந்த இடத்தில் அண்ணல் காந்தி அடிகள் அறிவுறுத்திய ஒரு கருத்தையாவது நினைவு கூர்தல் நன்றிக்கு நன்று, அவர் தம் கருத்து : 'என்னை இயந்திரங்களின் எதிரி என்று எண்ண வேண்டா. மனிதனை அடிமையாக்கும் அதன் அரக்க நிலைக்கே நான் எதிரி. யான் போற்றும் கைராட் டையுமே ஓர் அழகிய இயந்திரம் தான்.'

எனவே நுண்ணறிவுக்கு உற்றுழி உதவும் ஊன்று கோலாய் நூலறிவு பயன்படுதல் நன்றே ஆகும். இவ் வகையில்,

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்னிற் பவை? (636)

கல்லாதான் ஒட்பம் கழியநன் ருயினும்
கொள்ளார் அறிவுடை யார் (404)

என்ற குறள் மொழிகள் கற்கவும் கேட்கவும் அறியவும் உரியன.

2

இனி இந்த நுண்ணறிவாலும் பெறத் தக்க நலங்கள் யாவை? பல. ஒன்று இலக்கியம். இந்த நுண்ணறிவுக்கும் நூலறிவுக்கும் உள்ள உறவுகளும் ஊன்றி உணரத்

தக்கன. நுண்ணறிவால் நூலறிவும், நூலறிவால் நுண்ணறிவும் வளம் பெறல் கண்கூடு. இவை யிரண்டும் கணவனும் மனைவியும் போல. இவற்றின் கலப்பால் பிறக்கும் குழந்தைகளுள் ஒன்றே இலக்கியம் என்றும் ஓதலாம்.

இந்த இலக்கியக் குழந்தை பிறப்பதற்கு அடிப்படை யாக உள்ள இருபெரு விழைவுகள் யாவை? ஒன்று அறிவார்வம்; மற்றொன்று அறிவிப்பார்வம். அறிதலும் அறிவித்தலும் (Interest in getting+giving hidden ideas) —அதிலும் மறையானவற்றை அறிதலும் அறிவித்தலும்— மனிதன் அடிப்படை விழைவுகள் என்று அறுதியிட்டு உறுதி கூறலாம். ஒவ்வொரு உயிரிடமும் ஒன்றியுள்ள இந்த உணர்வு உயரும் உயர்ச்சியைப் பொறுத்தே மன்பதையின் அனைத்து நலன்களும் வளன்களும் எனலாம். அறிவார்வ முளை வளர்ந்து பரப்பும் கிளைகள் மூன்று எனலாம்.

ஒன்று, பிறர் உள்ளத்து உணர்வுகளை அறிந்து உணரும் ஆர்வம்—துய்த்தல்; இரண்டு, உலகத்து உயிர் உள்-உயிர் இயல்பொருள்களின் இயல்புகளை ஆய்ந்து அறியும் ஆர்வம் — துருவல்; மூன்று, பிற உள்ளத்து உணர்வு களை ஆய்வதினும் தன் உள்ளத்து உணர்வுகளைத் தானே தனித்து ஊடுருவித் தெளிதல்—இம்முக்கூற்றின் முக்கூடலே தில்லைக் கூத்தர் திருவுருவம் என்பது உலகம் போற்றும் கலைமலைக் கடல் ஆனந்த குமாரசாமியின் அரும் பெரும் கருத்து. இதை விளக்கும் விளக்கப்படம்:



பெரிதும் இம் மூவகை அறிவார்வத்தாலும் முகிழ்விக்கும் பயன்களைக் கலை, அறிவியல், மெய்ப்பொருளியல் என்று முறைப் படுத்தலாம். இம் மூன்றையும் எந் நிலையிலும் துல்லியக் கோடிட்டுத் தனிமைப் படுத்தத் துணியல் ஆகாது. எனினும் இவற்றிற்கிடையில் உள்ள தனித் தன்மைகளையும் மறத்தற்கு இல்லை.

3

உணர்வியல், அறிவியல், உண்மையியல்— இம் மூன்றுள்ளும் இலக்கியக் கலைக்கு உயிராய் ஒளிர்வது முன்னதே; பின்னவை உளமாய், உடலாய்ப் பயன்படல் கூடும். இந்த உணர்வியல், அறிவியலினும் உயர்ந்தது என்று கண்டுள்ளோம். அதற்கு வள்ளுவர் குறள் வழி காட்டவும் செய்தது.

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை (315)

இத்தகு சிறப்பு வாய்ந்த உணர்வியலின் உயர்வுகளுள் எல்லாம் உயர்வற உயர்ந்தது எது? தாம் பெற்ற இன்பத்தைப் பிறர்க்குரிய இன்பமாகவும் ஆக்குவதே அந்த உயர்வு. இவ்வுண்மை திருவள்ளுவர் திருக்குறளில் ஓர் வரையறையாகவே பின்வருமாறு திகழ்கிறது.

> தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந்தார் (399)

இந்த அறிதல்—அறிவித்தல் ஆர்வமே இலக்கியத்தின்அடிப்படை—தாயும் தந்தையும், அறியும்போது அறிவு அறிவிக்கும் போது உணர்வு—இலக்கிய உலகில்.

இந்த அறிதல்—நுணுகி நுணுகி அறிதல்—நுணுக்கி நுணுக்கி அறிவித்தல் ஆர்வம்—தலை சிறந்த சிறுகதை, நாவல்களால் நன்கு விளங்கும். மரபிலக்கியத்தினும் மறுமலர்ச்சி இலக்கியத்திற்கும் இந்த வாய்ப்பு ஏராளம்—அதனாலேயே அதற்குரிய கவர்ச்சியும் எனலாம்.

இந்த இரட்டை ஆர்வம்—ஆர்வ இரட்டை—படைப்போனுக்கு இருந்தால் மட்டும் போதாது. படிப்போனுக்கும் இருக்க வேண்டும்—இருப்பதால்தான் படைப் போன் வாழ்கிறான்: அவன் படைப்பும் வாழ்கிறது. ஓரிடத்தில் அட்சன் (Hudson) உரைப்பது போல படைப்போனுக்கு வாயுண்டு, சுவைப் போனுக்கு வாயில்லை; நெஞ்சு மட்டுமே உண்டு; சுவைஞன் ஊமை; ஆனால் உள்ளம் உடைய ஊமை.

இக் கட்டுரையின் அடிப்படைக் கருத்துக்களை விளக்கும் விளக்கப் படங்கள் வருமாறு:

அறிவு

- நுண்ணறிவு
- நூலறிவு

★

அறிவார்வ ஆய்வு

- பிறருள்ளம் துய்த்தல் (கலை)
- பிற பொருளியல்பு துருவல் (அறிவியல்)
- தன்னுள்ளம் தனித்தாய்ந்து தெளிதல் (மெய்ப் பொருளியல்)

★

- அறிதல்
- அறிவித்தல்

இலக்கியம்

11

அளவின் அளவுகள்—ஆய்வும் தோய்வும்

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்." இந்தப் பழமொழியை என்றைக்கும் உரிய புதுமொழியாகவுமே போற்றல் கற்றறிந்தார் கடன். காரணம் கருதிப் பார்ப்பார்க்கு எளிது—இனிது. வரையறைக்குட் பெரிதும் உட்பட்டன போலத் தோன்றும் (பார்க்க: (Alexes Carel-The unknown man) உடலும்—உள்ளமும்—உயிரும் பெரிதும் மேலானவரையறைக்கு அப்பாற்பட்டன. அறிதொறும் அறியாமையே விளங்குகிறது. கற்றது கைம்மண்ணளவாகவும், கல்லாதது உலகளவாகவும் எப்போதுமே—எவருக்குமே—பெருகிக் கொண்டே போகிறது. எனவே, அறிதலுக்கும் அறிவித்தலுக்கும் எல்லைகள் ஏதும் உண்டா என்பது ஒரு பெருங் கேள்வியாகிறது. இதற்குரிய விடை நமக்குத் தெரிந்

தாலும் 'அகிலமெல்லாம் கட்டி ஆளினும்' அடங்காத ஆசை கொண்ட மனித மனம் தனக்கே தெரியும் விடையைப் பெரிதும் மறக்க விரும்புகிறது; சிலபோது மறுக்கவும் முனைகிறது.

இலக்கியத் துறையில் அறிதற்கும் அறிவித்தற்கும் 'நோக்கரிய நோக்கைக்' காணவல்ல 'நுணுக்கரிய நுண்ணுணர்வு' இன்றியமையாதது. ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கியவர்க்கே இது எளிதாகும். ஆனால், பலர்க்கும் இது அரிதாகும். காரணம் மலரினும் மெல்லியதாகிய இவ்வுணர்வுச் செவ்வியில் தலைப்படுவார் சிலரே. இச் சிலரே சிறந்த கலைஞர். பேராசிரியர் டாக்டர் மு. வ. அவர்கள் அடிக்கடி வகுப்பில் சொல்லி வந்த ஓர் எடுத்துக் காட்டு ஈண்டு எடுத்துக் கூறத் தக்கது. "செவ்வி அறியாப் பலர் உள்ளம் 'விறகுத் தராசு' போன்றது; செவ்வி அறியும் சிலர் உள்ளமோ 'பொன் தராசு' போன்றது." பொன் தராசில் சிறு துகளுக்கும் மதிப்புண்டு. உயர்ந்த கலைஞர்கள் உள்ளம் மிக நுட்பம் வாய்ந்தது. அவர்கள் விறகுகளை எடை போடுவது இல்லை; பொன்னையே எடை போடுவார்கள். அதற்கு ஏற்ற திட்ப நுட்பம் படைத்தவர்கள் அவர்கள். இந்த இயல்பினால் கலைக்கு நன்மை, ஆனால், கலைஞர்கட்கு, சிறப்பாக அவர்கள் உடல் நலத்துக்கு—நன்மை இல்லை. உணர்வுகள் உடலைப் பாதிக்க வல்லன. ஆனால் உணர்வுகளையே தம் உழைப்பின் மூலதனமாகக் கொண்டவர்கள் உயர்ந்த கலைஞர்கள். இந்த நிலையில் தான் மனித வாழ்வின் மாபெரும் பண்பாடாய் விளங்கும் அளவறிதல் என்ற அருங்கலையில் வல்லவராய் நல்ல கலைஞர்கள் இருக்கும் இன்றியமையாமை ஏற்படுகிறது. இவ்வாறு இருக்க முடியாத மிக நல்ல கலைஞர்கள் வல்லமையற்றவராய் வாழ்விழந்து போகின்றனர். 'தான்

செத்து மருந்து தரமுடியாது' என்னும் அரிய பெரிய அறிவுரை அடிக்கடி கல்விநெறிக் காவலர் திரு. நெ. து. சுந்தர வடிவேல் அவர்கள் வாயில் வருவதாகும். இவ்வறிவுரை கலையுரைப்போர்க்கு இன்றியமையாததே. காரணம் கலைஞர் பெரிதும் உணர்விலே பிறந்து, உணர்விலே வளர்ந்து, உணர்விலே சிறந்து, உணர்விலே இறந்து (எல்லை கடந்து என்ற பொருளிலும்) போகின்றவர்கள். எனவே, உணர்வு வெள்ளத்தில் இழுபட்டுப் போகும் அவர்கட்கு இந்த அறிவுரை மிகமிக இன்றியமையாததே. 'நாத்தழும் பேறப் பாடா'தாயினும் முல்லைக்குத் தேர் ஈந்தான் பாரி. ஆம். பாரி!—கபிலர் இல்லை! இதுதான் உணர்வு நிலை. முல்லைக்குக் கொம்பு ஒன்று நட்டால் போதும். தேரையா கொடுப்பது? ஆம். அது மடம்-கொடை மடம்! ஓரோ வழி செய்தான் இதைப் பாரி. ஆனல், கலைஞர்களோ இதை ஒவ்வொரு போதும் செய்வார்கள். இது அவர்கட்கு இயல்பு. காரணம் அவர்கள் நெஞ்சம் கல்லன்று— கற்பூரம்! தன்னையே அழித்துக் கொண்டு உலகுக்கு எல்லாம் நறுமணம் பரப்ப விழையும் தியாக வீரர்கள் கலைஞர்கள். ஆனல், அவர்கள் தொண்டு நிலைத்த பயனைத் தரவேண்டுமானல் வெறுங் கலைஞர்களாக இல்லாமல் மெய்ப் பொருள் கலைஞர்களாகவும் அவர்கள் மேவ வேண்டும். அப்போதுதான் அளவின் அளவறிந்து வாழும் ஆற்றல் அவர்கட்கு வரும். அதன் பயனுக ஆய்விலே தோய்வும், தோய்விலே ஆய்வும் ஓங்கும்.

ஆய்விலே தோய்வும், தோய்விலே ஆய்வும் ஏற்பட ஏற்படக் கலை காட்டாற்று வெள்ளமாய் இராது; தேக்கி வைத்த அணைக்கட்டிலிருந்து அளந்து திறந்துவிடப்படும் வெள்ளத் திரளாய் விளங்கும். அறிவார்ந்த கலைஞனின் உள்ளம் காட்டாறுகளின் வெள்ளங்களைக் கட்டிக் காத்துப் பல்லாற்ருனும் பயன்பட நீர் வழங்கும் அணை

யாக இருத்தலே பண்பும் பயனும் என்பது எண்ணிப் பார்ப்பார்க்குத் திண்ணிதாகும்.

இதை ஒட்டிக் கருதத்தக்க இன்னொரு கருத்து, இலக்கியனின் (ஏன்?—பொதுவாகச் சொன்னால் கலைஞனின்) நோக்கும் போக்கும் பற்றியதாகும். இலக்கியனின் நோக்கும் போக்கும் உவகை ஊட்டுவதாய் மட்டும் இராமல் உயர்வு ஊட்டுவதாயும் இருக்க வேண்டும், உவகை, உயர்வு இரண்டுள் முன்னது பின்னதற்குத் துணைபுரிவதாய் அமைய வேண்டுமே அன்றி, முன்னதுள் பின்னது மூழ்கிவிடக் கூடாது. காரணம் உவகை, எவர்க்கும் ஒப்ப முடிந்த ஒன்று. இதற்கும் காரணம் உவகை—அரியது நிலையானது—அன்று; உயர்வே நிலையானது. இதனால் உயர்வே உவகையாகும் உயர்ந்த உள்ளம் உருவாக வேண்டும் என்பது தெளிவாகும். அந்நிலையில் உவகையே உயர்வு—உயர்வே உவகை என்றாகும். ஈண்டு டால்ஸ்டாயின் அறிவுரை நினைந்து போற்றற்குரியது. அது கலையில் தீமையைத் தீட்டத் தீட்ட அதில் ஈடுபடுவோர் உள்ளத்தில் அத் தீமையே படியும் என்பதாகும். எனவே, தீமையை விலக்கவே தீமையை விளக்குகிறேன் என்னும் கருத்து ஏற்புடையது அன்று. எடுத்துக் காட்டாகக் களவு முறைகளை (மெய் நிலையிலும், கற்பனை நிலையிலும்) காவல் துறை தெரிந்து கொள்வது இன்றியமையாதது; ஆனால், ஏனையோரும் தெரிந்து கொள்ளக் கலையைப் பயன்படுத்துவது களவை வளர்க்கவே செய்யும். எனவே, விடுதலை இந்தியாவின் விழுமிய தந்தையாக விளங்கும் காந்தி அடிகள் எப்போதும் வலியுறுத்தியது போலவே முடிவைப் போலவே முறையும் **(Ends and Means)** உயர்ந்ததாய் இருக்க வேண்டும்.

இக் கட்டுரையின் கருத்துக்களைப் பின்வரும் வரைபடங்களில் வரையலாம்:

1

அளவின் அளவு

- ஆய்விலே தோய்வு
- தோய்விலே ஆய்வு

2

கலையின் கண்கள்

- நோக்கு
  - முடிவு
    - உயர்வு
- போக்கு
  - முறை
    - உவகை

12

நிறை—
மறை—
குறை

1

குறைவற நிறைந்த நிறைவு கடவுள்தான். எனவே, மனிதன் குறை உடையவன் என்பது வெள்ளிடைமலை. கடவுள் அல்லது இயற்கையின் படைப்பை (வையகம் போன்ற காட்சிப் பொருளை) நோக்கினாலே மனிதன் சிறியன். 'உலகம் ஓர் கொய்யா! அதில் நீ ஓர் சிற்றெறும்பு' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் பாடக் காண்கிறோம். அளவால் சிறியனாகிய அவனை 'சிறு மா மனிதன்' என்று சிறப்பிப்பானேன்? காரணம் அவன் உயர் பண்புகளே. அவன் உயர் பண்புகளுள் எல்லாம் தலையாய பண்பு எது? தானே சிக்கிக்கொள்ளும் வலைகளிலிருந்து தப்பித் தன்னைப் படைத்த தலைவனைத் தானே உணரல்; உணர்ந்து அவன் தாள் சேரல்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

மனிதன் தன் தலைவனைத் தானே உணரத்தடையாக இருப்பன, 'தானே சிக்கிக் கொண்ட வலைகள்'. இந்த இடத்தில் 'வலைகளைப்' படைத்தது யார்?' என்ற வினா எழுதல் இயற்கை. விடை 'இயற்கை' என்பதுதான். சைவசிந்தாந்தப்படி தலைவன், உயிர், தளை (பதி, பசு, பாசம்) மூன்றும் தான்தோன்றிகளே. அப்படியானால் மனிதன் செய்யும் தவறுகட்கு இயற்கையே காரணம் அல்லவா? ஆழ்ந்து கருதினால் அறவே இல்லை எனலாம். வலைகள் இருப்பதாலேயே வலைகளில் விழவேண்டும் என்ற விதி இல்லை. வலைகள் இருந்தும் வலைகளில் விழாமல் இருப்பதே மதி. ஆனால், மதிகெட்ட மாந்தர் 'விதி'யின் மேல் பழியை வீசி எறிவதைப் பார்க்கிறோம். இது தவறு. வாழ்க்கை ஒரு தடைப் பந்தயம் (Hurdles Race). தடைகளில்—தடைகளால்—தடுக்கிவிழாமல் தாண்டிச் செல்லும் திறமையை அளக்கவே வாழ்க்கைப் பந்தயம் வைக்கப்பட்டுள்ளது. அதை உணராமல் 'ஏன் தடைகள்?' என்று கேட்பது வாழைப்பழச் சோம்பேறியின் வாய்ப் புலம்பல்.

2

இனி இலக்கிய இயல் ஆராய்ச்சியில் காணத் தககது—கருதத்தக்கது மனித வாழ்க்கையை மடக்கும் தடைகள்—வலைகளின்—அடிப்படைத் தன்மைகள் எவை என்பதாகும். இதை அறிவது இன்றியமையாதது. மனிதனுக்கு இருக்கும் மயக்கங்களை இருவகையாகப் பகுக் கலாம். ஒன்று உயர்ந்தது; மற்றொன்று இழிந்தது.

ஆம். உயர்ந்ததிலும், உயர்ந்ததும் இழிந்ததும் உண்டு; இழிந்ததிலும் உயர்ந்ததும் இழிந்ததும் உண்டு. உயர்வு, தாழ்வு என்பன சார்புச் சொற்கள் (Relative Terms) தாமே!

இழிந்த மயக்கம் ஐம்புலன்கள் வழிவரும் மயக்கம்; உயர்ந்த மயக்கமோ, உயர்ந்த உணர்வுகட்காகத் தவருன வகையில்—தவருனவகையார்க்கு—நல்லது செய்து படும் அல்லல்கள்!

ஆம். 'அறத்தான் வருவதே இன்பம்' என்பதை மறந்ததால் வரும் கேடு அது.

ஐம்புல மயக்கங்களுள் எல்லாம் அருந்தவ முனிவரும் மயங்கும் ஈர்ப்பு—இழுப்பு கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐவகை இன்பத்தையும் தன்னகத்தே பெற்றிருக்கும் பெண்ணின்பமே ஆகும். இந்தப் பெருந் தடை—வலையை—அமைத்ததுமே இயற்கைதான். அது பெருந்தடையாய், வலையாய், இருப்பதாலேயே அதை எதிர்த்து வெல்லுவதிலேயே ஆணின் ஆண்மையும் பெண்ணின் பெருமையும் உள்ளன. எளிமை! எளிமை! அருமை! அருமை! ஆனல் அருமையாம் அருமையை அடைவது அருமை! எளிமையாம் எளிமை அடைவது எளிமை! அருமையிலும் எளிமைக்கு இரையாகும் இயல்பை மனிதனிடம் இயற்கை படைத்திருப்பதும் ஒரு பெருந்தடை—வலையே ஆகும். அதை வெல்வதே வெற்றி. இவ்வுண்மை 'வென்ருய் ஐம்புலன் மிக்கீர்' என்று நம்பிரான் திருநீலகண்டருக்குத் தந்த நற்சான்ருல் நன்கு விளங்கும்.

பாலுணர்வு (Sex-feeling) மிகமிகப் பழைய உணர்வு. அது மிகையாகும்போது பாழுணர்வு ஆகும். இது ஓவ்வொருவருக்கும் பட்டறிவில் படக்கூடியதே—படுவதே. ஆயினும் மனிதன் இதற்குப் பலியாவதற்கு முதல் காரணம், **கண்கூடாகக் கிடைக்கும்** ஈடு இணையற்ற உடலின்பம் நாடியே.

அறிவு வழி கிடைக்கக்கூடிய இன்பங்கள் அப்போதைக்கே கிடைக்காதவை; எப்போதாவது கிடைத்தே தீரும் என்றும் **கண்கூடாக** மெய்ப்பிக்க முடியாது. இதனால் தான் 'கைமேல் காசு; வாய்மேல் தோசை' என்று, 'ஒரு பகல் வாழ்வுக்கு உழலும் ஈசல்' போல் பலரும் பலியாகின்றனர்.

இனி மனிதன் 'குறையிலும் நிறை'யுள்ளதைச் சற்றே நினைப்போம். மிகச் சாதாரண மனிதனும் தான் உடலின்பம் துய்க்கும்போது அவ்வின்பத்தைத் தனக்குத் தருவோர்க்கும் தான் இன்பம் தருவதாகவே எண்ணி மகிழ்கிறான். இந்நிலையில் மனம் வளர்ந்த மனிதன் அவ் வளர்ச்சிக்கு ஏற்பத் தன்னலத்திலும் பிறர் நலம் கருதல் இயற்கை. இங்குதான் இதுவும் ஒரு 'மாயை' என்று உணரப்படவேண்டும் இன்றியமையாமை உள்ளது. அன்பும் மாயைதான். இவ்வுண்மையை 'அன்பெனும் நறவம் மாந்தி மூங்கையான்' பேசுவதாகக் கம்பன் கழறுவதால் உய்த்துணர்ந்து கற்கலாம்.

சரியாகச் சொன்னால் அன்பு ஒரு முறையாகலாமே தவிர, அதுவே முடிவாகாது. இந்த இடத்தில் 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' என்ற திருமூலர் திருவாக்கு நினைவுக்கு வருதல் இயற்கை. இதற்கு அமைதி

காந்தியடிகள் கருதியது போல உயர் நோக்குக்குப் பயன் படும் உயர் கருவியைக் கர்த்தாவாகவே கருதும் உபசார வழக்கே அது என்பதாகும். இல்லையேல், 'ஈசரோடா யினும் ஆசை அறுமின்கள்' என்ற திருமூலர் திருமந்திரத் திற்கு என்ன பொருள்?

3

இந்தத் தத்துவ ஆராய்ச்சிக்கும் இலக்கிய இயலுக்கும் என்ன தொடர்பு? இலக்கிய இயல் எல்லா இயல்களோடும் தொடர்புடையது. மெய்ப்பொருள் (தத்துவ) ஆய்வோடு மிக நெருங்கிய தொடர்புடையது.

கோடானுகோடி பேரில் ஒரு கோடியில் காண்ப தற்கும் அரியர் 'சீவன் முக்தர்'. அவரிடமே 'மனக் குறை'கள் அற்ற மாண்பினைக் காணக்கூடும். ஏனையோர் அவரவர் ஊழ்நிலைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பக் குறைகளில் குழம்புவர். அந்தக் குறை மனிதர்களின் குறைகளை உரைப்பதும் 'குரை'ப்பதுமே இலக்கியம். அதுவும் இக்கால இலக்கியம் உரைப்பதிலும், குரைப்பதில் வல்லது போலும்! இவ்வுண்மையை உணர்தல் இலக்கிய இயல் ஆராய்ச்சிக்கு அடிப்படையானது அன்றோ?

மனித வாழ்வு நிறை, மறை, குறை மூன்றும் உடையது. மறைந்திருக்கும் நிறைகளையும், குறைகளையும் கண்டாரும் காணு வகையில் எடுத்துக் காட்டலே கலை யின் — இலக்கியக் கலையின் நோக்கும் போக்கும். மரபிலக் கியங்கள் பெரிதும் நிறையைக் காண்பதிலும், காட்டுவ திலும் நிறைவு கண்டன. மறுமலர்ச்சி இலக்கியங்களோ பெரிதும் குறையைக் காண்பதிலும் காட்டுவதிலும்

நிறைவு காண்கின்றன. குறை நிறையாக அதுதான் வழியோ?

இதை ஒரு முக்கோணம் வாயிலாகவும் விளக்கலாம்.



13

தெரி[4]

1

அடிப்படையானவை இரண்டே இரண்டு. ஒன்று உள்ளம்; மற்ருென்று உலகம். உள்ளமும் உலகமும் உறவு கொள்ளும்போதே வாழ்வு வாழ்கிறது. இல்லையேல் வாழ்வு இல்லை. இதனாலேயே 'உலகம் இருப்பதும் இல்லாததும், உள்ளம் இருப்பதை—இயங்குவதைப்—பொறுத்ததே' என்பர் உலகத்து உயர் ஞானிகள் எல்லோரும். இக்கால எழுத்தில்—கருத்தில் இதனையே 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாம்' என்று கவியரசர் பாரதியாரும் பாடினார். 'உள்ளம் திருந்தின் உலகம் திருந்தும்' என்று தமிழ் முனிவர் திரு. வி. க. வும் ஓதினார். இன்னொரு இன்றியமையாக் குறிப்பு: ஒரு வகையில் கோடானு கோடி உள்ளங்கள்—மனித உள்ளங்கள்—பிறவி என்ற பெயரால் வரும்; போகும். ஆனால், அத்தனை உள்ளங்கட்கும் விருந்தாகும்

அடிப்படை (ஐம்பூத) இயல்புகள் மாறுவதில்லை. மாற்றம் எல்லாம் புறத் தோற்றங்களிலேயே. எனவே அடிப்படை உள்ளீடுகளிலும் அவற்றின் மாறும் எண்ணற்ற புறத் தோற்றங்களிலும் மனித உள்ளத்திற்கு ஆய்வாகவும் தோய்வாகவும் ஏற்படும் உள்ள உலக உறவுகளாலேயே உரைகள் — எல்லாவகை எண்ணங்களும் அவற்றின் அறிகுறிகளான எழுத்துகளும். இனி, மேலும் ஒரு மேன்மை மிகு குறிப்பு: இரட்டையராய்ப் பிறந்த இருவர் உள்ளங்களும் ஒன்றுய் இல்லை; எனவே ஒவ்வொரு உள்ளமும் ஒவ்வொருவகை. உள்ளத்தின் எண்ணமும் பேச்சும் செயலுமே வாழ்க்கை. கோடானு கோடி உள்ளங்கள்; கோடானு கோடி உணர்வுகள்; பேச்சுகள்; செயல்கள். எனவே ஒரே உலகத்தில் கோடானு கோடி வாழ்க்கைகள். இவற்றின் வேறுபாடுகள் பெரிதும் இடம் பற்றியும், இனம் பற்றியும், காலம் பற்றியும். இந்த வேறுபாடுகளே இலக்கியக் கலைக்கு இன்றியமையாது தேவைப்படும் வீறுபாடுகள்.

2

நெகிழ்ச்சியின் பயனே நிகழ்ச்சி. உள்ளம் அசைந்தாலே உதடு அசையும்; உடல் அசையும். உதடும் உடலும் அசையவில்லை என்ருல் ஒன்றுமே இல்லை. அறிவற்ற பேசாமையைப் (மௌனத்தைப்) பற்றிப் பேச்சே இல்லை; அறிவுள்ள மௌனத்திற்கு மொழி ஏது? இலக்கியம் ஏது? அருணகிரியார் செப்பும் 'பேசா அனுபூதி' தான். அதன் பயன் தாயுமானவர் சொல்லும் 'கற்பனை ஒன்றில்லாக் கவி' தான்!

3

எனவே, நெகிழ்ச்சியின் இருபெருவிளைவுகளான சொற்களும் செயல்களுமே இலக்கியத்தின் மூலப்பொருட்கள்

என்பது தெளிவு. மனித உள்ளத்திற்கு—அது (நுண்மைப் பொருளாகிய) எண்ணத்தின் வாயிலாகவும் (பருப்பொருளாகிய) சொற்களின்—செயல்களின் வழியாகவும் வாழும் வாழ்க்கைக்குப் பெரும் பின்னணி—களம் இயற்கை (Nature) என்பதும் தெளிவு.

இனி, அடுத்து கருதத்தக்கது: கோடானு கோடி உள்ளங்களின் கோடானு கோடி எண்ணங்களும் (**கருதுப கோடியு மல்ல பல**—குறள், 337) அவற்றின் விளைவுகளாகிய கோடானு கோடி சொற்களும் செயல்களுமே இலக்கியத்திற்கு உரியபொருள்கள் ஆகிவிடுமா? ஆழ்ந்து கருதினால் ஆகாது—ஆகவில்லை—ஆகமுடியாது என்பது அங்கை நெல்லிக்கனி.

4

அப்படியானால் மன்பதை வழங்கும் காட்சிகளுள் எது (எவை) இலக்கியப் பொருள் (கள்)? இது இலக்கியனை — இலக்கியம் செய்வோனைப் பொறுத்தது. அவன் தன் அறிவாற்றலைப் பொறுத்து எந்தப் பொருளையும் இலக்கியப் பொருள் ஆக்கலாம். ஆம். விளக்கையும் இலக்கியப் பொருள் ஆக்கலாம்; விளக்குமாற்றையும் இலக்கியப் பொருள் ஆக்கலாம்! இதனாலும் ஒரு பேருண்மை விளங்குகிறது. அது 'கருத்தின் சிறப்பு காணும் பொருளில் இல்லை; காணும் கண்ணில்—காட்சியில்தான் உள்ளது' என்பதே. இன்னும் தெளிவாகச் சொன்னால் உயர்வெல்லாம் காணும் உலகத்தில் இல்லை; கருதும் உள்ளத்தில்தான் உள்ளது. ஓட்டைச் செம்பொன்னாகவும் காணலாம்; செம்பொன்னை ஓடாகவும் காணலாம். காண்போன் சிறப்பே காட்சியின் சிறப்பு. ஆராயுமிடத்துக் காண்போன் சிறப்பும்—காட்சியின்

சிறப்பும் காணும் கோணத்தில் உள்ளது. ஆம். கோணம்!—கோணல் இல்லை.

இங்கே—இப்போது நாம் குறிப்பிட்டவாறு காண் போனும், அவன்தன் காட்சியும் உயர்வு உறல்/பெறல் எப்போது? இப்பொருள் தனிப்பொருள் — பெரும் பொருள் தனி ஆராய்ச்சிக்கு—பேராய்ச்சிக்கு உரியது. சுருங்கச் சொன்னால் ஊழ்நிலையும் சூழ்நிலையும் காரணம்.

5

ஈண்டு நாம் கருதத்தக்கது எல்லாம் இலக்கியனுக்கு முதலில் இன்றிமையாதது தெரி[1]தல் (தெரிந்து கொள்ளும்) அவா. ஆறறிவு படைத்த எல்லா உயிர்களுக்கும் இது முதல் அடிப்படை இயல்பு. இதனுலேயே அன்றோ தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

> **சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று—ஐந்தின்**
> **வகைதெரி வான்கட்டே உலகு** (குறள் 27)

என்று அருளினுர். இந்த அவாவே—விலங்கினின்றும் மனிதனை வேறுபடுத்தும் வீறே-பேறே **அதிகப்படும்போது** ஆற்றலாகும். இந்த அதிகப்படும் ஆற்றலைப் பொறுத்தே **அறிஞரும்—கலைஞரும்** தோன்றுவர். வெறும்...என்போரெல் லாமும் இரண்டாம்தரம்தான்.

இனி இரண்டாவதாகத்தக்க ஒருபொருளை இலக்கியன் தெரிந்தெடுக்கவேண்டும். இவ்வாறு அவன் தெரி[2]ந்தெடுக் கவே ஒரு தெரி[3]வு (தெளிவு) தேவை. ஆம். **தெரி[2]வு செய்யவே தெரி[3]வு (தெளிவு) தேவை.** ஒளிவின் எதிர்நிலை—எதிர்ச்சொல் தெளிவு. எவ்வளவுக்கு எவ்வளவு ஒளிவு ஒளிந்து—இல்லை—ஒழிந்து தொலைகிறதோ அவ்வளவுக்குத் தெளிவு நிகழும்—திகழும். தெரி[1]தலில் (அறிந்து கொள் ளலின்— **Knowing**) பயனே தெரி[2]தலுக்காகவும் **(To Select)**

தெரி[3] (தெளி) தலுக்காகவுமே ஆகும். தெரிதலும் தெளிதலும் பகுத்தறிவு வாழ்வின் இரு கண்களாகும்.

இங்கு வற்புறுத்தப்படுவதெல்லாம் தெரி[2]தலுக்கு தெரி[3] (தெளி)தல் தேவை என்பதும், தெரி[2]யத் தெரி[2]யத் தெரி[3] (தெளி)தல் ஓங்கும் என்பதேயாகும்,

இனி தெரி[2]/ தெரி[3]ந்ததன் பயன்யாது? தெரி[4]வித்தலே (To communicate) ஆகும். எவ்வாறு ஆறறிவு படைத்த மனிதனின் அடிப்படைப் பண்பு தெரிந்து கொள்ளல் (To Know) என்று கண்டோமோ, அவ்வாறே தெரி[4]வித்தலே (To communicate) ஆறறிவு படைத்தமனிதன்—சமூகப் பொருளாகவும்-சமூக விலங்கு (Social animal) என்று சொல்வானேன்?—இருப்பதால் அவனுக்குரிய பெரு விழைவாய் இருப்பதாகும். தெரி[1]வதெல்லாம் தெரி[4]விப்பதற்காக என்பதே உயர்ந்த உள்ளத்தின்—மனிதனின்—கருத்து. அதனாலேயே அன்றோ தமிழ் மறையாம் பொது மறையும்,

> தாமின்பு உறுவது உலகின்பு உறக்கண்டு
> காமுவர் கற்றறிந்தார் (199)

என்று கல்விப் பயனுக்குப் பாராட்டுரை பகர்கிறது?

இக்கட்டுரைக் கருத்துகளை நினைவூட்டும் எளிய விளக்கப் படங்கள் வருமாறு:

எண்ணம், சொல், செயல் எண்ணத்தோடு நிற்கும் நிலையும் உண்டு; எண்ணம் சொல்லாகி நின்றுவிடும்

நிலையும் உண்டு; சொல் செயலுமாகிச் சிறக்கும் நிலையும் உண்டு. இதை விளக்குவது கீழுள்ள விளக்கக் கோடுகள்.

(1)



(2)



வள்ளுவர் வகைப்படுத்தியுள்ள புலனுணர்வுகளை அவர் வரிசைப் படுத்திக் கூறும் முறையும் கூர்ந்து கருதத் தக்கது—கூர்தல் முறை காண நடு நாயகமாக இருப்பது ஊறு (?!) என்பதும் நன்கு கருதத் தக்கது.

(3)



தெரி[1] (அறி)தலும் தெரி[4] (அறி)வித்தலுமே பகுத்தறிவு வாழ்க்கையின் பண்பும் பயனும். அவை தெரி[2] (ஆராய்)தலையும் தெரி[3] (தெளி)தலையும் இருநுரையீரல்களாகக் கொள்ளும்போது இன்பம் கொள்ளை! தெரி[1]யும் தெரி[2]யும்—தெரி[2]யும் தெரி[3]யும்—தெரி[3]யும் தெரி[4]யும்—தெரி[1]யும் தெரி[4]யும் நேர்—நேர் கோடுகளில் இணையும் இன்பம் காண்க! தெரி[2]யும் தெரி[3]யும் மட்டும் ஒன்றுடன் ஒன்று ஒன்றும் ஓர்மையும் ஓர்க[3]. தெரி[1]ம் தெரி[4]ம் அடி (உலக) நிலையிலும், தெரி[2]ம் தெரி[3]ம் முடி (உள்ள) நிலையிலும் இருப்பதும் காண்க! தெரி[1] (அறி)தலின் உடனடிப் பயன் தெரி[2] (ஆராய்)தல் என்பதும், தெரி[3] (தெளி)தலின் உடனடிப்பயன் தெரி[4] (தெரிவித்தலே) என்பதும் தேர்க!

விதி விலக்கு நிலைமை உண்டென்பதைப் படம் 3-ல் ஒரு சதுரத்தில் இயல்பாக உள்ள இருமுக்கோணங்களை—அவற்றின் மும்முனைகளை — மூலைகளை — தெரி[1], தெரி[2], தெரி[4] — தெரி[2], தெரி[3], தெரி[4] கண்டு வியந்து மகிழ்க.

14

இலக்கியத்தின் இலக்கு

1

குறியும் நெறியும் உயிரும் உடலும். குறியில்லா நெறியும் நெறியில்லா குறியும் முறையே உயிரில்லா உடலும் உடலில்லா உயிரும் போலும்.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை **(9)**

* * *

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது **(772)**

என்ற திருவள்ளுவர் திருக்குறள் மொழிகளும்,

'குறிக்கோள் இலாது கெட்டேன்'

(*திருநாவுக்கரசர்: திருநேரிசை, திருக்கொண்டீச்சரம்*-9)

என்ற திருநாவுக்கரசர் தேவாரமும் குறிக்கோளின் பெருமை கூறுவன.

சில நேரங்களில் சாதாரணரும், பல நேரங்களில் ஞானிகளும் குறிக்கோள் இல்லாத நிலையில் இருப்பது போல் இருப்பதும் ஒரு குறிக்கோள் பற்றியே. முன்னது பெரியதும் ஓய்வு (Relaxation) பற்றி; பின்னது பெரிதும் மெய்யுணர்வு (Self-realisation) கருதி. எனவே எதிர்மறை நிலையிலும் ஒரு குறிக்கோள் இருத்தல் உறுதி; தெளிவு, பேசா நிலையும் (மௌனமும்) ஒரு (ஒப்பற்ற) பேச்சை—கடவுளின் குரலை—அகக்குரலை—உள்ளொலியைக் கேட்கவே அல்லவோ?

* * *

'Solitude is sometimes the best society' —*Milton*

* * *

'There is society where none intrudes' —*Byron*

* * *

Let us be silent that we may hear the whispers of the Gods —*Emerson*

* * *

It is wise head that makes the still tongue *W. J. Lucas*

* * *

In solitude where we are least alone —*Byron*

* * *

என்ற மேற்கு நாட்டுப் புலவர் கருத்துக்களும்,

'தனிமை கண்ட துண்டு — அதிலே
ஸாரம் இருக்குதம்மா'

(பாரதியார் பாடல்கள்—'பிழைத்த தென்னந் தோப்பு'—5) என்ற பாரதியின் பாடலும், 'உண்மை நா அடிக்கடி பேசாது' என்ற தமிழ்ப் பழமொழியும் கருதத்தக்கன.

மேற்கு நாட்டில் 'குறிக்கோள் மருத்துவம்' என்ற ஒரு புதுமுறை மருத்துவம் உருவாகியுள்ளது பற்றிப் பேராசிரியர் டாக்டர் வ. ஆ. தேவசேனபதி அவர்கள் அண்மையில் வெளி வந்துள்ள கல்வி நெறிக் காவலர்

நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் மணிவிழா மலரில் 'Aspects of higher Education' என்ற தலைப்பில் அருமையான கட்டுரை ஒன்று வரைந்துள்ளார்கள். அதில் உயிரான பகுதி வருமாறு:

'மேலும் சற்று விளக்கமான முறை குறிக்கோள் மருத்துவம் (Logotherapy) என்பதால் கையாளப் பெறுகிறது. 'லோகாஸ்' (Logos)என்னும் கிரேக்கச் சொல்லுக்கு எண்ணம், கருத்து அல்லது மொழி வழியாக வெளியிடப் பெறும் கருத்து என்னும் பொருள் இருப்பது லாஜிக் (Logic) என்னும் சொல்லிலிருந்து நாம் அறிகிறோம். அதனுடன் குறிக்கோள், நோக்கம் என்னும் பொருளும் இச் சொல்லுக்கு உண்டெனத் தெரிகிறது. இவ்வடிப் படையில், அதாவது வாழ்க்கைக்குத் தக்க நோக்கமோ, குறிக்கோளோ காணும் அடிப்படையில் மருத்துவம் நிகழ் கிறது. இன்பம் அடைய வேண்டும் என்னும் முயற்சி கை கூடாமல் துன்பம் மிகும் போது நம்மைத் தாங்கிக் கொள்வது தக்கதொரு குறிக்கோளை அடைய வேண்டு மென்னும் உறுதிப்பாடே. இன்பமாக வாழவோ, துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளவோ—வாழவோ—மடியவோ—நமக்குத் துணை செய்வது தக்கதொரு குறிக் கோளே. இவ்வுண்மையையும் மருத்துவ முறையையும் விளக்க Victor E. Frankl என்பவர் ஒரு நூல் எழுதியுள் ளார். (Men's Search for Meaning by Victor E. Frankl, Washing Square Press). 1939-44இல் நிகழ்ந்த இரண்டாவது உலகப் பெரும் போரின் போது ஜர்மானியர் ஏற்படுத்தி யிருந்த கடுங்காவற் சிறையிலே (Concentration Camp) தாங்கரும் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள அவருக்கு ஊக்கமளித்தது குறிக்கோளுடைமையே. இம்முறையை விளக்கும் நூலொன்றை யெழுதி வந்த அவர், நூல் முற்றுப் பெறும் வரையிலாவது தாம் வாழ வேண்டு மென்னும் உறுதியோடிருந்தது அவர் கையாளும் முறைக் குச் சான்றாகிறது'

2

இனி, 1. உடல் + உள்ளம் + உலகம் = உரை 2. இயற்கை > வாழ்க்கை > இலக்கியம் > இலக்கணம் என்ற சமன்பாடுகளின் அடிப்படைக்கு உரிய குறி யாது என்று உன்னுவோம்.

பேருலகம்—பேரண்டம்—Universe தோற்றத்தால் பலவாக—பலவாருக—உள்ளது. விண், மண்; விண்ணுள் கோள் பல; மண்ணுள் நிலம், நீர். நிலவகை பல; நீர் வகை பல. விண்ணுள்ளும் இருப்பனவற்றை எல்லாம் அடிப்படையில் ஐம் பூதங்களாகப் பாகுபாடு செய்யலா மன்றோ? இந்த ஐந்தையும் ஆராயவே—ஆராய்ந்து தெளியவே-ஐம்பொறிகளன்றோ?

நிலம் தீநீர் வளிவிசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் (தொல்—3:19)

* * *

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு (27)

ஐம்பொறி-புலன்கள் வாயிலாக ஆராயப் படுவது முடிவில் அனுபவம் அல்லது துய்ப்பு என்ற ஒரு நிலை—முழு நிலை—கலவை நிலை எய்தல் காண்க. ஐவகை உணர்வுகட்கும் ஐவகைப் பொருள் உலகக் கூறுகட்கும் உள்ள உறவை அடியில் வரும் படத்தை ஆழ்ந்து நோக்கி அறிந்து இன்புறுக.

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்	} உள்ளம்	→	நிலம் நீர் தீ காற்று வானம்	} உலகம்

3

இனி, இந்த அனுபவம் அல்லது துய்ப்பு எல்லாம் எதற்கு? அனுபவம் அல்லது துய்ப்பு எவ்வாறு உருவா

கிறது—திருவாகிறது—என்று நினைத்ததை நினைந்தாலே போதும்—விளங்கும். ஒன்று (உள்ளம்) பல (உலகம்) ஆகிப் பின் ஒன்ருக ஒன்றும் நிலை தானே துய்ப்பு அல்லது அனுபவம்.



ஒருள்ளம் பலவாகப் பிரிந்து ஆராய்ந்து மீண்டும் ஒரு (மு)ள்ளமாகி, துய்ப்பு நிலையில் ஒன்ருய் ஆதல் இயற்கையின் விதி! ஆம்; ஆடி ஓடி அமரும் பெருமாள் இந்த இதயம்! 'ஆய்ந்து ஓய்ந்து' போதல் அறிவின் இயற்கை! மதி குதித்தோடி ஆடிப்பாடி மதி பெறும்! வித்து மரமாகி வித்தைத் தரல் போல! கடலிலிருந்து கிளம்பிய மழை கடலாதல் போல! ஆனல், அ வினும் அ' அனுபவச் செறிவுமிக்கது என்பது தெளிவு.

4

இனி இயற்கையின்—வாழ்க்கையின்—இந்த அடிப்படைச் சட்டம் இலக்கியத்தில் எவ்வாறு இயங்குகிறது எனக் காண்போம். இதற்குத் துணை புரியும் வகையில் இலக்கியம் என்ற சொல்லையே நம் ஆய்வுக்குச் சிறிது இலக்காக்குவது இனிது.

இலக்கியம் என்ற சொல் எம்மொழிச் சொல்? அதன் வேர்ப் பொருள் யாது? வேர்ப் பொருளாலேயே ஒரு சொல் எம்மொழிக் குழந்தை என்பது விளங்கும். பொதுவாக 'லட்சியம்', 'லட்சணம்' என்ற சமசுகிருத சொற்களே முறையே 'இலக்கியம்', 'இலக்கணம்' என்று மாறின என்பர். ஆனால், இதை இறுதி முடிவாக ஏற்பதற்கில்லை! முதற் காரணம் தமிழைப் போல சமசுகிருதத்தில் 'இலக்கியம்', 'இலக்கணம்' என்ற சொற்கள் அப்பொருள் குறிக்கும் சொற்களாய் வழங்கவில்லை. பழந்தமிழ் நூல் களில் 'இலக்கணம்' (பார்க்க: பழந்தமிழ்ச் சொல்லடைவு: புதுவை இந்தியக் கலைக்கழகம்; தொகுதி 1) இருக்கிறதே தவிர 'இலக்கியம் இல்லை! இலக்கியத்தைக் குறிக்கச் செய்யுள், நூல், பனுவல் முதலிய சொற்களே வழங்கப் பட்டுள்ளன! 'இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம் பலில்' என்ற பத்தாம் நூற்றுண்டு நன்னூல் 141-ஆம் நூற் பாவிலேயே 'இலக்கியம்' என்ற சொல் முதலில் வழங்கி யுள்ளதாகத் தெரிகிறது. இதனால் 'வியாகரணம்' 'சாகித் யம்' என்ற சமசுகிருத சொற்களை வழங்காமல் பழந்தமிழர் 'இலக்கணம்' என்றும் இடைக் காலத் தமிழர் 'இலக்கியம்' என்றும் வழங்குவானேன்? அதிலும் 'இலக்கணம்' என்ற சொல்லை வழங்கிய தொல்காப்பியரும், சங்க இலக்கியச் சான்றோர்களும், திருவள்ளுவரும் 'இலக்கியம்' என்ற சொல்லை வழங்காதது ஏன்? இவ்வினுக்கள் இலக்கணம், இலக்கியம் என்ற சொற்கள் 'இலக்கு' என்னும் தமிழ் வேருடையன என்னும் விடையையும் மறைமுகமாகத் தருகின்றனவன்றே? 'இலக்கு' என்ற சொல்லும் 'இலங்கு' என்பதன் வலித்தல் விகாரமோ? இவ்வாறு எண்ணத் தூண்டுவது பழந்தமிழ் நூல்களுள் 'இலங்கு' என்னும் சொல் ஏராளமான இடங்களில் பயின்று வருவதாலேயே ஆகும். (பார்க்க: பழந்தமிழ்ச் சொல்லடைவு: தொகுதி 1)

இலக்கு' என்னும் சொல்லும், பொருளும் புறநானூற்றில் (4: 6; 260: 23) நன்கு ஆட்சி பெற்றுள்ளன. இதனினும் சிறப்புடையதாய்க் குறிக்கத்தக்கது 'எல்லே இலக்கம்' என்னும் தொல்காப்பிய (இடையியல் 21) நூற்பாவே ஆகும். இதனால் 'இலக்கம்' என்னும் சொல்லுக்கு விளக்கம் என்னும் பொருளும் இருத்தல் வெளிப்படை. எனவே இலக்கியம் இலக்கு (= குறியும் விளக்கமும்) என்னும் வேர்ப்பொருளிலிருந்து விளைந்திருக்கும் என்னும் எண்ணம் உரம் பெறுகிறது.

5

இனி, இலக்கியத்தின் 'இலக்கு' யாது? ஒன்று (தல்) எனலாம். 'பெயரே வினை'யாகும் பற்பல சொற்களுள் ஒன்று ஒன்று. ஒன்றுக்கும் வேர் 'ஒ' என்னும் ஓரெழுத்து ஒரு மொழி என்பர். (பார்க்க : சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி). இதனடியாகத் தோன்றிய 633 சொற்கள் பட்டியல் செய்யப் பட்டுள்ளன.

(பார்க்க : ந. சஞ்சீவி—எண்ணடிச் சொற்களுள் ஒன்றடிச் சொற்கள்: (Annals of Oriental Research: University of Madras: Vol. XXI—Part II).

இச் சொற்களுள் கருதத்தக்க இன்றியமையாத சிறப்புடையன சில. அவை வருமாறு :

1 ஒ—த்தல்—போலுதல், இணையாதல், ஒப்பாகல், தகுதியாதல், ஒழுக்கமுடையராதல், ஒருமைப் படுதல், இல்லாத தொன்று இருந்தாற் போலுதல்.

2 ஒக்க—ஒரு சேர, மிகுதியாக, ஒப்பாக, இணையாக.

3 ஒக்கல்—சுற்றம்.

4 ஒச்சை—உற்றுக் கேட்டல்.

5 ஓட்ட—அடியோடே, நெருங்க, இறுக, போல.
6 ஓட்டடை—நூலாம்படை, சம்பா நெல்வகை.
7 ஓட்டலன்—பகைவன்.
8 ஓட்டார்—பகைவர்.
9 ஓட்டாரக்காரன்.
10 ஓட்டாரம்.
11 ஓட்டினர்.
12 ஓட்டு.
13 ஓட்டுநர்—நண்பர்.
14 ஓடு.
15 ஓடுக்கம்.
16 ஓடுக்கு.
17 ஓண்டி.
18 ஓண்டு.
19 ஓத்தல்.
20 ஓத்து.
21 ஓப்ப.
22 ஓப்படி—அறுவடை : ஒரு வகைக் கூட்டு நிதி.
23 ஓப்படை.
24 ஓப்பந்தம்.
25 ஓப்பம்.
26 ஓப்பனை.
27 ஓப்பாரி.
28 ஓப்பி.
29 ஓப்பு.
30 ஓப்புரவு.

31 ஒரு.
32 ஒருக்கணித்தல்.
33 ஒருக்கம்—மனவொடுக்கம், ஒரு தன்மை.
34 ஒருங்கு.
35 ஒருமை.
36 ஒருவந்தம்—உறுதி, நிலைபேறு, தொடர்பு, தனியிடம்.
37 ஒவ்வு.
38 ஒற்று.
39 ஒற்றி—அடைமானம்.
40 ஒற்றுமை,
41 ஒன்றலர்—பகைவர்.
42 ஒன்றி – தனிமை, தனியாள், மணமாகாதான்,
43 ஒன்றியார் – நண்பர்; சேர்ந்தவர்
44 ஒன்று—தல் (வி)—ஒன்றுதல், இசைதல், மனங்கலத்தல், ஒருமுகப்படுதல், உவமையாதல்.
45 ஒன்று (பெ)—ஒன்று என்னும் எண் மதிப்புக்குரிய பொருள். வீடுபேறு, ஒற்றுமை, வாய்மை, இந்திரியம், சிறுநீர், அஃறிணையொருமைப்பால், ஒப்பற்றது, விகற்பப் பொருளைக் காட்டும் இசைச்சொல்.
46 ஒன்றுநன்—உள்ளம் ஒன்றியவன், நண்பன்.
47 ஒன்னலன்—உள்ளம் ஒன்றுதவர், பகைவர்.
48 ஒன்னுர்—ஒன்றூர்.
49 ஒன்னு—தல்—பொருந்துதல், பொறுத்தல்.
50 ஓர்.
51 ஓர்தல்—ஆராய்ந்தறிதல், அறிதல்.
52 ஓர்ச்சி—ஆராய்ச்சி, அறிவு, உணர்ச்சி.

53 ஓர்ப்பு—ஆராய்ந்துணர்கை, தெளிவு, பொறை.
54 ஓர்மம்—உளவுரம்.
55 ஓர்மை—ஒற்றுமை.
56 ஓர்வம்—ஒருபாற் சார்கை.
57 ஓரம்—விளிம்பு ஒரு தலைப் பக்கம்.
58 ஓவம்—ஓவியம்.
59 ஓவி—ஓவியம்.
60 ஓவியர்.
61 ஓவு—ஓவியன்.

இந்த 61 சொற்களுள்ளும் அடிப்படையானவை : (1) ஒ; (2) ஒக்க; (3) ஒச்சை; (4) ஒட்ட; (5) ஒடு; (6) ஒண்டு; (7) ஒத்தல்; (8) ஒப்ப; (9) ஒரு; (10) ஒவ்வு; (11) ஒற்று; (12) ஒன்று; (13) ஒன்னு; (14) ஓர் எனலாம்.

இவற்றுள்ளும் ஒவ்வு, ஓவம், ஓவியம், ஓவியர் ஆகிய சொற்களே ஈண்டு பெரிதும் கருதத் தக்கன. இவற்றுள்ளும் ஒவ்வு—ஓவியம் என்னும் நிலையே எண்ணற்குரியது. ஒப்பே கலையின் உயிர், அண்மையில் சென்னை ஓவியக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் திரு. கிருஷ்ணராவ் 'இழுத்து வைத்தல்' என்னும் பொருள் தரும் வகையில் Draw-ing என்ற சொல் அமைந்திருத்தலை என்னிடம் எடுத்துக்காட்டி இன்பம் செய்தார்! இவ்வடிப் படை உண்மையை விளக்கும் பழைய—புதிய இலக்கியப் பகுதிகள் வருமாறு :

வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்

—மணிமேகலை—3 : 273—9.

அரம்பை, ஊர்வசி போலுள்ள
அமரமெல் லியலார் செவ்வி
திறம்பட வகுத்த எம்மான்!
செய்தொழில் ஒப்பு நோக்க
விரும்பியே கொல்லாம் இன்று
விண்ணுல கடைந்து விட்டாய்?
அரம்பையர் நின்கைச் செய்கைக்கு
அழிதலங் கறிவை திண்ணம்

—*பாரதியார் பாடல்கள்—'ஒவியர்மணி இரவிவர்மா'*

இனி, இந்த ஒப்புமையை (Imitation) *உயிராகக் கொண்ட கலை அல்லது வாழ்க்கையின்* (Imitation of Jesus christ—Thomas Kempis *காண்க) இறுதி நோக்கு* (ultimate aim-objective) *யாது? நிறை(வு)* (Satisfaction). *'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்ற பாரதியின் புகழுரை—பொருளுரை ஆழ்ந்து கருதத்தக்கது. நெஞ்சை அள்ளும் நீர்மையே கலையின் வெற்றி. இதன் அடிப்படையும் யாது? ஒன்றில் ஒன்று படுதலே. இயல்பாக (வி(வ)கார மின்றி) இருக்கும் உள்ளத்தைக் கவ்வி—கல்வி—கலைத்து ஒன்றில் ஒன்று படுத்துவதே—ஒன்றாகவே ஆக்குவதே கலை.*



கலைதரும் இப்பயிற்சியும் மனித உள்ளத்தை ஒருமைப் படுத்திப் பெருமைப் படுத்தவே ஆகும்.

ஒருமையே பெருமையின் அடிப்படை—உயிர்—அல்லவா? கலையற்ற நிலையும் கலையுற்ற நிலையை அடைந்த பின்னாலேயே அடைவதே இயற்கை அன்றோ?

உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்

இவ்வாறு மணிவாசகர் பாடுவதும்,

கூர்த்தவறி வத்தனையும்
கொள்ளை கொடுத்து உன்னருளைப்
பார்த்தவனுன் என்னைமுகம்
பாராய் பராபரமே!

* * *

கற்றறிவால் உனை நான்
கண்டவன்போற் கூத்தாடிற்
குற்றமென்றன் நெஞ்சே
கொதிக்கும் பராபரமே!

* * *

படிப்பற்றுக் கேள்வியற்றுப்
பற்றற்றுச் சிந்தைத்
துடிப்பற்றார்க் கன்றோ
சுகங்காண் பராபரமே

* * *

கூர்த்தவறி வாலறியக்
கூடா தெனக்குரவன்
தேர்த்தபடி தானே
தெரிந்தேன் பராபரமே

இவ்வாறு தாயுமானவர் பாடுவதும் பெற்ற பின் விட்ட நிலையே அன்றிப் பெறாமலே விட்ட நிலை அல்லவே!

பெருமல் விடுவது பெரு(த)து அன்ருே? பெற்றபின் விடுவதே பண்பும் பயனும் அன்ருே? அதுவே நிறை நிலே அன்ருே? இவ்வுண்மையும்,

கல்லாதே ஞுனலும்
கற்றுணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே நின்னேத்
தொடர்ந்தேன் பராபரமே!

என்னும் தாயுமானவர் கண்ணியால் காட்சியாகுமன்ருே?

பிறை குறை. பிறை—குறை—நிலே வளர வளரவே நிறை நிலே அன்ருே? (குறை குறை. குறை —குறைநிலே—குறையக் குறையவே நிறை நிலே அன்ருே) அந்நிலே எய்தவே இரவும் பகலுமாம் இன்பமும் துன்பமும். குறையில்லா நிறைவான பொருளே — தனக்குவமை இல்லாதான் தாளே—அடைந்தாரே,

தேடாத தேட்டினரே
செங்கைத்துலாக் கோல்போல்
வாடாச் சமனிலேயில்
வாழ்வார் பராபரமே!

என்ற தாயுமாஞர் இலக்கியத்திற்கு இலக்கணமாவார், அந்நிலே—'சிந்தையின் நிறைவே செல்வம்' என்னும் நிலே. அந்நிலே எய்தாரும் அந்நிலேயை எய்த எய்யும் அம்பே—முயற்சியே—வாழ்க்கை. அதுவே வாழ்வின் இறுதி இலக்கு! வாழ்வின் இலக்கே வாழ்வை எதிரொளி—உள்ளொளி (Reflection) செய்யும் இலக்கியத்தின் இலக்கு.

★

இலக்கிய இன்பம் : வட்டங்கள் காட்டும் வளர்ச்சி

இலக்கியம் இன்பம்; இலக்கிய ஆராய்ச்சியோ இன்பத்துள் இன்பம். எனவே அதை எண்ணும் போது எட்டு வட்டங்கள் நம் கருத்துக் குளத்தில் தவழு கின்றன. அதற்குரிய படம்:



பார்க்க: பெரிய புராணப் பெருங்கவிதை - ந. சஞ்சீவி

[பெரிய புராணச் சொற்பொழிகள் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு (1960)]

இணைப்பு - II

இலக்கிய வடிவங்கள் மாறுவதற்குரிய காரணங்கள் : 12

1. இசை உணர்வு
2. நாடக உணர்வு
3. புதுமை
4. எளிமை
5. கற்பனை, நாட்டுப்புறப் பாடல்கள் முதலியன
6. அரசியல்
7. பொருளியல்
8. சமுதாயம்
9. பக்தி இலக்கியம்
10. அயலவர் தொடர்பு
11. அறிவியலின் தாக்குதல்
12. பகுத்தறிவு

சென்னைப் பல்கலைக் கழகம்
யாப்பு, பாவியல், இலக்கியத் திறனாய்வு
பாடத்திட்டம்
(கட்டாயம்)

யாப்பு, பாவியல், இலக்கியத் திறனாய்வு (Prosody, Poetics & Literary Criticism)

பிரிவு 1 : யாப்பு - [யாப்பருங்கலம் - ஒழிபியல் நீங்கலாக]

பிரிவு 2 : அணி - தொல்காப்பியம் - உவம இயல், மெய்ப்பாட்டியல் } பேராசிரியர் உரை

தொல்காப்பியம்	அகத்திணையியல்	இளம்பூரணர் உரை
,,	புறத்திணையியல்	
,,	களவியல்	
,,	கற்பியல்	
,,	பொருளியல்	
,,	மரபியல்	

பிரிவு 3 : இலக்கியத் திறனாய்வு

இலக்கியம் என்பது யாது?

இலக்கியத்தின் நான்கு சிறப்புக் கூறுகள் : உணர்ச்சி, கற்பனை, கருத்து, வடிவம். வாழும் இலக்கியம், திறனாய்வு - விளக்கமும் கூறுகளும்; திறனாய்வாளன்—தகுதிகளும் திறனாய்வு செய்ய வேண்டிய முறையும் கொள்கையும்.

கவிதையின் கூறுகள் - கவிதையும் வாழ்க்கையும்; தன்னுணர்ச்சிப் பாடல்கள் (Subjective Poetry) *- கையறு நிலை, இயன் மொழி வாழ்த்து, அகப்பொருட் பாடல்கள் முதலியன; புறநிலைப்*

பாடல்கள் (Objective Poetry) - காப்பியம், கதை பொதி பாடல்கள் (Ballads), நாடகக் கவிதை (Dramatic Poetry) முதலியன; புதினம், புதினக் கூறுகள்: கதைகளும் கதைப் போக்கும் (Plot); சிறு நாடகம்-நாடகக் கூறுகள்; சிறு கதைகள் - புதிய வடிவங்கள் அமைப்புக் கூறுகள் ஆகியவை.

* * * இவற்றின் கொள்கைகள் மட்டும் (only principles and not applications)

துணை நூல்கள் (Reference books)

1. இலக்கியத்தின் திறன் }
2. இலக்கிய மரபு } டாக்டர் மு. வரதராசனார்
3. இலக்கிய ஆராய்ச்சி }
4. கவிதையும் வாழ்க்கையும் - அ. மு. பரமசிவானந்தம்
5. இலக்கியக் கலை - அ. ச. ஞானசம்பந்தம்
6. கவிதை அனுபவம் - டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்
7. Introduction to the study of literature by W. H. Hudson
8. Principles of literary criticism by C. H. Winchester. பரிந்துரை செய்யப்பெற்ற ஆங்கிலத் துணை நூல்களினின்றும் மேற்கோள் வரிகளை வினாக்களில் அமைத்தல் கூடாது.

மொத்த வினாக்கள் - வினாத்தாள் - மதிப்பெண்கள்

4 யாப்பு - விடையிறுக்க வேண்டிய வினாக்கள் 2
மதிப்பெண்கள் 50

6 பாவியல் - விடையிறுக்க வேண்டிய வினாக்கள் 3
மதிப்பெண்கள் 75

4 இலக்கியத் திறனாய்வு - விடையிறுக்க வேண்டிய
மதிப்பெண்கள் 50

இணைப்பு - IV

சென்னைப் பல்கலைக் கழகம்

தமிழ் இலக்கியங்களை ஒட்டிய இலக்கியக் கொள்கைகள்

பாடத்திட்டம்

(விருப்பப் பாடம்)

தமிழ் இலக்கியங்களை யொட்டிய இலக்கியக் கொள்கைகள்: (Literary theories as applied to Tamil Literature) திறனாய்வாவது யாது? — அதன் பயன் — இருவகைத் திறனாய்வு - விதிமுறைத் திறனாய்வு (Inductive Criticism) மதிப்பீட்டுத் திறனாய்வு (Judicial Criticism)—திறனாய்வும் ஓர் இலக்கியமே - உண்மைத் திறனாய்வாளரின் தகுதிகள்- இலக்கியத்தை மதிப்பிடுங்கால் நேரும் சிக்கல்கள்-இலக்கியத்தின் சிறப்பியல்பை மதிப்பிடுவது எங்ஙனம்?- சில நூல்கள் நிலைத்து வாழ்வதற்குரிய காரணங்கள் - பழங்காலத் தமிழ் உரையாசிரியர்களைத் திறனாய்வாளர்களாகக் கொள்ள இயலுமா?—அவர்களுடைய திறனாய்வு முறைகள்.

இலக்கியமாவது யாது? - இலக்கியமும் வாழ்க்கையும்- இலக்கியத் தோற்றத்துக்குரிய துடிப்புகள் - இலக்கியப் பாகுபாடுகள்-தொல்காப்பியர் கூறும் இலக்கிய உணர்ச்சிகள் - இலக்கிய உணர்ச்சிகளை அளந்து மதிப்பிடுதற்குரிய நெறிமுறைகள் - கற்பனை இலக்கியத்திற்கு அதன் இன்றியமையாமை - தொல்காப்பியர் உவம இயலில் விளக்கும் கற்பனைத் திறன் - கற்பனை, வெறுங்கற்பனை இவற்றுக்குள்ள வேற்றுமை-படைப்புக் கற்பனை, இயைபுக் கற்பனை

கருத்து விளக்கக் கற்பனை - இலக்கியத்தில் 'கருத்து' பெறுமிடம் - இலக்கியத்தில் குறிக்கோள் (Idealism)- இலக்கியத்தில் உண்மைத் தன்மை அல்லது உள்ளபடி கூறல் (Realism) பெறுமிடம் — தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கியத்திற்குரிய கருத்தும் எண்ணங்களும் - வடிவம் - கருத்தும் உணர்ச்சியும் உணர்த்தும் வாயிலும் - இலக்கிய வடிவம் - உணர்ச்சி மாற்றத்திற்கேற்ப அமையும் வடிவ மாற்றம் - தொல்காப்பியர் கூறும் இலக்கிய வடிவங்கள் இலக்கிய மொழி - வண்ணம், தொடை - இலக்கிய முழு நோக்கில் காணும் வடிவங்கள் - ஒருமைப்பாடு— ஒருமைப் பாட்டிற்குரிய கூறுகள் — நடை — சிறந்த நடையை அளந்தறிதற்குரிய அடிப்படைகள்.

கவிதை :

கவிதையின் விளக்கம் - கவிதையின் கூறுகள் -யாப்பு வடிவத்தால் ஏனைய இலக்கியங்களினும் கவிதை வேறுபடல் - பல்வகைச் சீர்கள், அடிகள் - கவிதையின் கலை நுணுக்கத் திறன் (Poetic techniques) தன்னுணர்ச்சிப் பாடல் (Subjective Poetry)—சங்கப் பாடல்களில் இயன் மொழி, கையறுநிலை, அரசவாகை முதலியன - அகம் புறம் பாடல்கள் - நாடக நிலைத் தனிமொழி (Dramatic Monologue)-புற நிலைப் பாடல் (Objective Poetry)—கதை பொதி பாட்டு (Ballads)—புராணம், காப்பியம், பரணி, கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்கள் - பாட்டு வடிவிலுள்ள நாடகங்கள் - ஒவ்வொரு வகைப் பாடலின் சிறப்பியல்புகள்— கவிதைக்கும் உரைநடைப் புதினத்திற்கும் உள்ள வேற்றுமை.

புதினம் :

புதினத்தின் கூறுகள் - கதைக் கோப்பு (Plot) நெகிழ்ச்சிக் கதைக்கோப்பு (Loose Plot) - செறிவுக் கதைக்

கோப்பு (Organic Plot)—கதைக்கோப்பின் ஒருமைப்பாடு (Plot unity) — பாத்திரப் படைப்பும் வாழ்க்கை பற்றிய ஆழ்ந்த அனுபவமும் - கதைக் கோப்பிற்கும் பாத்திரத்திற்கும் உள்ள தொடர்பு - அவற்றின் இணைப்பும் விளைவும் — உரையாடல் — புதினத்தின் சூழலமைப்பு (Settings) - பொருள், சமுதாயச் சூழலமைப்பு-வரலாற்றுப் புதினத்தில் சூழலமைப்பு - புதினத்தில் உண்மைத்தன்மை அல்லது உள்ளபடி கூறலும் குறிக்கோளும் - இக்காலப் புதினங்கள் - நனவோடைப் புதினங்கள் — இக்காலப் புதினங்களில் கதைக்கோப்பு, பாத்திரங்கள், காலம் ஆகியவற்றின் சிதைவு.

சிறுகதை :

இக்கால இலக்கியங்களில் சிறுகதை பெறுமிடம் - சிறு கதையின் விளக்கம் - புதினத்திற்கும் சிறுகதைக்குமுரிய வேற்றுமை - சிறுகதைக்குரிய பொருள் - சிறுகதை மேற்கொள்ள வேண்டிய காலம் - ஒருமைப்பாட்டு விதி— உட்கோள், குறிக்கோள், செயல் ஆகியவற்றின் ஒருமைப்பாடு (Unity of motive, purpose and action)-உணர்ச்சி விளைவின் ஒருமைப்பாடு (Unity of impression) சிறுகதை அமைப்பு - சிறுகதையில் உரையாடல், வருணனை, குறிக்கோள் - சிறுகதை ஏதேனும் ஓர் உட்கோள், நோக்கம், பொருள் கொண்டமையவேண்டும் - ஸ்டீவன்சனின் மூன்று வகையான சிறுகதைகள்.

நாடகம் :

நாடகம், புதினம் இவற்றிற்குரிய வேற்றுமை -நாடகத்தின் கதைக் கோப்பு-பாத்திரங்கள் - செயல் (Action)- உரையாடல் - தனிமொழி - நாடகக் கதைக்கோப்பின் பாகு பாடுகள் - செயல் தொடக்கம், வளர்ச்சி, உச்சம் வீழ்ச்சி - முடிவு - நாடக அமைப்புகளின் இயல்புகள்

இணைக்கதைக் கோப்பு (Parallelism), எதிர்க் கதைக் கோப்பு (Contrast)—இலக்கிய நாடகங்கள், வரலாற்று நாடகங்கள் - தற்காலச் சமுதாய நாடகங்கள்-நாடகமும் வாழ்க்கையும்.

கட்டுரை :

கட்டுரை தற்கால இலக்கியங்களில் பெறுமிடம்—கட்டுரையின் விளக்கம்—தன் விளக்க இலக்கியமே கட்டுரை - சிறந்த கட்டுரையின் இயல்புகள்.

இலக்கியத்தில் இயற்கை :

இயற்கை உண்மைகளைக் கவிதை உண்மையோடு கூறல் - மரபு வழியான முறைகள் - இயற்கையைப் பயன் படுத்தும் நோக்கமும் முறையும் - இயற்கையில் இயல் பாகப் பெறுமின்பம் - இயற்கையழகில் கலைஞர்கள் கொள்ளும் ஈடுபாடு - இயற்கையினின்று அமைக்கும் உருவகங்களும் உவமைகளும் - மனித உணர்ச்சி அல்லது செயலுக்கேற்ப அமைக்கும் இயற்கையின் சூழலமைப்பு - இயற்கைக் காட்சியும் மனித நிகழ்ச்சிகளோடு அது கொள்ளும் தொடர்பும் - இயற்கை வருணனை - மனித வாழ்க்கைக்கு முரணாக அமைக்கும் இயற்கை அமைப்பு - இயற்கையும் தற்கால அறிவியலும்.

**** துணை நூல்கள் :**

1. இலக்கியத்திறன்-டாக்டர் மு. வரதராசனார்.
2. இலக்கிய மரபு- ,, ,,
3. இலக்கியக் கலை-அ. ச. ஞானசம்பந்தம்.
4. தொல்காப்பியம்-செய்யுளியல்.
5. சிறு பிரபந்தங்கள் இலக்கணம்-பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல்.
6. Introduction to the study of Literature- W. H. Hudson.

7. Principles of Literary criticism-I. A. Richards.
8. Some principles of Literary Criticism-Winchester.
9. Principles of Literary Criticism-L. Abercrombe.
10. Poetics-Aristotle
11. History of Criticism-Saintsbury.
12. A Primer of Literary Criticism-Hollingworth.
13. The problem of style-F. Middleton Murry.
14. A Window to Criticism-Murry Krieger.
15. The Philosophy of Rhetorics- I. A. Richards

தமிழ் இலக்கியங்களை இலக்கியக் கொள்கைகள் முறையில் ஆயும் முறைகளை விளக்கும் துணை நூல்கள்.

1. Treatment of Nature in Cangam Literature - Dr. M. Varadarajanar.
2. A Critical Study of Civaka Cinthamani— Dr. T. E. Gnanamurthy.
3. Landscape of Poetry-Rev. Fr. S. Thaninayagam.
4. A study of poetical works of Subramania Bharathiyar- Dr. K. Meenakshisundaram.
5. Advanced Studies in Tamil Prosody - Dr. A. C. Chettiar.

* முதன் முதலாக இந்தக் கல்வியாண்டிலேயே (1973-4 லேயே இந்த அளவிற்கேனும் பாடத் திட்டம் விளக்கமாகத் தரப்பட்டுள்ளது.

1. இந்நூல் பட்டியல் முழுமையானது அன்று; இன்னும் சற்று விரிவான - இன்றியமையாத பட்டியலுக்கு இணைப்பு - XII பார்க்க.
2. இலக்கியத் திறனாய்வு முறையினைப் பயன்படுத்தி அண்மையில் வெளிவந்துள்ள தமிழ் நூல்கள் பல. சில வற்றிற்குப் பார்க்க: பட்டியல் - இணைப்பு - XIII

சென்னைப் பல்கலைக்கழகம்

வினாத்தாள்கள்

M.A. DEGREE EXAMINATION,

APRIL 1960

(New Regulations)

Branch VII—Tamil—Part I

PROSODY, POETICS AND LITERARY CRITICISM

Time: Three Hours] [Maximum: 175 Marks.

மூன்றும் பிரிவு

"Every national literature is an expression of changing life of the nation. A thorough knowledge of the History of any period involves a familiarity with the Literature of the period." இக்கொள்கையைச் சான்றுகாட்டி நிறுவுக.

"கால அளவு வேறுபாடு, மென்மை வன்மை வேறுபாடு, எடுத்துப்படுத்து ஒலிக்கும் அழுத்த வேறுபாடு ஆகியவற்றை வெவ்வேறு வகையாக அமைத்து, அவ்வமைப்பே திரும்பத் திரும்ப வருமாறு செய்தால் பிறக்கும் இனிய ஒழுங்கே ஒலி நயம். (Rhythm)" என்பதனை ஆராய்ந்து எடுத்துக்காட்டுகளால் விளக்குக.

"சிறந்த கலைஞரின் உணர்ச்சிகள் அவ்வப்போதே கலைவடிவம் கொண்டு வெளிவருதலும் உண்டு; காலம் கழித்துத் தெளிவு பெற்று வெளிவருதலும் உண்டு."

என்னும் திறனாய்வுக் கொள்கையைத் தமிழ் இலக்கியச் சான்றுகாட்டி, ஆராய்ந்து மதிப்பிடுக.

"By poetic truth we do not mean fidelity to facts. Such fidelity we look for in science. By poetic truth we mean fidelity to our emotional apprehension of facts and to the impression which they make upon us," என்பார் கூற்றை ஏதேனும் ஒரு தமிழ்க் காவியம்கொண்டு நிறுவுக.

1961

இரண்டாம் பாகம்

புதினம் (Novel) தமிழ் இலக்கியத்தில் வளர்ந்து வந்துள்ளதை வரலாற்று முறையிற் கூறி மதிப்பிடுக.

மூன்றும் பாகம்

பண்டைத் தமிழிலக்கியத்தில் உதிரி மலர்களைப் போன்ற தனிச் செய்யுட்களே இடம் பெற்றிருக்க, பாமாலை போன்ற தொடர்நிலைச் செய்யுட்கள் எழாமைக்குரிய காரணங்களை ஆராய்க.,

"It is power to appeal to the emotions that gives a book permanent interest and consequently literary quality," என்னும் கொள்கை பற்றிய உமது கருத்தைத் தமிழ்க் கவிதைகளோடு இணைத்து ஆராய்ந்து, எடுத்துக்காட்டி நிறுவுக.

"இலக்கியக் கலையோ ஏடுகளைவிட மக்கள் மனத்திற் குடிகொள்ளுமியல்பினது. ஆகையால், மக்கள் வழிவழிக் காத்துவரும் ஓவியம், சிற்பம் ஆகியவற்றைவிட நெடுங்

காலம் வாழுவல்லதாகும்," என்னும் கூற்றுற் பெறப்படும் இலக்கியச் சிறப்பு மேம்பாட்டைச் சான்றுகள் காட்டி விளக்குக.

"It is one chief characteristic of poetry then, that whatever it touches in life, it relates to the feelings and passions, while at the same time by the exercise of imaginative power, it both transfigures existing realities and gives to airy nothing a habitation and a name," என்பார் கூற்றை ஏதேனும் ஒரு தமிழ் நூல் கொண்டு மதிப்பிடுக.

1962

PART—I

உவமைத் தோற்றக் கூறுபாடுகளை எடுத்துக் காட்டுகள் தந்து விளக்கி அவை 'நாலிரண்டாகும் பாலுமாறுண்டே' என்பதனுல் எய்தும் நிலையினையும் புலப்படுத்துக.

இலக்கியங்கள் எடுக்கும் பல உருவங்களை (forms) ஆராய்ந்து அவை அவ்வுருவங்களை அடையும் முறையை மதிப்பிடுக.

PART—III

"An experience is characterised not only by its substance, but also by the unity in which its substance is held. To communicate an experience is therefore to communicate both its substance and its unity," என்பார் கூற்றை ஏதேனும் ஒரு தமிழ் இலக்கிய நூல்கொண்டு மதிப்பிடுக.

''பாட்டைப் பாடிய புலவரின் உணர்ச்சி அனுபவம் ஒன்றுண்டு. படிப்பவரின் உணர்ச்சி அனுபவம் ஒன்றுண்டு.

இந்த இரண்டும் ஏறக்குறைய ஒன்றேயாய் விடின் படிப்பவர் பாட்டை நுகரும் தகுதி பெற்று விட்டார் எனக் கொள்ளலாம்," என்னும் இலக்கியத் திறனாய்வுக் கொள்கையை ஆராய்ந்து கம்பராமாயணம் அல்லது சிலப்பதிகாரக் காவிய மாந்தரில் ஒருவரை நீர் சுவைத்த அனுபவங்கொண்டு விளக்குக.

"A literary critic must be adept at experiencing without ecentricities, the state of mind relevent to the work of art he is studying" என்னும் விதியைக் குறுந்தொகை அல்லது அகநானூற்றைச் சுவைப்பதில் எவ்வாறு செயல்படுத்துவீர் எனச் சான்றுகளுடன் கூறுக.

"பாட்டில் இருவகைச் செல்வம் உண்டு. ஒன்று ஒலிநயம் என்னும் செல்வம், ஒன்று உணர்வு என்னும் செல்வம். இந்த இரண்டும் சிறப்புற அமைவதே சிறந்த பாட்டு" என்னும் திறனாய்வு உண்மையை, இவை இரண்டும் அமைந்த ஒரு தமிழ்ப் பாட்டைக் கொண்டு புலப்படுத்துக.

1963

மூன்றும் பாகம்

"The art of literature is the art of communicating in language, experience valued as such and enjoyable for its own sake," என்னும் கூற்றைக் கம்பராமாயணம் அல்லது பெரிய புராணம் மாந்தர் ஒருவர் மேல் வைத்து ஆராய்க.

"Words fall into their places without the poets' conscicous control and a feeling of rightness of inevitability is commonly his sole conscious ground for his certainty that he

has ordered them a bright," என்னும் திறனாய்வுக் கொள்கையை ஆராய்ந்து சங்கச் சான்றோர் பாடல்களிலிருந்து புலப்படுத்துக.

அறிவியலுக்கும், செய்யுளுக்கும் உரிய அடிப்படை வேற்றுமைகளை நன்கு விளக்கி வரைக.

"There is in fact a large group of noble and pleasurable emotions that can be looked in any high degree only by the spectacle of pain in some form." என்னும் உண்மையைப் புறநானூற்றுப்பாடல்கள்கொண்டு விளக்குக.

1964

PART III

The subject in poetry is not so much the thing talked of as the poet's relation with that thing. It is that thing seem through his temperament, idealised and transfigured by his imagination emotionally released in his sensitive being- இக்கூற்றின் உண்மையை அகநானூறு பாடல் கொண்டு விளக்குக.

The style is not the coat of a writer but his skin." இதன் உண்மையைத் திருக்குறள் பாடல் கொண்டு விளக்குக.

தமிழ் மொழியில் நாடகத்தின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் விளக்குக.

சிறு கதைகள் எழுதுவோரின் நோக்கத்தையும், சிறுகதைகளால் விளையும் பயன்களையும் நீவிர் அறிந்த ஒரு சிறுகதையினைக் கொண்டு விளக்குக.

1965

பிரிவு-இ

"We must regard the writer as the creator as well as the creature of his time."- இதன் உண்மையைத் திருவள்ளுவரைக் கொண்டு விளக்குக.

"நிழற்படத்திற்கும், ஓவியத்துக்கும் எவ்வளவு வேறுபாடு உண்டோ அவ்வளவு வேறுபாடு உண்டு வரலாற்றிற்கும் காவியத்துக்கும்." - இதன் உண்மையைச் சிலப்பதிகாரம் கொண்டு விளக்குக.

சிறந்த தத்துவஞானியாக இல்லாத ஒருவனுல் சிறந்த புலவனுக இருக்க முடியாது - Discuss.

தமிழ் இலக்கிய வகைகளுள் வாழ்க்கை வரலாற்று இலக்கியம் (Biography) பெறும் இடத்தையும், அதன் தோற்றத்தையும், வளர்ச்சியையும் தொகுத்துரைக்க.

1966

PART III

"The art of the artist is to hide the art and the business of the critic is to reveal it." - இதன் உண்மையைத் திருவள்ளுவரையும் பரிமேலழகரையும் கொண்டு விளக்குக.

இலக்கியந் தோன்றுதற்குக் காரணமான துடிப்புகளைக் (impulses) கூறி அவைகளுள் இரண்டை கம்பராமாயணத்தைக் கொண்டு விளக்குக.

"இலக்கியத்தின் உருவமும் பொருளும் ஒன்றோடொன்று இணைந்த தொடர்புடையன வாயினும் அவை

லன்றல்ல; வெவ்வேருனவையே." - இதன் உண்மையைப் புலப்படுத்துக.

சிறுகதையின் கட்டுக்கோப்பை விளக்குக.

1967

PART III

"Poetry is an interpretation of life through imagination and feelings." - இதன் உண்மையை மணிமேகலையைக் கொண்டு விளக்குக.

"'The maxim 'Art for Art's sake' is meaningless, and is employed usually as an apology for a weak and licentious art." - இதன் உண்மையைப் புலப்படுத்துக.

'Subjective poetry', objective poetry' என்னும் பாகுபாடு, அகம், புறம், என்னும் பாகுபாட்டுடன் பொருந்துமா என ஆராய்க.

"Drama is the most rigorous form of literary art; prose fiction is the loosest." - இக்கூற்றில் அமைந்துள்ள உண்மையைத் தெளிவுசெய்க.

1968

PART III

"The art of the artist is to hide the art and the business of the critic is to reveal it."- இவ்வுண்மையினைத் திருவள்ளுவரையும், பரிமேலழகரையும் கொண்டு விளக்குக.

"அறிவியல் விட்ட இடத்திலிருந்து செய்யுள் தொடங்கி, பொருள்களுக்கும் உளச்சுவைகளுக்கும் உள்ள

தொடர்பைத் தோற்றுவித்துக் கற்பனை இன்பத்தை மிகுவிக்கின்றது." - இதன் உண்மையைச் சங்கச் செய்யுட்களுடன் தொடர்புபடுத்திக் காட்டுக.

பெரும் புலவர்கள், காலத்திற்கும் மொழிக்கும் கட்டுப்படாது அவை இரண்டையும் தம் வயப்படுத்துவர் என்பதைக் கம்பரைக்கொண்டு புலப்படுத்துக.

புதினத்திற்கும், நாடகத்திற்கும் இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குக.

1969

Section III

"கல்வியே கற்புடைப் பெண்டிர். அப்பெண்டிர்க்குச் செல்வப் புதல்வனே தீங்கவியாம்";—இங்கே தீங்கவியைச் செல்வப் புதல்வன் என்ற கருத்தைச் சான்றோர் ஒருவருடைய புலமை வாழ்வில் எடுத்துக்காட்டி நிறுவுக.

பெருங்காப்பியங்கள் பற்றி ஆங்கிலப் புலவர்களும் தமிழ்ப் புலவர்களும் கூறும் இலக்கணங்கள் யாவை? ஒற்றுமை வேற்றுமைகட்குக் காரணம் கூறுக.

"The function of poetry is not to systematize the actual or to direct action but to present itself or its meaning for contemplation." இவ்வுண்மையைத் திருவள்ளுவரையோ திருவாதவூரரையோ துணைப்பற்றி விளக்குக.

"The mirror of drama and fiction should be a concentrating mirror which makes of a mere gleam a light and of light a flame." நீங்கள் படித்த புதினங்களில் ஒன்றும் நாடகங்களில் ஒன்றும் கொண்டு இக்கருத்தை விளக்குக.

1970

பிரிவு-இ

"அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே," என்ற கருத்துப்பற்றி இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் கூறுவன யாவை? முறைப்படுத்தி எழுதுக.

கல்வித்துறைப் பாடதிரல்களில் காணப்படும் ஆங்கில நாவல்களைப்போல் தமிழ் நாவல்கள் அமையாமைக்குரிய காரணங்கள் இவையெனப் புலப்படுத்துக.

சிறுகதைத்தொகுதியொன்றிற்கு மதிப்புரைவழங்கிய அறிஞர், "நம் நாட்டில் சிறு கதை நூல்கள் இன்னும் இளமைப் பருவத்தே உள்ளன," என்று எழுதுகிறார். இதன் உண்மையை ஆராய்க.

திரு. வி. க., மறைமலையடிகள், ரா. பி. சேதுப்பிள்ளை ஆகியோர் சொல்லிலும், எழுத்திலும் இனிய பாட்டையும் காணலாம்; தெளிந்த உரையையும் காணலாம் என்பர். அங்ஙனமாயின் பாட்டு நடைக்கும், உரைநடைக்கும் உள்ள அமைதிகள் யாவை?

இலக்கிய நாடகம், மேடை நாடகம், வானொலி நாடகம் என்பனவற்றின் குறிக்கோளும் அமைப்பும் முறையே எழுதுக.

1971

பிரிவு—இ

தொல்காப்பியர் காலத்து இலக்கிய ஆராய்ச்சிக்கும் இக்காலத்து இலக்கிய ஆராய்ச்சிக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தெளிந்து கூறுக.

கனவு-நனவு-கற்பனையுலகுகளின் வேந்தர்கள் புலவர்களே-இவ்வுண்மையைக் கம்பர் அல்லது பாரதியாரின் புலமை நலத்தின் துணைகொண்டு மெய்ப்பிக்க.

"In a single line, sometimes in a single epithet, the poet can flash upon our imagination, a picture that seem filled with passionate emotion." இவ்வுண்மையை அன்பினைந் திணையிலக்கியங்களில் ஒன்றன் துணைகொண்டு விளக்குக.

"கலையின் வடிவமே (Form) கலைஞரின் உள்ளத்தையும் கற்பவரின் உள்ளத்தையும் தொடர்பு படுத்துவது." இவ்வுண்மையைச் சிறந்ததொரு புதினத்தின் துணைகொண்டோ, திரு. வி. க. அவர்களின் நூல்களில் ஒன்றின் துணைகொண்டோ விளக்க முயல்க.

மரபுகளிலிருந்து விடுதலை பெற்றால்தான் நல்ல இலக்கியங்கள் உருவாகும் என்பார் கருத்தினை நடுவுநிலை பிறழாமல் ஆராய்க.

1972

பிரிவு—இ

இலக்கியத் திறனாய்வின் அடிப்படைகள் (Fundamentals) யாவை என்பதை நன்கு விளக்குக.

உரை நடைக்கும் கவிதைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நன்கு புலப்படுத்துக.

இலக்கியக் கலையின் சிறப்பை உணரப் பிற கலைகள் பற்றிய அடிப்படை அறிவு இன்றியமையாததா என்பதை ஆராய்க.

கவிதைக் கலை பற்றிச் சங்க காலந்தொட்டுக் கவிஞர்கள் சொல்லி வந்துள்ள கருத்துகள் திறனாய்வுக்

கலைக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதைச் சான்று களுடன் விளக்குக.

இலக்கிய நுகர்ச்சிக்கு இலக்கண அறிவு இன்றியமையாதது என்பதைச் சான்றுகளுடன் நிறுவுக.

APRIL 1972

(New Regulations)

பிரிவு—இ

"கலை, வாழ்வில் மலர்வது, வாழ்வால் வளர்க்கப் பெறுவது, வாழ்வை மலர்விப்பது" (அட்சன்)—ஆராய்க.

கற்பனையும் ஓசை நயமும் சங்க இலக்கியங்களைவிட இடைக்கால இலக்கியங்களில் மிகுந்துள்ளன என்பதை ஆராய்க.

தமிழ்க் காப்பியங்கள் தலைவர்களைக் காட்டிலும் தலைவியர்களுக்கே ஏற்றம் தருகின்றன என்பதனை ஆராய்க.

"சீரிய இலக்கியம் அறக்கூறுகள் கொண்டிருத்தல் வேண்டும்," என்பார் கூற்றின் வன்மை மென்மைகளை ஆராய்க.

(New Regulations) 1973

பிரிவு—இ

கவிதையின் உயிர் எது? தக்க எடுத்துக்காட்டு களுடன் நன்கு நிறுவுக.

இலக்கியத் திறனாய்வின் இன்றியமையாமையை நன்கு விளக்குக.

இலக்கியத்திலும் வாழ்க்கையிலும் கற்பனை பெறும் இடத்தை நன்கு ஆராய்க.

தமிழில் நாடகக் கலையின் வளர்ச்சியை நன்கு விளக்குக.

'உற்று நோக்குதலும் ஒப்பு நோக்குதலும் இலக்கியத் திறனாய்வின் இரு கண்கள்,' என்னும் கூற்றின் உண்மையை ஊன்றி ஆராய்க.

(Old Regulations) 1973

பிரிவு—இ

இலக்கியத்தின் அடிப்படைப் பண்புகள் யாவை என்பதை நன்கு விளக்குக.

இலக்கியத் திறனாய்வாளனுக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் திறங்களைக் காரணங்களுடன் எழுதுக.

சிறுகதைக்கும் நாவலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நன்கு புலப்படுத்துக.

தமிழில் கட்டுரைக் கலையின் வளர்ச்சியை ஆராய்க.

தமிழில் திறனாய்வுக் கூறுகள் நிறைந்த இலக்கியங்கள் செய்யுள் வடிவிலும் தோன்றியுள்ள சீர்மையை ஆராய்க.

(New Regulations) 1974

பிரிவு—இ

கவிதைக்கும் அறிவியலுக்கும் உள்ள வேறுபாடு என்ன? அறிவியலுண்மை கவிதையில் கலையாக மாறும் பான்மையை எடுத்துக் காட்டுகளால் தெளிவுறுத்துக.

இக்காலத்தில் முற்காலம் போல் காவியங்கள் தோன்றி வளராமைக்குரிய காரணங்களைப் புலப்படுத்துக.

சமயம் முதலிய வேறு காரணங்களுக்காகப் படைக்கப் பெறும் நூல் இலக்கியச் சிறப்பு எய்துவதில்லை என்பார் கூற்றின் வன்மை மென்மைகளை ஆய்க.

நீதி நூல்கள் இலக்கியம் எனப் போற்றத் தக்கனவா என்பதை ஆய்க.

சிறுகதையின் அமைப்புப்பற்றி விளக்கம் தருக.

இணைப்பு - VI

M. A. DEGREE EXAMINATION,

APRIL 1960

(New Regulations)

Branch VII—Tamil-Part II

Optional Subject : LITERARY THEORIES AS APPLIED TO TAMIL LITERATURE

1. "The separation of poetic experience from its place in life and its ulterior worths involves a definite lopsidedness, narrowness and incompletenesss in those who preach it sincerely," என்பார் கூற்றை ஆராய்ந்து, அது தமிழ் இலக்கியத்துக்குப் பொருந்துமாற்றைப் புலப்படுத்துக.

2. தமிழ் இலக்கியத்தில், திணைகள், இயற்கையமைப்புக்கு ஏற்றவாறே அமைந்து உரிப்பொருள் உணர்த்துவதை விளக்குக.

3. சங்க காலத்தில் உரைநடை தமிழில் எவ்வள விலும் எவ்வகைகளிலும் பயின்று வந்தது என உறுதி செய்க.

4. கற்பனை, இலக்கியத்தில் பெற்றிருக்கும் இடத்தை ஆராய்ந்து அதன் இன்றியமையா வகைகளை விளக்குக.

5. புதினம் (novel) என்னும் இலக்கியப் படைப்பின் கட்டுக்கோப்பையும் அது நுவலும் பொருளையும் எடுத்துக் கூறுக.

6. இலக்கிய வகைகள் (literary forms) உருவெடுப்பது என்பது பொதுச் சொற்களை (ordinary words) எழிலுறத் தொகுத்து அடிப்படைக் கருத்தோடு (primary sense) அமைப்பதாகும் என்பார் கூற்றைத் தமிழ் இலக்கிய மரபு வழுவாது மதிப்பிடுக.

7. "Drama is not a pure literature. It is a compound art in which the literary element is organically bound up with the elements of the stage setting and histrionic interpretation," என்னும் கூற்று தமிழ் நாடகத்துக்கு எவ்வளவிற் பொருந்துமென ஆராய்க.

8. இலக்கியக் கலைக்கும் (Literary Art) அறிவியற் கலைக்கும் (Sciences) உள்ள அடிப்படை வேற்றுமைகளை ஆராய்க.

1961

1. "The production of vivid images usually visual images is the commonest thing, which is referred to by imagination," என்னும் இலக்கியக் கொள்கையை ஆராய்ந்து, சான்றுகளுடன் விளக்குக.

2. தமிழகத்துப் போர் முறைகள் தமிழ் இலக்கணத்தின் ஒரு பகுதியாகவே வரையறுக்கப் பட்டிருப்பதன் பான்மையையும் அதன் அமைதியையும் ஆராய்க.

3. அறநூல்கள் இலக்கியமாகுமா என நன்கு கருதி, உமது முடிவைப் பதினெண்கீழ்க் கணக்கு அறநூல்களுள் ஒன்று கொண்டு விளக்குக.

4. இலக்கியத் தோற்றத்துக்குரிய காரணங்களாகத் திறனாய்வாளர் கண்டுள்ள துடிப்புகள் (impulses) யாவை? அவற்றுள் ஒன்றைத் தற்காலத் தமிழ் இலக்கியத்திலிருந்து விளக்குக.

5. சுவைகள் (emotions) தமிழிலக்கியங்களில் இணைபிரியாது, மலரும் மணமும் போல் அமைந்திருப்பதைச் சங்கப் பனுவல்கள் கொண்டு புலப்படுத்துக.

6. "தண்டி, மாறன் முதலிய அலங்கார நூல்களுள் கூறப்படும் சொல்லணிகள் முற்றிலும் வேண்டாதவை." என்பார் கூற்றை ஆராய்ந்து அதுபற்றிய உமது கருத்தைத் தக்க காரணங்களுடன் நிறுவுக.

7. "The surprising is necessary in tragedy, but the Epic poem goes further and admits even the improbable and incredible, for which the highest degree of the surprising results, because there the action is not seen," என்னும் கூற்றை ஆராய்ந்து அது தமிழிலக்கியத்துக்கும்பொருந்துமாற்றைப் புலப்படுத்துக.

8. "An essential characteristic of Literature is that, it yields aesthetic pleasure by the manner in which its theme is handled," என்னும் கூற்றினைச் சான்று காட்டி விளக்குக.

1962

1. "The Arts are our store house of recorded values and spring from and perpetuate hours in which the varying possibilities of existence are most clearly seen, and the different activities which may arise are most exquisitively reconciled," என்னும் கலைவெளிப்பாட்டுக் கொள்கையில், இலக்கியத்தின் நிலையை ஆராய்ந்து, பத்துப்பாட்டில் ஏதேனும் ஒன்றிலிருந்து எடுத்துக்காட்டி நிறுவுக.

2. "அந்த மணி நேரத்துக்குரிய நூல் என்றும், எந்தக் காலத்துக்குமுரிய நூலென்றும்" நூல்களைப் பிரிப்பதற்குரிய காரணங்களை ஆராய்க.

3. நாடக இலக்கணமும், அதற்கேற்றவாறு தமிழில் நாடகம் வளர்ச்சியுற்றிருப்பதும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

4. இடைக்காலத் தமிழ் நூல்களின் கற்பனைத் திறத்தைச் சங்க நூல்களின் கற்பனைத் திறத்தோடு ஒப்பிட்டுச் சான்றுகளுடன் மதிப்பிடுக.

5. "The excellence of diction consists in being perspicuous without being mean. The most perspicuous is that which is composed of c‚mmon words but at the same time it is mean," என்பார் கூற்றைக் கருதி, இதில் நீர் காணலுறும் உண்மையினை இருபதாம் நூற்றாண்டுப் புலவர் ஒருவர் பாடல்களிலிருந்து விளக்கிக் காட்டுக.

6. "இலக்கியப் பூஞ்சோலையின் வெளியே நின்று அதன் வேலியையும், வேலியாக வளர்ந்த முட்புதர்களையும், வேலியை வளர்த்தவர்களையும், வேலிக்குப் பக்கத்தில் வீழ்ந்து கிடப்பனவற்றையும் காணும் காட்சி மட்டும் ஆராய்ச்சி அன்று," என்னும் இலக்கிய மரபு முறையை ஆராய்ந்து ஆதாரம் காட்டி முடிவு கட்டுக.

7. The poet wants to conceal from the point of view for a little, while a certain idea, and at the time he wishes that the idea should be understood in an agreeable way," என்னும் இலக்கிய மரபு தமிழ் இலக்கியத்துக்கும் பொருந்துமா என, ஏதேனும் ஒரு தமிழிலக்கிய நூலின் துணைகொண்டு ஆராய்க.

8. To say that Literature grows directly out of life, is of course to say that it is in life, that we have to seek the sources of literature," என்பார் கூற்றை ஆராய்ந்து சான்றுகள் தந்து உறுதி செய்க.

1963

1. "Poetry for Poetry's sake" - an experience which is an end in itself, and is worth having on its own account, has an instrinic value," என்னும் இலக்கியக் கொள்கையை அகநானூற்றில் அல்லது புறநானூற்றில் இருந்து எடுத்துக் காட்டிவிளக்குக.

2. "அன்பின் ஐந்திணையில்" முதற்பொருட் கூறுகள் இயற்கைக்கு ஏற்றவாறு அமைந்துள்ளமையைச் சான்றுகள் தந்து நிறுவுக.

3. 'இலக்கியத்தில் பலவகையான உணர்ச்சிகளும் இடம் பெறுகின்றனவெனினும், மகிழ்ச்சி, வேடிக்கை, கவலையற்ற மனநிறைவு, முதலியவற்றைவிட, அச்சம், துயரம், கவலை முதலிய உணர்ச்சிகளையுடைய இலக்கியம் விரும்பிப் படிக்கப்படுகிறது," என்னும் நியதியைத் தமிழ் இலக்கிய நூல் ஒன்றின் வழி விளக்குக.

4. இலக்கியங்களில் செய்யுளே உரைநடைக்கு முன் தோன்றியிருப்பதைத் தமிழ் இலக்கியத்தோடு இணைத்துக் காரணங்கள் காட்டிப் புலப்படுத்துக.

5. "The novel owes its existence to the interest which men, and women everywhere and at all times have taken in men and women and in the great panorama of human passion and action," என்னும் கூற்றை ஒரு தமிழ்ப் புதினம் (novel) ஒன்றில் வைத்து ஆராய்க.

6. Imitation then being thus natural to us, and secondly melody and rhythm being also natural, those persons in whom originally these propensities were the strongest were naturally led to rude and extemporaneous attempts which gradually improved and gave birth to Poetry", என்னும் முடிவு பொருந்துமாற்றை எட்டுத்தொகையில் அகத்திணைப் பாடல் கொண்டு விளக்குக.

7. தெய்வ அருட்பாடல்களும் இலக்கிய வளர்ச்சிக்கு உதவியுள்ளமையைச் சைவத் திருமுறைகள் அல்லது ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் துணைகொண்டு ஆராய்க.

8. "A beautiful thought clothes itself in a beautiful garb without conscious effort on the part of the poet," என்னும் உண்மையைத் தற்காலத் தமிழ் இலக்கியத்தினின்று விளக்கிக் காட்டுக.

1964

1. "The aim of poetry is to represent the universal through the particular, to give a concrete and living embodiment of a universal truth," என்னும் கருத்தை, சங்க கால இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டி விளக்குக.

2. அகப் பொருளுக்குரிய ஐந்திணையின் முதல், கருப் பொருட்கூறுகள், மக்கள் வாழ்க்கை முறையுடன் தொடர்புற்று அமைந்துள்ளமையை ஏதாவதொரு திணை கொண்டு விளக்குக.

3. "Poetry, Music, and Dancing constitute in Aristotle a group by themselves, their common element being imitation by means of rhythm,-rhythm which admits of being applied to words, sounds and movements of the body."- இக்கூற்று தமிழிலுள்ள இயல், இசை, நாடகத்துடன் தொடர்புற்றிருக்கு மாற்றை விரித்தெழுதுக.

4. "இலக்கியத்திலிருந்து இலக்கணம் தோன்றும்," என்பதைத் தமிழ் இலக்கிய வரலாற்றிலிருந்து எடுத்துக் காட்டுகள் தந்து ஆராய்க.

5. "A novel is really great, only when it lays foundation broad and deep in the things which most constantly and seriously appeal to us in the struggles and fortunes of our common humanity," என்னும் கூற்றை, தமிழ்ப் புதினம் (novel) ஒன்றில் வைத்து ஆராய்க.

6. "Every dramatic story arises out of some conflict-some clash of opposed individuals or passions or interests," என்னும் கருத்தை சிலப்பதிகாரம் கொண்டு விளக்குக.

7. நாடோடிப் பாடல்களும் (folk-songs) தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவியுள்ளமையைப் பள்ளுப் பாட்டு, குறவஞ்சி என்னும் நூல்களின் துணைகொண்டு ஆராய்க.

8. "A rhythm which we only ascribe to sounds, is actually a rhythm of the mental activity through which we apprehend not only the sound of the words but their sense and feeling," என்னும் உண்மையைத் தற்காலத் தமிழ் இலக்கியத்தினின்று விளக்கிக் காட்டுக.

1965

1. "கலை, கலைக்காகவே" — இக்கொள்கையை ஆராய்ந்து, உமது முடிவு கூறுக.

2. உணர்ச்சி, கற்பனை, வடிவம் — இவை ஏதாவதொரு தமிழ்க் காப்பியத்தில் நன்கு அமைந்திருக்குமாற்றை விளக்கிக் காட்டுக.

3. "In nearly all poetry, the sound and feel of the words, in opposite to its Content, get to work first; and the sense in which the words are taken, is subtly influenced by this fact." இக்கருத்துப்படி பாரதியின் பாடல்களில் சொல்லின் பொருளைக் காட்டிலும் உணர்ச்சியே முதலிடம் பெறுவதைக் காட்டுக.

4. "இலக்கியத்திற்கு உணர்த்தும் ஆற்றல் இருத்தல் இன்றியமையாதது; எழுத்தாளன் தான் அனுபவித்ததைப் பிறர் அனுபவிக்குமாறு உணர்த்துதல் இல்லையேல், அது இலக்கியம் ஆகாது."—இதற்குத் தமிழ் இலக்கியத்திலிருந்து எடுத்துக் காட்டுகள் தந்து விளக்குக.

5. "He said that he looked to prose to tell him something he did not know before, to poetry to tell him something he knew already." இவ்வாறு கூறியது பொருந்துமாவென ஆராய்க.

6. நூல்களை ஆய்ந்து தீர்ப்புக்கூறுவோருக்கு இருக்க வேண்டிய திறன்களையும், இலக்கிய உலகில் அவர்கள் ஆற்றும் தொண்டினையும் பற்றி எழுதுக.

7. "Probably, nine-tenths of all fiction is built up around the passion of early love between the sexes. This is inevitable and that for a variety of reasons." - தமிழ்ப் புதினங்களுக்கு, இத்தகைய முடிபு பொருந்துமாவென ஆராய்க.

8. "The highest literature must always have a distinclty ethical character." - இந்த முறையில், அரிய அறநெறிகளைத் தன்னகத்தே அடக்கிக் கவிதையின்பத்தையும் அளிக்கும் ஏதாவதொரு சிறந்த தமிழ் நூலைப் பாராட்டி எழுதுக.

1966

1. தமிழகத்துப் பண்டைப் போர் முறைகள், தமிழ் இலக்கணத்தின் ஒரு பகுதியாகவே வரையறுக்கப் பட்டிருப்பதன் மரபை ஆராய்ந்து, அது எவ்வளவில் அமையும் எனவும் மதிப்பிடுக.

2. "இலக்கிய ஆராய்ச்சியில் கருத்து வேற்றுமைக்கு இடந்தரும் பண்பாடு வேண்டும்," என்னும் இலக்கிய ஆராய்ச்சி மரபைச் சிலப்பதிகாரம் அல்லது மணிமேகலை காப்பிய ஆராய்ச்சிகளில் இருந்து சான்று காட்டி முடிவு கட்டுக.

3. "That Language is elevated and remote from vulgar idiom, which employs unusual words. By unusual, words I mean foreign, metaphysical extended - all in short that are not common words," என்னும் கூற்றை ஆராய்க.

4. "The nature of Poetry is to be not a part, nor yet a copy of the real word, but to be a world by itself independent, complete, autonomous," என்பார் கூற்றின் பொருத்தத்தைப் புலப்படுத்துக.

5. ஒரு புதினத்தின் (Novel or prose fiction) சிறப்பியல்புகளை (Characteristics) ஆராய்ந்து ஏதேனும் ஒரு தமிழ்ப் புதினத்தின் துணைகொண்டு உமது விடையை விளக்குக.

6. இசைத்தமிழ், தமிழ் இலக்கியத்தின் ஓர் இன்றியமையாத உறுப்பாய் ஒன்றுபட்டுக் கிடப்பதன் உண்மையை உணர்த்தி, இசைத்தமிழ் இலக்கிய வளர்ச்சியை வரலாற்று முறையில் சுருக்கிக் கூறுக.

7. "Biographical criticism makes you stray from the work of art and forces you to work on the biography of the post," என்னும் கொள்கை எம்மட்டில் வலியுடைத்தெனக் குறிப்பிடுக.

8. "பாட்டில், புலவர் தம் சொந்த உணர்ச்சியைக் கூறாமல் கற்பனையில் படைத்த மாந்தரின் உணர்ச்சியை வடித்திருப்பாராஞல், அந்த உணர்ச்சி அனுபவம் படிப்பவருக்கும் ஏற்பட்டது எனின், பாட்டை நுகரும் தகுதி பெற்றுவிட்டதாகக் கொள்ளலாம்," என்னும் கவிச்சுவை நுகர்வுக் கொள்கையை, நீர் சுவைத்த பாடப்பகுதிகளின் துணைகொண்டு புலப்படுத்துக.

1967

1. தமிழ் இலக்கியத்தை அகம் புறமென இருகூறுக்கி அமைத்துள்ளதன் அமைதியை ஆராய்ந்து, 'அது அறம், பொருள், இன்பம், வீடு' என்ற நானெறிப் பாகுபாட்டோடு முரணுமா என்பதனையும் மதிப்பிடுக.

2. இரக்கமும் அச்சமும் (Pity and fear) இலக்கியங்களில் இணைத்து அமைக்கப் பெறுகின்றன. இவை தன்னெடுப்பு (Self regarding instinct) என்னும் இயல்பு ஊக்கத்தினின்று முளைக்கின்றன. நமக்கும் இது போன்ற ஒரு துன்பம் நிகழலாம் என்னும் உணர்விலிருந்து இரக்கம் தோன்றுகின்றது என்பார் கூற்றைப் பாஞ்சாலி சபதம் அல்லது சிலப்பதிகாரக் கண்கொண்டு ஆராய்க.

3. "செய்யுள் செய்யுளுக்காகவே" என்னும் இலக்கியக் கொள்கையை,

"Poetry may also have an ulterior value as a means to culture or religion because it conveys instruction or softens passion or furthers a quiet conscience."

என்பதோடு இணைத்து ஆராய்ந்து முடிவு கட்டுக.

4. "ஒரு காலத்தில் நிகழ்ந்ததை, மற்றோர் காலத்திலும், ஓர் இடத்தில் நிகழ்ந்ததை மற்றோர் இடத்திலும் படைத்துக் கொள்ளும் கற்பனைத்திறன் போலவே, எக்காலத்திலும் எவ்விடத்திலும் இல்லாததைப் படைத்துக்கொள்ளும் கற்பனைத்திறமும் உண்டு," என்னும் கூற்றை ஆராய்ந்து மணிமேகலை கொண்டு தெளிவுபடுத்துக.

5. "While the direct self portrayal through a person's own speech must always constitute the principal means of characterisation by dialogue, it may be greatly reinforced by what other people say about him either to his face or among themselves," என்னும் கூற்றில் பொதிந்துள்ள மரபை, நீர் படித்துக் கண்டுள்ள யாரேனும் ஒரு நாடகத் தலைவரின் குணநலம் கொண்டு விளக்குக.

6. "காவியத்திலும் கதையிலும் வரும் மாந்தர் சொல்வன அல்லாமல் அவர்களுக்குப் பின்னே இருந்தவாறு அவர்களின் வாயிலாக ஒருவர் பேசுவது போல் உணர்கிறோம். அவ்வாறு பேசுவது நூலாசிரியரின் குரலானால், அந்தக்குரலின் சிறப்பியல்புதான் அவருடைய நடை எனப்படும்," என்பார் இலக்கியத் திறனாய்வாளர். இந்த அடிப்படையில் கம்பர் அல்லது சேக்கிழார் நடையைப் பற்றி ஒரு பாராட்டுக் கட்டுரை வரைக.

7. "Historical criticism is felt to be defective in this way that it takes you away from the work of art and makes

you move along an inartistic path investigating the artists environment, his age, race and the poetic school which he belonged,'' என்பார் சொல்வதை ஆராய்ந்து இது பற்றிய உமது கருத்தினைச் சான்றுகளுடன் நிறுவுக.

8. தற்காலத்தில் புராணக்கதைக் காலப்போக்குச் சொற்பொழிவுகள் (கதாகாலக்ஷேபங்கள்) வானொலியை உள்ளிட்டு மிகுதியாக நிகழ்கின்றன. இவற்றால் பொது மக்களின் அல்லது இலக்கியச் சுவைஞர்களின் இலக்கியச் சுவைத்திறம் வளருகிறதா இல்லையா என ஆராய்க.

1968

1. "எம்மொழி இலக்கியத்திலும் செய்யுளே உரைநடைக்கு முற்போந்திருக்க வேண்டும்" என்னும் கொள்கையைத் தமிழிலக்கியங்கொண்டு விளக்கி முடிவு கட்டுக.

2. "We see how impossible it is to consider Rhythm or metre, as though it were purely an affair of the sensory aspect of syllables and could be dissociated from their sense and from the emotional effects," என்னும் திறனாய்வுக் கூற்றை ஆராய்ந்து, சிலப்பதிகாரத்திலிருந்து எடுத்துக் காட்டி விளக்குக.

3. "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்' பாடல்சான்ற புலனெறி வழக்கம்," என்னும் இலக்கிய மரபை விளக்கி, அது பின்பற்றப் பெற்றிருப்பதைக் குறுந்தொகை அல்லது பெரிய புராணம் கொண்டு நிறுவுக.

4. "அறிவு, உணர்ச்சி என்ற இரண்டனுள்ளும் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே கவிதை பிறக்கிறது. உணர்ச்சி, ஆராய்ச்சிக்குட்படுவதில்லை. அதனை

அனுபவித்தே காணலாம்," என்பார் கூற்றை இலக்கியச் சுவைஞன் கண்ணோட்டத்தில் ஆராய்க.

5. "இலக்கியம் வாழ்க்கை நிகழ்ச்சிகளை எதிர் எடுத்துக்காட்டும் கண்ணாடியாக விளங்குகிறது," என்பதை ஆராய்ந்து மதிப்பிடுக.

6. When constructing his plots and forging the diction the poet must do his best to visualise the actual scenes. In this way, seeing everything most vividly, as if he were an actual spectator of events, he will be able to devise what is appropriate and be least likely to overlook incongruities," என்னும் பொருளமைப்புக் கொள்கையை ஏதேனும் ஒரு தற்காலக் காப்பியம் கொண்டு விளக்குக.

7. "இலக்கிய ஆராய்ச்சிக்குத் தூண்களாக உள்ளவை இரண்டு. ஒன்று இலக்கிய மதிப்பீட்டு அறிவு; மற்றொன்று உணர்த்தும் திறன். இவற்றை அறிந்தவரே இலக்கிய ஆராய்ச்சிக்குரியவராவர்," என்னும் கூற்றைப் பற்றிய நும் கருத்தை எடுத்துக்காட்டி நிறுவுக.

8. தற்காலத்தில் பெருவரவிற்றாக வழங்கிவரும் சிறு கதை, புதினத்தை (novel) இலக்கியத்திலிருந்து ஓட்டி விடுமா என்னும் ஐயப்பாடு பற்றிய நும் கருத்தைச் சான்று கள் தந்து ஆராய்க.

1969

1. "இலக்கணம் என்பது இலக்கியத்தை வரை யறுத்துக் கட்டுப்படுத்துவது அன்று; இலக்கியம் இவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் கூறுவதே இலக்கணமாம்." இதன் நுட்பத்தை விரித்துக்காட்டி இக் கொள்கை தமிழ் இலக்கண இலக்கியங்கட்கு எந்த அளவு பொருந்தும் என்பதைச் சான்றுகளுடன் ஆராய்க.

2. ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் கூறும் நல்ல ஆய்வாளனுக்குரிய முத்தகுதிகளையும் (Qualification of a good critic) விளக்கி, அத்தகுதிகள் தமிழ் உரையாசிரியர்கள்பால் அமைந்துள்ளனவா என்பதை அடியார்க்கு நல்லார் அல்லது பரிமேலழகர் வழிநின்று காட்டுக.

3. இலக்கியம், ஒழுக்கமும் அறமும் உணர்த்தி, வாழ்க்கையைப் பண்படுத்துவதற்காகவே அமைவது என்பார் கருத்தின் வன்மை மென்மைகளைத் தமிழ் நூல்களின் துணை கொண்டு ஆராய்க.

4. நடை (Style) என்றால் என்ன? நடையின் ஆக்கக் கூறுகளைச் சுட்டுவதுடன், பல வண்ண நடைகளையும் (Varieties of Style) சான்றுகள் தந்து விளக்குக.

5. கற்பனைக்கும் (Imagination), புனை கற்பனைக்கும் (Fancy) உள்ள வேறுபாடுகளைத் தமிழ்க் கவிதைகளின் மூலம் விளக்கும் போக்கில் புனை கற்பனைகளைக் கற்பனைகளாகவும், கற்பனைகளைப் புனை கற்பனைகளாகவும் சுவைஞன் கொள்ளவும்கூடும் என்பதையும் எடுத்துக் காட்டுக.

6. ஒவ்வொரு புலவரும் ஒரே பொருளை அல்லது நிகழ்ச்சியைப் பாடினும், பாட்டு வெவ்வேறு வகையாய் அமையக் காண்கிறோம்- இக்கருத்தினைச் சான்றுகள் மூலம் உறுதிப் படுத்தி, இவ்வாறு அமைவதற்கு இலக்கியக் கொள்கையாளர் காட்டும் காரணங்களைப் புலப்படுத்துக.

7. "Even a good dramatist's work will tend to be coarser than that of a novelist of equal ability. He has to make his effect more quickly and in a more obvious way" - இவ்வாறு ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் கூறுவதின் காரணங்களை விளக்கி, நாடகங்களில் அமைய வேண்டிய பல்வேறு சிறப்பியல்புகளைத் தெளிவுபடுத்துக.

8. "இக்காலத்துச் சிறுகதை எழுத்தாளர் சிலர் பழங்காலத்தில் வாழ்ந்திருப்பின் தனிப்பாட்டுக்கள் பல பாடும் கவிஞர்களாக இருந்திருப்பர்"— இக்கருத்தினைத் தக்க சான்றுகளோடு ஆராய்க.

1970

1. பிளாட்டோவும் பெனிரிட்சும் பாட்டுக் கலையை வெறுத்தாலும் அக்கலையை மனிதனால் விடவே முடியாது - ஆராய்க.

2. பாட்டு, படிப்பவரின் அனுபவமாகும் முறையைத் தக்க சான்றுகள் தந்து விளக்குக.

3. அறிவிற் சிறந்தவர் என்பதால் கவிஞர்கள் பாக்கள் இயற்றுவதில்லை. ஆனால் ஒருவகை இயல்பு அல்லது திறன் அவர்களிடம் அமைந்திருப்பதால் அவர்கள் மிக்க ஆர்வமுடையவராய்ப் பாட்டுகள் பாடமுடிகிறது. (Poets do not compose poetry because they are wise; but because they have a certain nature or genius, which is capable of enthusiasm) - இக்கருத்தினை விளக்கி ஆராய்ந்து நிறுவுக.

4. கற்பனையை உணர்த்தும் சொல்லுக்கு ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் கூறும் அறுவகைப் பொருளையும் தமிழிலக்கியச் சான்றுகள் வழி விளக்குக.

5. ஒலிநயம் (Rhythm) எனத் திறனாய்வாளர் எதைக் குறிக்கின்றனர்? அதன்வகைகள் யாப்பினுள் அடங்குமா என்றும், எதுகை மோனை ஒலிநயம் ஆகுமா என்றும் ஆராய்ந்து காட்டுக.

6. நீதி நூல்கள் உள்ளத்தின் உணர்ச்சியை எழுப்பி ஒன்றுபடுத்தும் ஆற்றல் இல்லாதவை-இக்கருத்தின்

வன்மை மென்மைகளைப் பதினெண்கீழ்க்கணக்கு நீதி நூல்கள் வழி நின்று ஆராய்க.

7. தமிழ் உரையாசிரியர்களின் இலக்கிய ஆய்வு முறைகளை, மேனாட்டு முறைகளோடு எந்த அளவு ஒப்பிட இயலும் - ஆராய்க.

8. "நாவல், பொழுதுபோக்காக எழுதப்படும் வெறுங்கதையே; காப்பியம் போலப் போற்றிப் படிக்கத் தக்கதன்று" - ஆராய்க.

1971

1. இயற்கையை இறந்த ஆற்றல்கள் (Supernatural elements) இலக்கியச் சுவையைக் குறைக்கமாட்டா என்பதற்கு மேனாட்டார் கூறும் காரணங்களை விளக்கி அவற்றை மணிமேகலையிலோ சிலம்பிலோ இணைத்து ஆய்ந்து காட்டுக.

2. இலக்கியத் தோற்றத்துக்குரிய காரணங்களாகத் திறனாய்வாளர் கண்டுள்ள துடிப்புகள் (Impulses) யாவை? அவற்றுள் ஒன்றைத் தற்காலத் தமிழிலக்கியத்தின் துணைகொண்டு விளக்குக.

3. ஒத்துணர்வு(Sympathetic feeling) என்றால் என்ன? இது புலவர்பால் அமைந்துள்ள பாங்கினைத் தமிழிலக்கிய வழி விளக்குக.

4. தண்டி, மாறன் ஆகிய நூல்களுள் சொல்லப் படும் சொல்லணிகள் முற்றிலும் வேண்டாதவை என்பார் கூற்றினை ஆராய்ந்து அது பற்றி நும் கருத்தைத் தக்க காரணங்களுடன் நிறுவுக.

5. Hazlitt thought that the progress of science and of even general culture was gradually narrowing the limits of

imagination; knowledge was threatening to clip the wings of poetry- இக்கூற்றினை ஆய்ந்து தமிழிலுள்ள தற்காலக் கவிதையின் நிலை என்ன என்பதை விளக்குக.

6. சமயத் தொடர்புள்ள இலக்கியங்களைச் சுவைப்பது எளிமை இல்லை என்பார் கூற்றுக்குரிய காரணங்களை ஆய்ந்து அது எந்த அளவு ஏற்றுக் கொள்ளத்தக்கது எனக்காட்டுக.

7. "The drama is the highest and most difficult kind of poetry. It calls into exercise a greater range of poetic power than any other, for it combines what is highest and most characteristic in both the epic and lyric." - இக்கருத்தை விளக்கித் தமிழ் மொழியில் நல்ல நாடக நூல்கள் பல தோன்றாமைக்குரிய காரணங்களை ஆராய்க.

8. "பாட்டில் சொற்கள் வரையறுத்த பொருளை விட்டு நெகிழ்ந்து குறிப்புப் பொருளையும் தழுவல் பொருளையும் தருகின்றன" - இதனைத் தக்க சான்றுகள் மூலம் விளக்கி, இவ்வாறு உணர்த்துதற்குக் காரணங்கள் என்ன என்பதை எடுத்துக்காட்டுக.

1972

1. ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் கூறும் நல்ல ஆய்வாளனுக்குரிய முத்தகுதிகளை (Qualification of a good critic) விளக்கும் நோக்கில், படைக்கும் திறனும், ஆளும் திறனும் ஒன்று என ஆய்ந்து அந்த ஆய்வுத் தகுதிகள் தமிழுரையாசிரியர்கள் பால் அமைந்துள்ள பாங்கினை எடுத்துக்காட்டுக,

2. நடை (style) என்றால் என்ன? நடையின் ஆக்கக் கூறுகளை (Elements) எடுத்துக் காட்டிப் பலவகை நடைகளையும் (Varieties of Style) சான்றுகள் தந்து விளக்குக.

3. கற்பனை என்றால் என்ன? இதன் வகைகளைத் தற்காலத் தமிழ்க்கவிதைகள் வழி விளக்குக.

4. இன்ப உணர்ச்சியைப் பாடுவதைவிடத் துன்ப உணர்ச்சியைப் புலவர்கள் பாடுவதின் உட்கிடக்கை பற்றித் திறனாய்வாளர் கூறுவது என்ன? சங்கப் பனுவல்கள் எவ்வகையுணர்ச்சியைப் பெரிதும் போற்று கின்றன என்பதைச் சான்றுகள் தந்து விளக்குக.

5. "The Literature which really counts is the literature which is made not out of other literature, but out of life; and for a living literature no models will suffice (Hudson)." என்னும் கொள்கையின் துணைகொண்டு அந்தாதி, கலம்பகம், கோவை ஆகிய நூல்வகைகளை மதிப்பிடுக.

6. ஒலிநயம் (Rhythm) எனத் திறனாய்வாளர் எதைக் குறிக்கின்றனர்? அதன் வகைகள் யாப்பினுள் அடங்குமா என்றும் எதுகை மோனை ஒலிநயமாகுமா என்றும் ஆய்ந்து முடிவு தருக.

7. இலக்கிய நாடகம், மேடை நாடகம், வானொலி நாடகம், திரைப்பட நாடகம் ஆகியவற்றின் குறிக்கோளும் கட்டுக்கோப்பும் அமைந்துள்ள பாங்கினை ஒப்பிட்டு ஆய்க.

8. தமிழில் சிறுகதை நூல்கள் இன்னும் இளமைப் பருவத்தே உள்ளன என்பார் கூற்றினை ஆராய்க.

1973

1. கவிதைக் கலையின் தோற்றம் வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றி ஒரு திறனாய்வுக் கட்டுரை வரைக.

2. இலக்கியத் திறனாய்வுக்கு அயலக அல்லது தமிழக அறிஞர்களின் தொண்டை நன்கு மதிப்பிட்டு ஓர் ஆய்வுக் கட்டுரை வரைக.

3. தமிழிலக்கியத் திறனாய்வுக்குத் தமிழிலக்கிய வரலாறு எவ்வாறு துணைபுரிகிறது என்பதைச் சான்றுகளுடன் விளக்குக.

4. உவமைகள், உருவகங்கள் வாயிலாகப் படைப்பாளியின் உள்ளம் புலனாகுமாற்றைச் சான்றுகளுடன் விளக்குக.

5. அடைத் தொடர்களின் இலக்கியப் பண்புகளை ஆராய்ந்து பாராட்டுக.

6. மரபிலக்கியத்திற்கும் மறுமலர்ச்சி இலக்கியத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தெளிவாக ஆராய்ந்து விளக்குக.

7. மிக அண்மைக் காலத்துத் தமிழிலக்கியப் படைப்புகளில் காணப்படும் நோக்குகளும் போக்குகளும் யாவை?

8. இன்றைய படைப்பிலக்கியங்கள் மொழியியல் ஆய்வுக்குத் துணைபுரியுமாறு எங்ஙனம் உள என்பதை நன்கு விளக்குக.

(Old Regulations)
(Also Common to New Regulations)
1974

1. இன்ப ஒழுக்கங்கட்குரிய குறிஞ்சி, முல்லை முதலிய களங்களைச் சொல்லோவியமாகப் படைத்த அரங்கில் களவு, கற்பு முதலிய ஒழுக்கங்கள் மேற்கொண்ட தலைவன் தலைவி முதலிய உறுப்பினர்களைக் கொண்டு நிறுத்தி அவர்களிடையே ஒருவரோடொருவர் வினவும் செப்புமாகச் சொல்லாட்டம் நிகழ்த்த விட்டு விட்டு அவர்தம்முள்ளே கரந்துவிடும் சங்கப் புலவர்களின்

நாடகத் திறமையினை அவர்தம் பாடல்கள் கொண்டு புலப்படுத்துக.

2. ஒத்துணர்வு (Sympathy) ஒட்டஉணர்தல் (Empathy) இவை இரண்டினை இன்னதென விளக்குக. கவிஞர்கள்பால் இக்கூறுகள் அமைந்திருக்கும் பாங்கினைத் தமிழிலக்கிய வழி நின்று விளக்குக. கவிதை நுகர்ச்சிக்கும் இக்கூறுகள் இன்றியமையாதவை என்பதனையும் புலப்படுத்துக.

